பக்கங்கள்: இருபத்து நான்கு + 8

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 08 சனிக்கிழமை (24.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 028




கிறிஸ்மஸ் வியாபாரம் சூடு




வேடிக்கை பார்க்கிறது மத்திய அரசு




பதவியைப் பறிக்கச் சதி

## இந்திய மீனவர் அத்துமீறல் தொடர்ந்தால் துணைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம்

### முல்லைத்தீவு மீனவர்கள் எச்சரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.24

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்த அத்துமீறல் தொடர்ந்தால் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த அத்துமீறல் உடனடியாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவுக் கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாகவும் இதனைக் கட்டுப்

பக் 04

## ஐ.தே.க. தலைவர் தேர்தலில் மோசடி

### சஜித் பரபரப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைத் தெரிவுசெய்வதற்காக இடம்பெற்ற தேர்தலில் பெரும் ஊழல், மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன என்றும், ரணில் விக்கிரமசிங்க தரப்பு, செயற்குழு உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுத்தே வாக்குகளைப் பெற்றதாகத் தகவல்

பக் 23

## தமிழ்க் கைதிகளுடன் சுமந்திரன் சந்திப்பு


கொழும்பு, டிசெ.24

மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்காக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று அங்கு விஜயம் செய்தார்.

தமிழ்க் கைதிகளின் நிலைமைகளைக் கேட்டறிந்த சுமந்திரன், அவர்களின் விடுதலை தொடர்பில் கூட்டமைப்பு முன்னெடுக்கும் காத்திரமான நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். தாங்கள் சிறைச் சாலைக்குள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தமிழ்க் கைதிகள் சுமந்திரனிடம் விவரமாக எடுத்துரைத்துள்ளனர் எனத் தெரியவருகிறது. (ஒ-சி)

# பேச்சு மேசையில் இருந்து வெளியேறி உரிமைக்காக கூட்டமைப்புப் போராடட்டும்

### அதற்கான காலம் வந்துவிட்டது என்கிறார் விக்கிரமபாகு இடதுசாரிகளின் ஆதரவு அதற்கு உண்டு எனவும் தெரிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு மேடையிலிருந்து உடன் வெளியேறித் தமிழ் மக்களின் உரிமைக்காகத் தேசிய, சர்வதேச ரீதியில் பெரும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்குத் தயாராக வேண்டும்.

இடதுசாரிகள், கூட்டமைப்பின் எந்தவொரு முடிவுக் கும் பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராகவே உள்ளனர். உரிமைகளுக்காகப் போராடும் இளைஞர் அமைப்புகளை ஒன்றுதிரட்டும் நடவடிக்கையையும் கூட்டமைப்பு, உடன் ஆரம்பிக்க வேண்டும்.

- இவ்வாறு நவசமசமாஜக் கட்சி வலியுறுத்தி உள்ளது.

பக் 23

மயானங்களைப் புனரமைக்கும் விவகாரம்

## வலி.வடக்கு பிரதேச சபைக் கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு - ஈ.பி.டி.பி. முறுகல்

யாழ்ப்பாணம், டிசெ.24

வலி.வடக்கில் உள்ள மயானங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கோரிக்கை விடும் வகையில் கடிதம் தருமாறு, சபைத் தலைவரிடம் கேட்டனர் எதிரணியினரான ஈ.பி.டி.பியினர். அவர்களின் அந்தக் கோரிக்கையை நிராகரித்து புறந்தள்ளிவிட்டனர் ஆளும்கட்சி

பக் 04

## பலாலி ஆசிரியர் கலாசாலை வளாகத்தை கையகப்படுத்துகிறது பாதுகாப்பு அமைச்சு

அச்சுவேலி, டிசெ.24

பலாலி ஆசிரியர் கலாசாலைக் காணியும் கட்டடத் தொகுதியும் உள்ளடங்கிய வளாகம் கல்வி அமைச்சினால் பாதுகாப்பு அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் கல்வி அமைச்சின் பொறுப்பில் இருந்து வந்த 54 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட வளாகத்தைப் பாதுகாப்புத் தரப்பினர் எதிர்காலத்தில் பயன்படுத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பலாலி இராணுவமுகாம் மற்றும் விமான நிலையத்துக்குத் தெற்குப் புறமாகவும் சங்கானை வீதிக்கு வடக்குப் புறமாகவும் ஆசிரியர் பயிற்சிக்கான சகல கட்டுமானங்களுடன் 1950 ஆம் ஆண்டில் இருந்து பலாலி ஆசிரிய கலாசாலை செயற்பட்டுவந்தது.

விசேட ஆசிரியர் பயிற்சிக்கான கலாசாலையாக இது விளங்கிவந்தது. ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், விவசாயம் மற்றும் தொழில்நுட்பப் பாடங்களைக்

பக் 23

## தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பினரை அழைத்தே அரசு களைத்து விட்டதாம்

கொழும்பு, டிசெ.24

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்குமாறு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்து விடுத்தே நாம் சோர்வடைந்து விட்டோம் - என்று சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர்களின் ஆலோசனைக்கமையவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின் றது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றத் தெரிவுக்குழு, கூட்டமைப்பு அங்கம் வகிக்கும் விவகாரம் தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பக் 23

## வவுனியாவில் குண்டு வெடிப்பு பாலம் கட்ட வந்த 6 பேர் காயம்

### ஒருவரின் நிலை தொடர்ந்தும் மோசம்

வவுனியா,டிசெ.24

வவுனியா - புளியங்குளம் - மதியாமடுவில் சின்னப் பரந்தன் ஓயாவுக்கு அருகில் நேற்றுமுன்தினம் குண்டு ஒன்று வெடித்தது. சம்பவத்தில் 6 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். படுகாயமடைந்த 3 பேர் வவுனியாவைத்தியசாலையில்

பக் 04

## நீர்வேலி இரட்டைக் கொலை சந்தேகநபர் வசமாக சிக்கினார்

யாழ்ப்பாணம், டிசெ.24

கடந்த 8ஆம் திகதி நீர்வேலிப் பகுதியில் கோடரி வெட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே மரணமான தம்பதியரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்தின் பின்னர் கடந்த இருவாரங்களாகப் பொலிஸாருக்கு ''டிமிக்கி'' கொடுத்து வந்த சந்தேகநபர் கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் நீர்வேலியில் உள்ள வீடொன்றில் வைத்து இரவு 10 மணியளவில் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

பக் 23

## பான் கீ-மூனுக்கு 'எக்கச்சக்கமான' பணிகள் நல்லிணக்க அறிக்கையை ஆராய நேரம் ஏது?

### இப்படிக் கூறுகிறார் பாலித கொஹன்ன

கொழும்பு, டிசெ.24

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதை விட முக்கியமான வேலைகள் ஐக்கிய நாடுகள் சபைக்கு இருக்கின்றன. முதலில் அந்தக் கடமைகளை முடித்துவிட்டு அவர்கள் இதனை ஆராயட்டும்.

- இவ்வாறு நேற்று சூடாகப் பதிலளித்தார் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி கலாநிதி பாலித கொஹன்ன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஐ.நா. சபை ஆராய்கிறதா? முழுமையான ஆராய்வுக்குப் பின்னர் அது பற்றி இலங்கை அரசுடன் பேசுவதற்கு எதுவும் அவர்கள் தரப்பிலிருந்து சமிக்ஞை வழங்கப்பட்டுள்ளதா என்று செய்தியாளர்களிர் ஒருவர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார் கொஹன்ன.

அவர் மேலும் கூறியதாவது:-

வடகொரியாவில் ஒரு தலைவர் இறந்திருக்கிறார். அந்தத் தீபகற்பம்

பக் 23

உதயன்

தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933

தொலைநகல்

செய்தி : 021-5678844

விளம்பரம் : 021-5679731

செய்தி/படங்கள்:

021-5679933

021-5679944

விளம்பரம்: 021-5671111

விநியோகம்: 021-5677222

மின் அஞ்சல்

செய்தி : news@uthayan.com

கருத்து: comments@uthayan.com

விளம்பரம்:

advt@uthayan.com

இணைய முகவரி:

www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய காலநிலை நிலவும் சாத்தியமுள்ளது.

# இன்றும் மழை பெய்யும் சாத்தியம்

நாடுமுழுவதும் இன்றும் பரவலாக கடும் மழை பெய்வதற்கான சாத்தியம் உண்டு என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அநேக இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நேற்றுக் காலை 9.30 மணிக்கு வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் இன்று காலை 9.30 மணிவரை இந்தக் காலநிலை தொடரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா, மத்திய மற்றும் தென் மாகாணங்களிலேயே மேற்படி காலநிலை நிலவும் எனவும், கடற்கரைப் பிரதேசங்களில் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் எனவும் அது சில வேளைகளில் 60 தொடக்கம் 70 கிலோ மீற்றர் வரையில் அதிகரிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-15)

# 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பிரபல பாடசாலைகளின் வெட்டுப்புள்ளி

கொழும்பு, டிசெ. 24

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் மூலம் பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகளை கல்வி அமைச்சு நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளது. தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளி விவரம் பின்வருமாறு:

**ஆண்கள் பாடசாலை**

* இந்துக் கல்லூரி, யாழ்பாணம்-158
* ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை - 149
* றோயல் கல்லுரி, கொழும்பு - 187
* டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி, கொழும்பு - 175
* ஸாஹிரா கல்லூரி, கல்முனை -155
* சென்.மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு-153
* ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்து மத்திய மகா வித்தியாலயம், திருகோணமலை -152

**பெண்கள் பாடசாலை**

* வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை, யாழ்ப்பாணம் -156
* முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-171
* இராமநாதன் இந்துக் கல்லூரி, கொழும்பு - 164
* பதியூதின் முஸ்லிம் மகளிர் கல்லூரி, கண்டி - 164
* வின்சன்ட் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு - 163
* மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை- 161
* ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை - 151

**கலவன் பாடசாலை**

* கொக்குவில் இந்துக் கல்லூரி , கொக்குவில்-154
* ஹைலன்ட்ஸ் மத்திய மகா வித்தியாலயம், ஹட்டன் - 169
* ஸாஹிரா முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், மாவனெல்லை-165
* அல்-மன்ஹாஜ் முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், ஹப்புகஸ்தலாவ- 159
* பதுரியா முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், மாவனெல்லை-158
* மதீனா முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், மடவளை -157
* கேம்பிரிட்ஜ் தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை -157
* கெக்குனகொல்ல முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், கெக்குனகொல்ல-154
* புனித திரித்துவ தமிழ் மகா வித்தியாலயம், நுவரெலியா -151.

# மீசாலையில் பஸ் விபத்து; இ.போ.ச சாரதிக்கு ரூ.10 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி,டிசெ.24

மீசாலைப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7.45 மணிக்கு இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பாக இ.போ.ச சாரதிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பஸ் வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன் மோதியதில் மின் கம்பம் முறிந்து விட்டது. அதை அடுத்து சாரதியை பொலிஸார் பரிசோதித்தபோது அவர் மது போதையில் இருந்தது தெரியவந்தது.

மது போதையில் ஆபத்தான முறையில் பஸ்ஸைச் செலுத்திய தாகச் குற்றஞ்சாட்டி சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சாரதிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தவறின் ஆறு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ஒ-207)

# வித்தகபுரம், மாவிட்டபுரம் பகுதிகளில் இரு கிராம செயலகங்கள் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.24

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இரண்டு கிராம செயலகங்கள் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேற்படி இரு கிராம செயலகங்களையும் யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் திறந்துவைத்தார்.

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வித்தகபுரம், மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளிலேயே இந்தக் கிராம செயலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிராம சேவையாளர் அலுவலகம், சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகம், குடும்பநல உத்தியோகத்தர் அலுவலகம், விவசாய அதிகாரி அலுவலகம் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்தக் கிராம செயலகங்கள் அமைந்துள்ளன. இந்த இரு செயலகங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் வடக்கின் துரிதமீட்சித் திட்டத்தில் தலா 1.7 மில்லியன் ரூபா நிதியிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த மாதம் 29 ஆம் திகதி இளவாலை, பன்னாலையில் கிராம செயலகங்கள் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-15)

# லலித்குமார், குகன் தொடர்பில் செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 24

மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமை தினமாக கடந்த 10 ஆம் திகதி லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் யாழில் வைத்துக் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முறைப்பாடு செய்யும் தருணத்தில் குகனின் மனைவி மற்றும் பிள்ளைகளும் இணைந்து கொண்டிருந்ததாக மக்கள் போராட்டக் இயக்க உறுப்பினர் உந்துல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

# இடம்பெயர்ந்தோர் தேவைகளை கண்டறிய ஆறு விசேட செயலணிக் குழுக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 24

இடம்பெயர்ந்த நிலையில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் வட பகுதி மக்களது நாளாந்தத் தேவைகளைக் கண்டறிந்து அறிக்கையிடுவதற்காக ஆறு விசேட செயலணிக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

வட பகுதியில் நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வரும் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரின் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலே இக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

கடந்த 1980ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களது நாளாந்த தேவைகளை அறிக்கையிடுவதற்கே இந்த ஆறு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் மீள்குடியேற்றம் அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கான ஜனாதிபதிசெயலணியின் வடக்குமாகாண செயலாளர் எஸ்.வி.திவாரட்ன, வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலர் திருமதி ஆர்.விஜயலக்சுமி மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (எ-14)

# நடைபாதைக் கடைகளை அகற்றினர் பொலிஸார்



யாழ்.நகரப்பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறான வகையில் நடைபாதை ஓரங்களில் வைத்து விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகளைப் பொலிஸார் நேற்று அப்புறப்படுத்தினார்கள்.

கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகியவற்றில் புடைவை விற்பனை நிலையங்களுக்கு முன்பாக நடைபாதைகளில் வைத்து விற்கப்பட்ட உடுபுடைவைகளைத் திடீரென அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் தமது வாகனங்களில் அள்ளிச் சென்றனர்.

இதனை அடுத்து நடைபாதைகளில் வைக்கப்பட்டிருந்த உடுபுடைவைகள் மற்றும் விளம்பரத் தட்டிகளை புடைவை நிலைய உரிமையாளர்கள் அவசர அவசரமாக எடுத்து உள்ளே வைத்தனர்.

போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் இருந்த கடைகளே இவ்வாறு பொலிஸாரால் அகற்றப்பட்டன. (த-26)

# நிகழ்வுகள் இன்று

**பொதுச் சபைக் கூட்டம்**

காங்கேசன்துறை உதய சூரியன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுச் சபைக்கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கு கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் வ.முருகேசு தலைமையில் நடைபெறவுள்ளது. (த-313)

**ஒன்றுகூடல்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல் முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-313)

**வருடாந்த கலைவிழா**

கைதடி கிழக்கு கலைநகர் வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் பிற்பகல் ஒரு மணிக்கு வளர்மதி சனசமூக நிலைய கலையரங்கில் முன்பள்ளி பெற்றோர் சங்கத் தலைவர் ச.ஜனிதா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் லயன் ப.செல்லத்துரை கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-288)

**கலாசார விழா**

பளைப் பிரதேச செயலகத்தின் கலாசார விழா பி.ப 2.30 மணிக்கு பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (ஒ-207)

**நெற் செய்கையாளர்களுக்கான கூட்டம்**

தென்மராச்சி தெற்கு தனங்கிளப்பு பிரிவுக்குட்பட்ட நெற் செய்கையாளர் களுக்கான கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு தனங்கிளப்பு சந்தியில் நடைபெறவுள்ளது. (ஒ-207)

**அதிபர்களுக்கான கூட்டம்**

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் நல்லூர் கோட்ட 8 பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நண்பகல் 12 மணிக்கு யாழ்.சென்பெனடிக் வித்தியாலயத்தில் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான கல்வித்திட்டமிடல் தொடர்பாக ஆலோசனை செய்யப்படவுள்ளதால் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-323)

**முன்பள்ளி சிறாரின் கலை விழா**

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளி சிறார்களின் கலை விழா பி.ப 1.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் கு. சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

# உயிலங்குளம் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம்

அக்கராயன், டிசெ.24

துணுக்காய் உயிலங்குள அணைக்கட்டு எந்த நேரத்திலும் உடைப்பெடுக்கும் அபாய நிலையில் உள்ளது.

அக்கராயன் துணுக்காய் வீதியில் உயிலங்குளம் அணைக்கட்டு வீதிவழியாகப் போக்குவரத்து இடம்பெறுகிறது.

போக்குவரத்து அணைக்கட்டின் கீழாகத்தான் இடம்பெற வேண்டும். வழமைக்கு மாறாக அணைக்கட்டின் மேலாக இடம்பெறுவதால் அணைக்கட்டு சேதமடைந்து உடைப்பெடுக்கும் ஆபத்தில் உள்ளது.

அணைக்கட்டின் நிலவரம் தொடர்பாக கிராம மக்களின் பிரதிநிதிகளால் பிரதேச செயலக கூட்டத்தில் சுட்டிக்காட்டிய போதிலும் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை.

குளத்தில் நீர்நிரம்பியுள்ளதால் போக்குவரத்தின் போது விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (க-410)

# இந்திய மருத்துவர் குழுவால் இலவச மருத்துவ முகாம்

கிளிநொச்சி, டிசெ.24

கிளிநொச்சியில் நாளைய இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்திய மருத்துவர் குழுவினால் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள நாளைய அமைப்பின் அலுவலகத்தில் கடந்த 19 ஆம் திகதி இந்த மருத்துவ முகாம் நடைபெற்றுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாமின் மூலமாகப் பார்வை குறைந்த 130 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும், கால்களை இழந்த 61 பேருக்குச் செயற்கைக் கால்களும், கைகளை இழந்த 15 பேருக்குச் செயற்கைக் கைகளும் வழங்கப்பட்டுள்ளதுடன் அதிகமானவர்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியன் றோட்டறிக் கழக மருத்துவர் குழு மூலமாக நடத்தப்பட்ட இந்த மருத்துவ முகாமில் மருத்துவர் மொகமட் சபறி தலைமையிலான 11 மருத்துவர்கள் கலந்து கொண்டு தமது சேவையை வழங்கினர். (க-6)

# நவீன அரிசி ஆலை

வவுனியா வடக்கில் அரிசி ஆலைக்குரிய இயந்திரங்களை ஐ.எல்.ஓ. நிறுவனம் வழங்கியுள்ளது.சுமார் 11 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த நவீன வசதிகளைக் கொண்ட இயந்திரத் தொகுதிகள் அரிசி ஆலை அமைப்பதற்கென வவுனியா வடக்கு ப.நோ.கூ. சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. (க-435)

# அழிவடைந்த நெற்பயிர்களுக்கு நட்டஈடு கோரும் விவசாயிகள்

அக்கராயன், டிசெ.24

அக்கராயன் குளத்திலிருந்து வழமைக்கு மாறாகக் அதிகளவில் நீர் வெளியேறியமையால் நெற்பயிர் அழிவு களை எதிர்கொண்ட விவசாயி கள் தமக்கு இழப்பீடு வழங்கு மாறு வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

அக்கராயன் குள வான் கட்டுப் பகுதியில் ஏற்பட்ட கட்டுமானத் தவறுகள் காரணமாக அதிகளவு நீர் சமாதானபுரம் வயல்வெளிகளில் பாய்ந்து கொண்டிருப்பதன் காரணமாக 250 ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

கடந்த கால போகத்தில் ஒரு மாத காலத்துக்கும் மேலாகத் தொடர் மழை பெய்தபோதும் மூழ்காத வயல் நிலங்கள் ஒரிரு நாள்கள் பெய்த மழையால் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளன.

சமாதானபுரம் தொடக்கம் ஸ்கந்தபுரம் வரையான வயல் நிலங்கள் வழமைக்கு மாறாக அதிகளவில் அழிவடைந்துள்ளன.

குளத்தின் வான் பகுதியில் புனரமைப்பின் போது பயன்படுத்தப்பட்ட கிரவல் மண் அக்கராயன் ஆற்றில் நிரம்பியுள்ளமையால் வான் வெள்ளம் ஆற்றின் வழியாகப் பாயாமல் வயல் நிலங்கள் ஊடாகப் பாய்கிறது.

நெற் பயிர் அழிவுகளுக்கு இழப்பீடு வழங்க அரச அதிபர், நீர்ப்பாசன பொறியலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற் றும் விவசாய உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-410)

# ஓட்டோக்களை உடன் பதியுமாறு துணுக்காய் பிரதேச சபை அறிவிப்பு

## அவற்றுக்கு தரிப்பிட வசதி ஏற்பாடு

துணுக்காய், டிசெ.24

துணுக்காய்ப் பிரதேச சபையினர் ஓட்டோக்களைப் பதிவு செய்வதோடு அவற்றுக்கான தரிப்பிட வசதிகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

துணுக்காய் மல்லாவிப் பிரதேசத்தில் 30 இற்கும் மேற்பட்ட ஓட்டோக்கள் சேவையிலீடுபட்டு வருகின்றன.

சகல ஓட்டோக்களும் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற சங்கத்தின் தீர்மானத்துக்கமைவாகக் கடந்த சில வாரங்களாக உரிமையாளர் துணுக்காய்ப் பிரதேச சபையில் பதிவுகளைமேற்கொண்டு வந்தனர்.

பிரதேச சபையில் ஒட்டப்படும் ஸ்ரிக்கர்களுக்கு 300 ரூபாவும், மாதாந்தக் கட்டணமாக 100 ரூபாவும் அறவிடப்பட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன்துணுக்காய்பஸ் நிலையம், கல்விளான், மல்லாவி பழைய பஸ்நிலையம், அனிஞ்சியன்குளம் சந்தி, வைத்தியசாலைப் பகுதிகள் ஆகிய இடங்களில் ஓட்டோக்களுக்கான தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் பதிவுகளை மேற்கொள்ளவிருக்கும் ஓட்டோக்களுக்கும் தரிப்பிட வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுமெனப் பிரதேசசபையின் வருமான மேற்பார்வையாளர் எஸ். கிருபாகரன் தெரிவித்தார். (க-415)

# கல்லூரியாக பெயர் மாற்றம்

கிளிநொச்சி, டிசெ.24

கிளிநொச்சி முருகானந்த மகா வித்தியாலயம் கடந்த ஒக்ரோபர் 25 ஆம் திகதி முதல் கிளிநொச்சி முருகானந்தக் கல்லூரி எனப் பெயர்மாற்றப் பட்டுள்ளது.

கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் கண்டாவளைக் கல்விக் கோட்டத்தின் ஒரேயொரு 1 ஏபி தரப்பாடசாலையான இந்தப்பாடசாலையில் முரசுமோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை, ஊரியான் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த ஆண்டு முற்பகுதியில் இந்தப் பாடசாலை இசுறு பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டமையால் அதன் ஆரம்பப் பிரிவு தனியான பாடசாலையாக முருகானந்த ஆரம்ப வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

துரித வளர்ச்சி பெற்றுவரும் இந்தப் பாடசாலையின் அதிபரான தில்லையம்பலம் வரதன் இந்த ஆண்டுக்கான சிறந்த அதிபர், ஆசிரியர்களுக்கான பிரதீபா பிரபா விருதைப் பெற்றவர். பெயர் மாற்றத்துக்கான அங்கீகாரத்தை வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-405)

# வெடியில் சிக்கும் கால்நடைகள்

முல்லைத்தீவு, டிசெ.24

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பயிர்களை அழித்து வரும் பன்றிகளுக்கு வைக்கப்பட்டுள்ள ஒருவகை வெடிபொருளால் ஏனைய கால்நடைகள் பாதிக்கப்பட்டு வருவதாக இவற்றின் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள விவசாய நிலங்களுக்குள் நுழையும் பன்றிகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இந்த நிலையில் பன்றிகளை அழிப்பதற்கென ஒருவகை வெடிபொருளை விவசாயிகள் தாமே தயாரித்து எல்லைப்புறங்களிலும், வரம்புகளிலும் வைக்கின்றனர். இந்த வெடிகளில் சிக்கிய பல பன்றிகள் இறந்துள்ளன. அதேவேளை ஆடு, மாடு, நாய் போன்ற கால்நடைகளும் இறக்கும் பரிதாபமான நிலையும் காணப்படுகின்றது. (க)

# குளப் புனரமைப்பில் அசமந்தம் அழிவடைந்தன நெல்வயல்கள்

கிளிநொச்சி, டிசெ.24

கிளிநொச்சி பூநகரி காரியம்பிட்டிக்குளம் உடைப்பெடுத்துள்ளதால் இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முப்பது ஏக்கர் நெற் செய்கை அழிவடைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி காரியம்பிட்டிக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படாமல் தாமதமடைந்துள்ளது. இந்த நிலையில் தற்போது பெய்து வரும் பருவ மழை காரணமாகக் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி குளம் உடைப்பெடுத்துள்ளது. இதனால் இக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த சுமார் முப்பது ஏக்கர் நெற்பயிர்களை வெள்ள நீர் அரித்துச் சென்றதாலும் நீரில் மூழ்கியும் அழிவடைந்துள்ளன. (க-6)

# புதிய அதிபர் நியமனம்

கிளிநொச்சி, டிசெ.24

கிளிநொச்சி பன்னங்கண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நாகராசா உதயகுமார் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி வட்டக்கச்சியைச் சேர்ந்த இவர் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவராவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் சிறப்புக் கலைப் பட்டதாரியான இவர் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவைப் பூர்த்தி செய்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி அதிபராகக் கடமைப் பொறுப்பை ஏற்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல் இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கியுள்ளார். (க-405)

# அழிவிலிருந்து மீளாத தகட்டு வைரவர் ஆலயம்

(நேற்றைய தொடர்ச்சி)

இங்கே நான் வைத்த தகட்டு வைரவர் உங்களைக் காப்பாற்றுவதுடன் சகல வளங்களையும் அளித்து மக்கள் நிறைந்த ஒரு கிராமமாகத் திகழ வைப்பார். கிரமமாக அனைத்து மக்களும் ஆனந்தமாக வாழ வழி செய்வார் என கூறி விட்டு சென்றார். அந்தத் தகட்டினால் உருவான ஆலயமான ''தகட்டு வைரவர்'' ஆலயம் பல வருட காலமாகவே அதற்கான கட்டட வசதிகள் இன்றிச் சீரழிந்து காணப்படுகிறது.

அதன் பின்னர் குருக்கள் கூறியவாறு குழந்தைகள் உட்படச் சகல வளங்களும் பெற்று மிகவும் சிறந்த கிராமமாக மிளிர்கிறது கற்சிலைமடுக் கிராமம். எங்களை எல்லாம் வாழ்வைத்த தகட்டு வைரவர் கோயிலை முருகுப்பிள்ளை என்பவர் இறந்ததும் அவரது மகனான செல்லக்குட்டி என அழைக்கப்படும் பரமநாதன் என்பவர் பூசைகளை மேற்கொண்டு வந்தார். ஆனால் அன்று தொட்டு இன்று வரையும் எம்மையெல்லாம் வாழவைத்த அந்த ஆலயம் பராமரிப்பின்றிச் சிறந்த கட்டடமின்றி மிகவும் கவலைதரக் கூடிய விதத்தில் உள்ளது. இப்போது ஒரு சிறு கொட்டகைக்குள்ளேயே பூசை நடக்கின்றது. பரமநாதன் என்பவரும் இறந்துவிட அவரது மனைவியான சின்னமணி அதனைச் செய்து வருகிறார்.

அத்துடன் அவரது மகனான ஐயாத்துரை (கெங்கன்) என்பவரும் உதவி செய்து வருகின்றார். ஆனால் இதற்கான மக்களின் பங்கு குறைவென்றே சொல்லலாம். அன்றைய கால கட்டத்தில் சுமார் 20 குடும்பங்களே இருந்தன. ஆனால் இப்போது 300 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இந்த நிலையில்கூட இவ்வாலயம் சிறப்புற அமைய எவரும் முன்வரவில்லை. மக்கள் யுத்தத்தால் சகலவற்றையும் இழந்து தாங்களே மீள முடியாத நிலையில் உள்ளனர்.



இந்த நிலையில் மக்கள் உதவ முடியாத நிலையிலுள்ளனர். எனவே கற்சிலைமடு என்ற பழம் பெரும் கிராமத்தையே உருவாக்கிய தகட்டு வைரவர் கோயிலைச் சிறப்பாக அமைத்து மேலும் மக்களைச் செழிப்புடன் வாழ வழி அமைக்கச் சமூக சேவை அமைச்சின் ஊடாக இந்த ஆலயத்துக்கு நிதி உதவி அளித்து மிகவும் சிறப்புடன் அமைக்க வழி செய்ய வேண்டும் என்பதே இங்குள்ள மக்களின் பெரு விருப்பமாக உள்ளது.

மேலும் இந்த ஆலயத்துக்கு இதுவரையிலும் எவ்வித நிதி உதவியோ அல்லது வேறு உதவிகளோ கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இராஜ் தனபால்

(முற்றும்)

# கசிப்பு உற்பத்தி

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தேவிபுரம், சுதந்திரபுரம் ஆகிய இடங்களில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் கொடிகட்டிப்பறக்கின்றது.

அண்மையில் மக்கள் மீள் குடியமர்ந்த இந்தப் பகுதியில் இவ்வாறு கசிப்பு உற்பத்தி அமோகமாக நடைபெறுவதால் அதை அருந்துவோர் தினமும் தகராறில் ஈடுபடுகின்றனர். இதனால் அப்பாவி மக்கள் அச்சத்தில் உள்ளனர். (க)

உதயன்
24 டிசெம்பர் 2011 சனிக்கிழமை

# முல்லைத்தீவில் தொழில் செய்வதற்கு வெளிமாவட்ட மீனவர்களுக்குத் தடை

முல்லைத்தீவு, டிசெ.24

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் தொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சிறிஸ்கந்தராஜா அருஸ் ஜெனிஸ் வேட் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கொக்கிளாய் முதல் நல்ல தண்ணீத் தொடுவாய் வரையான கடற்பகுதியில் இந் தப் பகுதிகளைச் சேர்ந்த சகல மக்களும் தொழில் செய்யக் கூடிய வகையிலான தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

முல்லைத்தீவுக் கடற் பகுதியில் கடற்றொழிலை மேற்கொள்வதற்கான நடைமுறைகளை வகுப் பது தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் முல்லைத் தீவு கொக்கிளாய் முதல் நல்ல தண்ணீத் தொடுவாய் வரையான கரையோரப் பகுதிகளில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த சகல மக்களும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடிய வகையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கரைவலைப்பாடுகளின் உரிமையாளர்கள் தவிர ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கடற்றொழிலை மேற்கொள்ள முடியாது.

சங்குத்தொழில், அட்டைத் தொழில் மற்றும் படகுகள் மூலமான தொழில்களுக்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் அதாவது 1984 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கரைவலைப்பாடுகளின் உரிமையாளர்களை அவ்வப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அலுவலர்கள் கடற்றொழில் சம்மேளனம் என்பன உறுதிப்படுத்துவதன் மூலம் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு அனுமதிகள் வழங்கப்படும். முல்லைத்தீவு கொக்கிளாய் ஆறு, நந்திக்கடல், சாலைக்கடல் போன்ற சிறுகடல்களில் வீச்சுத்தொழிலை இந்தப் பகுதியில் உள்ள அனைவரும் மேற்கொள்ள முடியும்.

மேற்படி கலந்துரையாடலில் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், பிரதேச செயலர் மற்றும் அரச அரச சார்பற்ற திணைக்களங்களின் அதிகாரிகள், இராணுவத்தினர், கடற்படையினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(க-6)

# பொலிஸ் குறிப்பு

பட்டப்பகலில் இளைஞரொருவர் கூரிய ஆயுதத்தால் சரமாரியாக வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார். மேலும் ஒருவர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

மீடியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எடப்பகாவில சந்தியில் நேற்றுப்பகல் இந்தக் கொடூரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுஜித் ரோஹண (வயது - 36) என்பவரே இவ்வாறு வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

***

அநுராதபுரம் விமானநிலைய வீதியில் உள்ள நீர்ப்பாசன பொறியியல் திணைக்களத்திற்கு டிப்பரில் எடுத்துவரப்பட்ட மணலுக்குள் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆர்.பி.பி. ரக தோட்டாக்கள் 02, பீ.பி. எம். ரக தோட்டாக்கள் 157 ஆகியவையே மீட்கப்பட்டுள்ளன. அநுராதபுரம் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

*** *** ***

பொலன்னறுவையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கார்- மோட்டார் சைக்கிள் என்பன ஒன்றுடன்ஒன்று மோதுண்டமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஜயலத் சனத் (வயது - 36) என்பவரே மேற்படி விபத்தில் உயிரிழந்தவராவார். (உ-சி)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இதுவரை 32 வாகன விபத்துகள்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்ட நாள் முதல் இதுவரை 32 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 300 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதிவேகம் மற்றும் கவனமின்றி வாகனம் செலுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதிவேக நெடுஞ்சாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடது புறமாகவே வாகனத்தை செலுத்த வேண்டும் எனவும், மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்லும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே வலப் பக்கத்தில் வாகனத்தை செலுத்த வேண்டுமெனவும் சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், பண்டிகை காலத்தில் மதுபோதையில் மற்றும் அதிவேகத்தில் இந்நெடுஞ் சாலையில் வாகனம் செலுத்துகின்ற சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஒன்றினூடாக நாளொன்றுக்கு ஆறாயிரம் வாகனங்கள் பயணம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனில் கொல்லப்பட்ட இலங்கையரின் குடும்பத்துக்கு உதவ சேகரித்த பணம் திருட்டு

பிரிட்டன், மேர்சிசைட் பகுதியில் கொலைசெய்யப்பட்ட இலங்கையரான 30 வயதுடைய மகேஸ் விக்ரமசிங்கவின் குடும்பத்தினருக்கு உதவவென சேகரிக்கப்பட்ட பணத்தொகை அடங்கிய பெட்டி உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இலங்கையர் பணிபுரிந்த 'ஸ்டேன்லி நியூஸ்' என்ற வர்த்தக நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பெட்டியே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் மனைவி மற்றும் அவருடைய இரு பிள்ளைகளுக்கு வழங்கவென இந்நிதி சேகரிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த பெட்டி உடைக்கப்பட்டு களவாடப்பட்டதன் பின் பிரிட்டன் பொலிஸார் 16 வயதுடைய இரு வெள்ளைக்காரர்களை சந்தேகத்தின்பேரில் தேடி வருகின்றனர்.

இதேவேளை, மகேஸ் விக்ரமசிங்கவின் கொலை தொடர்பில் 19 வயதுடைய செம் ஹரிசன் இன்ற இளைஞன்மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பரீட்சை முடிவுகள் தாமதமாகும்

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு மேலும் சில தினங்கள் தேவைப்படுகின்றன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இசட் வெட்டுப்புள்ளிகள் இன்னமும் அறிவிக்கப்படாமையே பெறுபேறுகள் தாமதமாகிறது.

## வவுனியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த வெடிப்புச் சம்பவம் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பாலம் திருத்தும் வேலையில் ஈடு பட்டிருந்தவர்களே காயமடைந்தனர். குழியைத் தோண்டியபோது புதைந்த நிலையில் காணப்பட்ட வெடிபொருளை எடுத்து ஆராய முற்பட்டவேளை அது வெடித்தது என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். சம்பவத்தில் மூவருக்குச் சிறு காயங்களும் மூவருக்குப் படுகாயமும் ஏற்பட்டுள்ளன. ஒருவர் தொடர்ந் தும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளார்.

சுனில் (வயது-45), தனுஜ (வயது-19), ரசிக (வயது-19) ஆகிய மூவருமே வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சுனில் இன் னும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்று வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## வலி.வடக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். அதை அடுத்து பிரதேச சபைக் கூட்டத்தில் அமளிதுமளி ஏற்பட்டது.

அத்துடன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளத்தை 'பிச்சைக்காரச் சம்பளம்' என்று கேவலப்படுத்திவிட்டு நேற்றைய கூட்டதை விட்டு வெளியேறினர்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வலி.வடக்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுப் பிரதேச சபைத் தலைவர் நோ.சுகிர்தன் தலைமையில் கூடியது. கூட்டத்தின் ஆரம்பத்திலேயே எதிர்க்கட்சியினரான ஈ.பி.டி.பியினரால் கவனயீர்ப்புப் பிரேரணை முன் வைக்கப்பட்டது.

அதில், வலி.வடக்கில் உள்ள சகல மயானங்களையும் புனரமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கோரிக்கை விடுத்துக் கடிதம் தர வேண்டும் என்று ஈ.பி.டி.பியனர் பிரதேச சபைத் தலைவரிடம் கோரிக்கை விடுத்தனர். தமக்கு உடனடியாகக் கடிதம் தரவேண்டும் என்றும், கடந்த கூட்டத்திலும் மயானங்கள் புனரமைப்புத் தொடர்பாக ஆளும் கட்சியினர் மழுப்பி விட்டனர் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். அத்துடன் மயான புனரமைப்புத் தொடர்பில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் கேள்வியெழுப்பினர்.

இதுதொடர்பில் பதிலளித்த பிரதேச சபைத் தலைவர், ''அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கடிதம் தர வேண்டிய அவசியம் எனக்கில்லை. நாங்கள் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். மயான அபிவிருத்திக் கூட்டம் கூட கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றது. படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன'' என்ற தெரிவித்தார்.

இதுதொடர்பில் திருப்தியடையாத எதிர்க்கட்சியினரான ஈ.பி.டி.பியினர் '' உங்களின் பிச்சைக்காரச் சம்பளத்தில் செய்ய முடியாவிட்டால் சொல்லுங்கள்'' என்று கூறினர். உடனடியாக கடும் எதிர்ப்பை வெளியிட்ட ஆளும் கட்சி உறுப்பினரான எஸ்.ஹரிகரன், ''கடந்த கூட்டத்தில் மயானங்களை உறுப்பினர்களின் மாதாந்தக் சம்பளத்தில் இருந்து புனரமைப்பது என்ற யோசனையை முன்வைத்ததே நிங்கள்தானே'' - என்றார்.

சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளத்தை இவ்வாறு கேவலமான - நாகரிகமற்ற முறையில் குறிப்பிடுவது தவறு என்றும் இதற்கு எதிர்க்கட்சியினர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்பின்னர் சபையை விட்டு வெளிநடப்புச் செய்வதாகச் சொல்லிவிட்டு எதிர்க்கட்சியினர் வெளியேறினர். இருப்பினும் தொடர்ந்து கூட்டம் நடைபெற்றதுடன், ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இவ்வாறு கேவலமான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்தமைக்காகப் பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, பிரதேச சபைத் தலைவரின் முயற்சினால் கீரிமலை மயானத்தை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுவதற்குக் கடற்படையினர் முதலில் சம்மதித்தபோதும் பின்பு அனுமதி மறுக்கப்பட்டது. அத்துடன் குறித்த பகுதிக்குப் பொறுப்பான கடற்படைத் தளபதியினால், பிரதேச சபைத் தலைவரிடம், ''கீரிமலை மயானத்தை அமைச்சர் டக்ளஸ் எடுத்த முயற்சியால் திறக்கப்படுகின்றது என்று சொன்னால் உடனடியாகத் திறக்கப்படும்'' என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-15)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தித் தாம் தொழில் நடவடிக் கைகளில் ஈடுபட வகைசெய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தினமும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொழில்கள் காரணமாக தமது தொழில் நடவடிக்கைகள் என்றுமில்லாதவாறு பாதிக்கப்பட்டு வருவதாகவும் முல்லைத்தீவு மீனவர்கள் கூறுகின்றனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்

எமது தொழில் நடவடிக்கைகள் யாவும் சிறிய படகுகள் மூலமே இடம் பெறுகின்றன. ஆனால் இந்திய மீனவர்கள் ட்றோலர் படகுகளில் எமது கடற்பரப்பில் சகல இடங்களுக்கும் சென்று எமது மீன் வளத்தை அள்ளிச் செல்கின்றனர்.

இதனால் எமது கடல் வளம் அழியும் அபாய நிலை காணப்படுவதுடன் தொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டக் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. அருள்ஜெனிஸ்பேட்டைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, தற்போது இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இது தொடர்பாக எமது பகுதியில் உள்ள கடற்படையினர் இராணுவத்தினர், பொலிஸாருக்கு அறிவித்திருக்கின்றோம்.

அத்துடன் அரச அதிபர், கடல்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரத்தின ஆகியோருக்கும் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளோம். ஆயினும் அத்துமீறல்கள் தொடர்கின்றன.

அத்துமீறல்கள் தொடருமானால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை எமது மாவட்ட மீனவர்களும் ஏனைய மாவட்ட மீனவர்களும் இணைந்து நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கூறினார்.

(த-6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எத்தனை காலத்துக்கு இந்நிலை?

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது. அந்த அதிகாரங்களை வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதில் பயனில்லை. கூட்டமைப்பு, அரசாங்கத்துடன் நடத்திவரும் பேச்சில் இந்த இரண்டு அதிகாரங்களையும் வழங்க வேண்டும் என்று கேட்டு வருகின்றது. அவற்றை எந்த நிலையிலும், ஒருபோதும் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வராது. ஆகவே தொடர்ந்தும் பேச்சு நடத்துவது காலத்தைக் கடத்தும் செயல்.

ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார். இதனை அமைச்சரவையின் - அரசாங்கத்தின் - அறிவித்தல் என்று கொள்வதில் தப்பில்லை. அது மட்டுமன்றி அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுகளை முறித்துக் கொள்வதற்கான முன்னோட்டம் என்றும் கூறலாம்.

இவ்வார முற்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகங்களின் பிரதானிகளுடன் நடத்திய சந்திப்பின்போது, வடக்கு,கிழக்கு இணைப்பு சாத்தியமே இல்லை என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தார்.

அதன் தொடர்ச்சியாகவே காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா என்று அமைச்சர் ரம்புக்வெல பிரசித்தப்படுத்தியுள்ளார். அத்தகைய ஒரு பின்னணியில் அரசு - கூட்டமைப்பு பேச்சுவார்த்தை தொடரப்பட வேண்டுமா? அதனால் கிடைக்கப்போவது எதுவுமே இல்லை.

மறுவளமாகப் பார்க்கப் போனால், அரசின் உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காத கூட்டமைப்புடன் தீர்வுக்கான பேச்சுவார்த்தை தேவையற்றது என்ற நிலைப்பாட்டில், அதனை கைவிடுவதற்கான ஓர் உபாயமாகவும் இந்த வழிமுறையைக் கைக்கொள்வதே அரசின் நோக்கம் எனப் புலப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் முதலிரு பேச்சுக்களிலேயே வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கூட்டமைப்பு முன்வைத்தவேளை, அரசு கால்களை இடறத் தொடங்கியது.

பேச்சுவார்த்தைகளை முற்றாக முறித்துக் கொண்டால், போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பான அழுத்தங்களின் வீச்சு கனமாகிவிடும் என்று எண்ணிய அரசு, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்தது. பின்னர் கேட்டவுடன் தரமுடியுமா? கொஞ்சம் கொஞ்சமாக ஆராயலாம் என்ற வாய்ப்பாட்டை பின்னர் நடைமுறைப்படுத்தத் தொடங்கியது.

இப்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுவிட்டது. போர்க் குற்றச்சாட்டுகள், மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் கொல்லப்பட்டமை ஆகியன குறித்துத் தனக்குச் சார்பான ஒரு நிலைப்பாட்டை உருவாக்க இயலும் என்ற நம்பிக்கையில்-

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை காலால் உந்தித் தள்ளும் கட்டத்துக்கு வந்திருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு வந்திருந்த இந்திய உயர் ராஜதந்திரி ஒருவர், உங்களுக்கு இடையே உள்ள பிரச்சினைகளை நீங்களே தீர்க்கவேண்டும் என்று கூறிய ''அறிவுரை''யின் பிரகாரம், தமிழர் தரப்பு தங்களது உரிமைகளைப் பெறுவதற்கு, அரசின் காலடியில் விழுந்து, கொடுப்பதை வாங்கவேண்டும் என்ற மெத்தனப்போக்கு நிலைக்கு இன்றைய அரசு வந்துவிட்டது.

நினைவுகளைப் பின்னோக்கி நகர்த்தினால்-

போர் முடிவுக்கு வந்த கையோடு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதன் அவசியமும் அவசரமும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கோரிக்கைகளாகவும் அழுத்தங்களாகவும் வந்தவேளை-

அவற்றைச் சமாளிக்கும் குறுமூளையுடன்- அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலும், அதற்கும் ஒருபடி மேற்சென்றும் (13+) தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு அரசு தயார் என்ற வெறுவாய் சப்பிய சவடால் பேச்சுகள் அதே தரப்பில் இருந்து வெளிவந்ததும், பின்னர் அவை மெதுமெதுவாக அமிழ்ந்துபோனதும் பழைய சங்கதிகளாகிவிட்டன.

இப்போது ஆட்சியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, 1995ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த வேளை, தமிழர்களுக்குத் தீர்வாகப் பிராந்திய சபைகளை மையமாகக் கொண்ட அரசியல் தீர்வுப் பொதியொன்றை அதே வருடம் ஒகஸ்ட் மாதம் முன்வைத்தது.

அந்தத் தீர்வுப் பொதியில்-

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை உத்தேச பிராந்திய சபைகளுக்கு வழங்க வகை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் -

- ஒரு பிராந்தியத்தினுள் உள்ள அரசகாணி, பிராந்தியத்துக்கு உரித்தாக்கப்பட வேண்டும். பிராந்திய சபையினால் அது கையாளப்படக் கூடியதாகவும் இருக்கும்.
- பிராந்திய சபை எல்லைக்குள், பிராந்திய பொலிஸ் ஆணையாளரின் தலைமையின் கீழ் பொலிஸ் சேவை ஒன்று உருவாக்குவதற்கும் வகை செய்யப்பட்டது.

ஆயினும் பல காரணங்களால் சந்திரிகாவின் தீர்வுப் பொதி உருவெடுக்காமல் பொசுங்கிப் போனது.

அந்தப் பொதியில் வடக்கு, கிழக்குப் பிராந்திய சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றைத்தானும் ஏறெடுத்துப் பார்க்கவும் இன்றைய அரசு தயாரில்லை என்பதனை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவின் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற அறிவித்தல் துலக்கமாக்கி உள்ளது.

மொத்தத்தில், தமிழர்களின் உரிமைகளைப் ''பெயருக்கு''க் கொடுக்கவே நாம் விரும்புகின்றோம். அவர்கள் சிறுபான்மையினர் என்பதால் சிங்கள அரசுகள் வழங்கும் அற்ப சொற்பங்களைப் பெற்றுக் கொண்டு, இரண்டாம் தரப் பிரசைகளாக வாழட்டும் என்பதே அன்றும் இன்றும் சிங்கள அரசியல் தலைமைகளின் அழியாத அரசியல் ''வேதாந்தங்கள்'' என்பதனை மஹிந்த அரசு ஊன்றிப் பதிக்க போகிறது.

தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற தந்தை செல்வாவின் வாக்கு, இவ்வாறு எத்தனை காலத்துக்கு இழுபட்டுச் செல்லுமோ! இந்நாட்டின் இருள்மண்டிய அரசியல் சூழ்நிலை எப்போது நீங்கப் போகின்றதோ? ஐயகோ, இலங்கைத் தமிழினமே!

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவுக்கான வர்த்தக பாடத்திட்டம் மீளாய்வு

கொழும்பு, டிசெ.24

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான வர்த்தகப் பாடத்திட்டத்தில் உள்ளடங்கும் மூன்று கற்கை நெறிகளில் இதுவரை நடைமுறையில் உள்ள பரீட்சைகள் கல்வி அமைச்சினால் மீளாய்வுக்கு உட்படுத்துப்பட்டுள்ளன.

இதற்கமைய கணக்கியல், பொருளாதார விஞ்ஞானம், அமைப்புக்களின் ஆய்வு ஆகிய வர்த்தகக் கற்கை நெறிகளுக்கான பரிந்துரைகளே மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகச் கல்வியமைச்சு தெரிவித் துள்ளது.

இந்தக் கற்கை நெறிகளின் உள்ளடக்கம் மிக அதிகம் என்பதால் அதனைக் குறைக்குமாறு மாணவர்கள் மற்றும் பெற்றோர் விடுத்துள்ள கோரிக்கைகளுக்கு அமைய அனைத்துத் தரப்புக்களுடனும் கலந்தாலோசித்துக் கற்கை நெறிகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய கல்வி நிறுவனத்தின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மீளாய்வு செய்யப்பட்ட பாடத்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் உயர்தரத்துக்கான புதிய பரிந்துரையின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும்.

தேசிய கல்வி நிறுவனத்தின் W W W nie.lk இணையத்தளத்தில் இந்த மீளாய்வு செய்யப்பட்ட பாடத்திட்டங்களைப் பார்வையிட முடியும்

(த-22)

# முன்னாள் புலிகள் 2500 பேருக்கு சுயதொழில் கடனாக 3 கோடி ரூபா

கொழும்பு, டிசெ.24

புனர் வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 2500பேருக்கு சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக புனர்வாழ்வு அதிகார சபை மூன்று கோடி ரூபாவை வழங்கியுள்ளதாக அந்த அதிகாரசபையின் தலைவர் ஈ.ஏ.சமரசிங்க தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரான சந்திரசிறி கஜதீரவின் பணிப்புரையின் பேரில் கடந்த ஆண்டின் ஒக்ரோபர் மாதத்தில் இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புலி உறுப்பினர் ஒருவருக்கு அதிகப்ட்சத் தொகையாக இரண்டு லட்சத்து 50ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்படுகிறது.

இந்தக் கடனைத் திருப்பிச்செலுத்தும் கால எல்லை பத்து ஆண்டுகளாகும்.

வழங்கப்படும் இந்தக் கடன் தொகைக்கு முதலாவது ஆண்டில் வட்டி மாத்திரமே அறவிடப்படவுள்ளதுடன் இந்தச் சலுகை ஆண்டில் அந்த இளைஞர்கள் ஒரு கோடி 90 லட்சம் ரூபாவை வட்டியாகச் செலுத்தியுள்ளதாகவும் சமரசிங்க தெரிவித்தார்.

(த-22)

# வடமாகாணப் பாடசாலைகளில் மீண்டும் முஸ்லிம் ஆசிரியர்கள்

## ஜனவரி முதல் இணைக்கப்படுவர்

யாழ்ப்பாணம், டிசெ.24

வடமாகாணத்தில் வசித்து இடம் பெயர்ந்து ஏனைய மாகாணங்களில் உள்ள அரச பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் வட மாகாண முஸ்லிம் ஆசிரிய உதவியாளர்கள் மீண்டும் வடமாகாணத்துக்கு இணைப்புச் செய்யப்படவுள்ளார்.

07/1241/316/053 இலக்க 2007.07.11 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரம் மூலம் அனுமதிக்கப்பட்டு வடமாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டு வடமாகாணத்தில் வசித்துத் தற்பொழுது இடம்பெயர்ந்து ஏனைய மாகாணங்களில் உள்ள அரச பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற முஸ்லிம் ஆசிரியர்கள் அனைவரும் எதிர்வரும் முதலாம் தவணை ஆரம்பத்தில் வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

உரிய ஆசிரிய உதவியாளர்கள் தமக்கான விண்ணப்பப் படிவங்களை கடமையாற்றிக் கொண்டிருக்கும் வலயக்கல்வி அலுவலகங்களில் பெற்று பூரணப்படுத்தி ''செயலாளர்'', கல்வி அமைச்சு, வடக்கு மாகாணத்துக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வடக்கு மாகாணத்தின் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(த்)

# அரசு வேலை வழங்கும்போது 3 வீதம் மாற்றுத்திறனாளிகளுக்கு

## ஜனவரி முதல் நடைமுறைக்கு

கொழும்பு, டிசெ.24

அரச சேவை வேலை வாய்ப்புக்கள் வழங்கப் படும்போது மூன்று வீதத்தை ஒதுக்கீடு செய்யும் கொள்கையை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கட்டாயமாக்குவதற்கு நிர்வாக சேவைகள் மற்றும் உள் நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சர் டபிள்யூ டீ.ஜே. செனவிரத்னவின் பணிப்புரைக்கு அமைய இந்த செயற்திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

1988 ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்ற சுற்று நிருபமொன்றின் மூலம், தகுதி களையுடைய விசேட தேவையுடையோருக்கு அரச துறையில் மூன்று வீதமான வேலை வாய்ப்புக்கான ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனாலும் அரச துறையில் ஆள்களைச் சேர்த்துக்கொள்ளும் விதிமுறையில் நிலவும் ஒரு சில நிபந்தனைகள் காரணமாக இந்தச் சுற்று நிருபத்தின் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவது முடங்கியுள்ளதாக அமைச்சருக்குத் தெரியவந்துள்ளது.

எனவே, திறமைகளை உடைய மாற்றுத் திறனாளிகளுக்கு அரச சேவையில் அதிகளவில் சேர்த்துக்கொள்வது தொடர்பான சுற்று நிருபங்களின் விதிகளில் இடம்பெற வேண்டியுள்ள மாற்றங்கள் குறித்து உடனடிக் கவனம் செலுத்தி அந்த நபர்களுக்கு நியாயம் வழங்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

(த-22)

## நாளை

மார்கழி 09, ஞாயிற்றுக்கிழமை 25.12.2011
திதி: பிரதமை மு. இ. 10.56 வரை
நத்தார் தினம் (கிறிஸ்மஸ்)
நட்சத்திரம் : மூலம் மு.ப 8.49 வரை
சுபநேரம்: 9.26 - 10.56 வரை, ராகு காலம்: 4.56 - 6.26 வரை

# நாகர்கோவிலில் கண்ணிகள் அகற்றும் பணிகள் துரிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

விடுவிக்கப்படாத நாகர் கோவில் பகுதியில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் மும் முரமாக இடம் பெற்று வரு வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் நாகர் கோயில் பகுதிகளில் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வரு கின்றன.

இந்தப் பணியில் கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்க ளான டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம், ஹலோ ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஆகியன மும்மு ரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் இந்தப் பகு தியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இந்த மாதத்துக்குள் முடிவடையும் என எதிர்பார்ப்ப தாக மருதங்கேணி பிரதேச செய லகவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, போர் மோச மாக இடம்பெற்ற பகுதியும் நீண்ட காலமாக சூனியப் பிரதேச மாக விளங்கிய சுண்டிக்குளம் பகுதியில் கண்ணிவெடி அகற் றும் பணிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

இந்தப் பகுதியில் முன்ன ரங்குகள் அமைந்திருந்தால் அதிகளவு கண்ணிவெடிகள் புதைக்கப்படுவதால் இந்தப் பகுதியில் கண்ணிவெடி அகற் றும் பணிகள் முடிய சற்றுக் காலதாமதம் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தப் பகுதி களை சேர்ந்த சுமார் 56 குடும் பங்கள் இன்னும் உடுத்துறை ஆழியவளைப் பகுதியில் தற் காலிக வீடுகளில் தங்கியிருக் கின்றனர். (ம-319)



வன்னியில் இடம்பெயர்ந்து நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு யூ.என்.எச்.சி. ஆர். நிறுவனத்தின் உதவிகளைப் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் பயனாளிகளுக்கு வழங்குகிறார். (ம-7)

# கிறிஸ்மஸ் வியாபாரம் 'சூடு'



யாழ்ப்பாணம் , டிசெ.24

யாழ்.நகரப் பகுதிக் கடை களில் நேற்று முன்தினம் முதல் நத்தார் வியாபார நடவடிக்கை கள் சூடு பிடித்துள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை கத்தோலிக்க மக்கள் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண் டாடுகிறார்கள்.

இதனையொட்டி நகரில் அமைந்துள்ள வியாபார நிலை யங்களில் நத்தார் வியாபாரம் மும்முரமாக இடம்பெறுகின்றது.

நகருக்கு வருவோர் கடை களில் புத்தாடைகளைக் கொள் வனவு செய்வதில் ஈடுபட் டுள்ளனர்.

அத்துடன் வீடுகளை அலங் கரிப்பதற்கான இயேசு பால னின் சொரூபம் அடங்கிய குடில் கள், கிறிஸ்மஸ் மரம் மற்றும் பலூன்கள் என்பவற்றையும் அதிக அளவில் கொள்வனவு செய்கின்றனர்.

'கிறிஸ்மஸ் றீ' என அழைக் கப்படும் அலங்கரிக்கப்பட்ட மரம் நேற்று யாழ்.நகரப் பகுதி யில் அமோகமாக விற்பனை யாகியது. கொழும்பில் இருந்து வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு இது விற்பனை செய் யப்பட்டது.

சில இடங்களில் இயேசு பாலன் பிறக்கும் குடில்களை அலங்கரிப்பதற்காகப் பயன் படுத்தப்படும் சவுக்கு மரங் களும் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டன.

இதேவேளை கிறிஸ்து பிறப்பு விழா ஆராதனைகள் இன்று நள்ளிரவு அனைத்து ஆலயங்களிலும் இடம்பெற வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது. (த-26)

# மானிப்பாய் சந்தையில் நெருக்கடி சைக்கிள் நிலையம் இடம்மாறுகிறது

சண்டிலிப்பாய் , டிசெ.24

மானிப்பாய் மத்திய சந்தை யில் இட நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் சந்தைப் பகுதியில் இயங்கி வரும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் சந்தைக்கு வெளியே வேறிடத் துக்கு மாற்றப்படவுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத் தில் இதற்கான தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள் ளது.

பிரதேச சபை மண்டபத்தில் தலைவர் அ.ஜெபநேசன் தலை மையில் நடைபெற்ற கூட்டத் தில் , உப தலைவர் எஸ்.சிவ குமார் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

சிறிய இடத்தில் இயங்கி வரும் மானிப்பாய் மத்திய சந்தைப் பகுதியில் அமைக் கப்பட்டுள்ள சைக்கிள் பாது காப்பு நிலையத்தால் அங்கு இட நெருக்கடி நிலவுகிறது. அங்கு வரும் மக்கள் நட மாட முடியாத நிலை இதனால் தோன்றியுள்ளது. வெளியேயி ருந்து உள்ளே வருபவர்களும், உள்ளேயிருந்து வெளியே செல் பவர்களும் பெரும் சிரமங்க ளுக்கு ஆளாகிறார்கள்.

மக்களின் வருகை நாளாந் தம் அதிகரித்து வருவதால் சைக்கிள் பாதுகாப்பு நிலை யத்தை வேறிடத்துக்கு அவசர மாக மாற்ற வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

எனவே, மக்கள் மத்தியில் நிலவும் கஷ்டத்தை நீக்கும் வகை யில் சந்தையின் உட்பகுதியில் இயங்கி வரும் சைக்கிள் பாது காப்பு நிலையத்தை சந்தைக்கு அண்மையில் சந்தை அமைப் பதற்காக வாங்கப்பட்ட காணி யில் அமைக்க வேண்டும் என்று இதன்போது தெரிவித்தார்.

இந்த நிலையில் இவரின் கோரிக்கை சபையினால் ஏற் றுக் கொள்ளப்பட்டது. (ம-115)

# தொண்டமானாறு கடல் நீரேரியின் நீர்த்தடுப்பு கதவுகள் திறக்கப்பட்டன

அச்சுவேலி , டிசெ.24

தொண்டைமானாறு கடல் நீரேரி நீர்த்தடுப்பு கதவுகள் திறந்து விடப்பட்டதை அடுத்து வலிகாமம் கிழக்கு, தென்ம ராட்சி, வடமராட்சி பகுதியில் தேங்கி நின்ற மழை வெள்ளம் வற்றியது.

கடல் நீரேரி தடுப்பு அணை யின் கதவுகள் மூடப்பட்டி ருந்தமையால் மழை வெள்ளம் குடாக்கடல் கடல் நீரேரியில் தேங்கியதோடு தாழ் நிலங் களில் அமைந்திருந்த குடியி ருப்புகள் பயிர்ச்செய்கை நிலங் களிலும் புகுந்து சேதத்தை ஏற்படுத்தியது.

இதனால் கணிசமான குடும் பங்கள் வீடுகளை விட்டு வெளி யேறி பொது இடங்களில் தங்க வேண்டிய நிலைமை இருந்தது.

நீர் தடுப்பு அணையின் கதவுகளை திறந்துவிடுமாறு வலி. கிழக்கு பிரதேச சபையும் கோரிக்கை விடுத்திருந்து.

வலி. கிழக்கு பிரதேச செய லர் எம். பிரதீபன், தொண்ட மானாறு நீர்த் தடுப்பு அணைக்கு பொறுப்பான பொறியியலாளர் எஸ். கருணாநிதி ஆகியோர் நேரில் சென்று நிலைமையை பார்வையிட்டுத் தடுப்பு அணை யின் கதவுகளை திறந்துவிட் டதை அடுத்து மழை வெள்ளம் வற்றியுள்ளது.

இந்த நிலையில் வீடுகளை விட்டு வெளியேறிய குடும்பங் களும் தமது வீடுகளுக்கு திரும் பியுள்ளன. (ம-11)

# அச்சுவேலியில் புதிய ஆரம்பப் பாடசாலை

அச்சுவேலி , டிசெ.24

அச்சுவேலியில் புதிதாக ஆரம்பப் பாடசாலை ஒன்று செயற்படவுள்ளது. ஜனவரி யில் முதலாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பமாகும் போது இந்த ஆரம்பப் பாட சாலையும் தனித்துவமான முறையில் செயற்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

அச்சுவேலி மத்திய கல் லூரி ஆயிரம் பாடசாலை அபி விருத்தி திட்டத்தின் கீழ் உள் வீர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஆயிரம் பாடசாலை அபி விருத்தி திட்டத்தில் இணைத் துக் கொள்ளப்படும் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலை களில் ஆரம்பப் பிரிவு வகுப் புக்கள் இணைந்த நிலையில் செயற்படக் கூடாது என்பது அடிப்படை விதியாகும்.

ஆரம்ப பிரிவுகள் வேறு பாட சாலையாக பிரிக்கப்பட வேண் டும் அல்லது ஆயிரம் பாட சாலை அபிவிருத்தித் திட்டத் தில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்பது மத்திய கல்வி அமைச்சின் கண்டிப் பான நிலைப்பாடாகும்.

ஆயிரம் பாடசாலை அபி விருத்தித் திட்டத்தில் உள் ளீர்ப்பு செய்யப்பட்ட அச்சு வேலி மத்திய கல்லூரியில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை யான வகுப்புக்கள் அடுத்த வருடத்தில் இருந்து செயற் படும்.

அதேநேரம் இதுவரை காலமும் அச்சுவேலி மத்திய கல்லூரி தரம் ஒன்று முதல் 5 வரையான ஆரம்பப் பிரிவு வகுப்புக்களை உள்ளடக்கிப் புதிய ஆரம்பப் பாடசாலை செயற்படவுள்ளது.

இது அச்சுவேலி மத்தி ஆரம் பப் பாடசாலை என்ற பெயரில் செயற்படலாம் என கூறப்படு கின்றது.

ஜனவரியில் இருந்து புதிய அதிபர் ஒருவர் பாடசாலை நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்று நடத்தவுள்ளார்.

புதிய ஆரம்பப் பாடசாலைக் கான அனுமதிகள் உரிய முறை யில் கல்வி அமைச்சால் வழங் கப்பட்டிருப்பதாகவும், அய லில் உள்ள ஆரம்பப் பாடசாலை களின் மாணவர் அனுமதியில் பாதிப்பு இல்லாத வகையில் புதிய ஆரம்பப் பாடசாலையில் மாணவர் அனுமதி மட்டுப் படுத்தப்பட்ட அளவில் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (ம-11)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் காசநோய் பரவல் அதிகரிப்பு

தென்மராட்சி, டிசெ.24

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மைக் காலமாக காசநோய் வேகமாகப் பரவி வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது..

இளம் வயதுடையோரே பெருமளவில் பாதிக்கப்பட் டுள்ளதாகவும் டிசெம்பர் மாத் தில் நேற்று 21 ஆம் திகதிவரை மூன்று பேர் காசநோயால் பீடிக் கப்பட்டிருந்தமை கண்டு பிடிக் கப்பட்டுள்ளது.

3 வாரங்களுக்கு மேலாக தொடர்ச்சியான இருமல், தொடர்ச்சியான காய்ச்சல் ஆகி யவை உள்ளவர்கள் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலை யில் பரிசோதனைகளை மேற் கொள்ள யாழ்.மாவட்ட காநோய் தடுப்பு வைத்தியக் அதிகாரி செ.யமுனானந்தா ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இருமல் மற்றும் காய்ச்சல் உள்ளவர்கள் வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் பரிசோதனை களை மேற்கொண்டு நோய் இருப்பது குறித்து தெளிவு படுத் திக் கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காசநோய் இருப்பது உறுதிப் படுத்தப்பட்டால் வீட்டிலிருந்தே சிகிச்சை பெறவும் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டது.தற்போதைய அசா தாரண சூழ்நிலைகள் மற்றும் சுற் றுச் சூழல் பாதிப்பு போன்ற கார ணங்களால் இவ்வாறான நோய் களின் தாக்கம் மிகவும் அதிக ரித்துக் காணப்படுவதாகச் சுட் டிக் காட்டப்பட்டுள்ளது.(ம-207)

## திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் குடத்தனையில் கைது

வடமராட்சியில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் குடத்தனைப் பகுதியில் வைத்து பருத்தித்துறைப் பொலிஸா ரால் திடீர் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது:

வடமராட்சி மற்றும் வடம ராட்சி கிழக்குப் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற திருட்டுச் சம்ப வங்களுடன் தொடர்புடைய தாகக் கூறி குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரை அந்தப் பகுதியில் வைத் துக் கைது செய்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை குற்றப் பிரிவு பொலிஸ் பொறுப் பதிகாரி எஸ்.ஜ. வீரவர்த்தன மற்றும் குற்றப் பிரிவு பொலிஸ் அதிகாரிகளான எஸ்.திஸா நாயக்க, எம்.பிரபாகரன், வசந் தன் ஆகியோர் அடங்கலான பொலிஸ் குழு குடத்தனைப் பகுதியில் வைத்துக் கடந்த 22ஆம் திகதி இரவு இவரைக் கைது செய்தது.

இவர் பருத்தித்துறை புலோ லிப் பகுதியில் சுமார் 14 ஆயி ரத்து 500 ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரம் மற் றும் பொருள்களைத் திருடினார் என்றும் வடமராட்சி வல்லிபுரம் குறிச்சி ஆலயம் ஒன்றில் 22 ஆயிரத்து 100 ரூபா பெறுமதி யான பொருள்களைக் களவாடி னார் என்றும் இவர் மீது குற் றஞ்சாட்டப்பட்டது.

குறித்த நபர் நேற்று நண் பகல் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் அ.க.நடராஜா முன்னிலை யில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் ஜன வரி மாதம் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார். (ம-319)

## டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைக்காத 6 பேருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை

அச்சுவேலி, டிசெ.24

அச்சுவேலி மேற்கில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்து ழைப்பு வழங்காமல் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற வாறு காணிகளை வைத்திருந்த 6 பேருக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுப்பதற்கு அச்சு வேலி பொலிஸார் முன்வந் துள்ளனர்.

அச்சுவேலி சுகாதார பரி சோதகர் சு.இரவிவர்மன் மற் றும் அச்சுவேலி பொலிஸ் நிலை யத்தை சேர்ந்த பொலிஸ் குழு வினரும் இணைந்து அச்சு வேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு தொடர் பான திடீர் பரிசோதனையை வீடுவீடாக மேற்கொண்டனர்.

இந்தத் திடீர் பரிசோதனை யின் போது 6 குடும்பத்தினர் டெங்கு பெருகுவதற்கு ஏற்ற வகையில் தமது காணிகளை துப்புரவு செய்யாமல் டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைப்பு வழங் காது இருந்தமை அவதானிக் கப்பட்டது.

இந்த ஆறு குடும்பத் தலை வர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு அச்சுவேலி பொலிஸார் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

அச்சுவேலிப் பகுதியில் உள்ள ஏனைய கிராம அலுவலர் பிரிவு களிலும் டெங்கு ஒழிப்பு கண் காணிப்பு திடீர் பரிசோதனை கள் தொடர்ந்து மேற்கொள்ள விருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது. டெங்கு ஒழிப்பு நட வடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்காதோர் மீது நீதிமன்றத் தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட விருப்பதாகவும் அச்சுவேலி சுகாதாரப் பரிசோதகர் சு.ரவி வர்மன் தெரிவித்தார். (ம-11)

## சிறுமியைப் பலாத்காரம் செய்ய முயற்சித்த இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

பாடசாலை சிறுமியொரு வரை பலாத்காரம் செய்ய முயற்சித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் தாவடி யைச் சேர்ந்த இளைஞரொரு வர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

தாவடிப் பகுதியிலுள்ள வீடொன்றில் தனித்திருந்தசிறுமி மீதே பலாத்கார முயற்சி மேற்கொள் ளப்பட்டுள்ளது. தாயார் வெளியில் சென்றிருந்த சமயம் குறித்த சிறுமி வீட்டில் தனித்திருந் துள்ளார்.

இந்த நேரம் குறித்த இளை ஞன் வீட்டினுள் வந்து கேற் றைப் பூட்டிவிட்டு வீட்டின் வாசலில் நுழைந்த சமயம், இந் தச் சிறுமி கதவைப் பூட்டி விட்டு வெளியேற முயற்சித் துள்ளார். அதற்குள் அந்த இளை ஞன் கதவைப் பூட்டிவிட்டு வீட் டினுள் வருமாறு கூற சிறுமி சத்தமிட்டுக் கொண்டு அயலி லுள்ள வீட்டுக்குச் சென்றுள் ளார். இந்தச் சம்பவம் தொடர் பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் குறித்த இளைஞன் கைது செய்யப் பட்டு மல்லாகம் நீதிமன்ற நீதி வான் கே.கஜநிதிபாலன் முன் னிலையில் ஆஜர்படுத்தப் பட்டு, விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார்.

அத்துடன் குறித்த சிறுமி யாழ். போதனா வைத்திய சாலை யில் சட்ட வைத்திய பரிசோதனைக் கும் உட்படுத்தப்பட்டார். (ம-15)

## மக்கள் நடமாட்டம் அதிகரிப்பால் யாழ்.நகரில் பொலிஸ் ரோந்து

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ். நகரில் போக்குவரத்து பொலிஸாரின் ரோந்து மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று முதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நத்தார் மற்றும் புதுவருட கொண்டாட்டத்துக்கு மக்கள் அதிகளவில் நகருக்கு வருகை தருவதாலும் மக்களின் நடமாட்டம் கூடுதலாக காணப்படுவ தாலுமே பொலிஸாரின் போக்குவரத்து விதிகளும் நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தவும் மக்களின் போக்குவரத்தை இலகுவாக்கும் முகமாகவும் பொலிஸாரின் போக்கு வரத்து நடைமுறைகளும் தற்போது இரவு வரைக் கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

நகரின் முக்கிய சந்திகள் மற்றும் பிரதான இடங் கள் மூலை முடுக்குகள் எங்கும் பொலிஸார் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, முற்றவெளி தனியார் பஸ்தரிப்பு நிலையத்திலும் சன நெரிசல் அதிகரித்துக் காணப் படுவதால் அங்கு போக்குவரத்து விதிகளைக் கடைப் பிடித்து வாகன நெரிசல்களைக் கட்டுப்படுத்து வதிலும் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டும் வரு கின்றனர்.

பொலிஸாரின் காவல் கடமையில் கூடுதலாகத் தமிழ்ப் பொலிஸாரும் பணியில் ஈடுபட்டிருப் பதையும் காணமுடிந்தது. (ம-26)

## காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் அதிகரிப்பு ஒரு சிலர் மலேரியாவாலும் பாதிப்பு

தென்மராட்சி, டிசெ.24

அண்மையில் பெய்த மழையை அடுத்து தென்மராட்சிப் பகுதியில் காய்ச்சலால் பீடிக் கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

இவர்களில் சிலருக்கு மலேரியாக் காய்ச் சல் ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

இதனையடுத்து காய்ச்சலால் பீடிக்கப்படு வோர் மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட் டதை உறுதிப்படுத்தக்கூடிய உடனடிப் பரிசோதனை முறை வைத்தியசாலை எட் டாம் இலக்க அறையில் ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனை அறையில் வெளிநோயாளர் பிரிவுத் துண்டுடன் சென்று அங்குள்ள உத்தியோகத்தர் மூலம் இரத்தப் பரிசோதனை மேற்கொண்டு மலேரியா காய்ச்சல் உள்ளதா என உறுதிப்படுத்திச் சிகிச்சை பெறுமாறு அறிவிக்கப்பட்டுள் ளது.

இவ்வாறான பரிசோதனை முறை மூலம் எச்ஐவி வைரஸ் கிருமி தொற்றியுள்ள தையும் பரிசோதிக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## குற்றச்செய்தி

யாழ்ப்பாணம்,டிசெ.24

தம்புள்ள பகுதிக்கு அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோத மாக 14 கால்நடைகளைக் கொண்டு செல்ல முயன்ற தம்புள்ள வாசிகளை நெல்லிய டிப் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

வடமராட்சிப் பகுதியில் இருந்து 14 கால்நடைகளை சிறிய 'டிப்'ரக வாகனத்தில் ஏற்றி தம்புள்ள பகுதிக்குக் கொண்டு செல்ல முயன்றவர்களே நெல்லி யடிப் பகுதியில் வீதிக் கண் காணிப்பு நடவடிக்கையில் ஈடு பட்ட பொலிஸாரிடம் மாட்டினர். இதன்போது குறித்த கால்நடை களையும், அவற்றைக் கொண்டு செல்லப் பயன்பட்ட வாகனத்தை யும் அவர்கள் கைப்பற்றினர்.

சந்தேகநபர்களை பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் அ.க.நடராஜா முன் னிலையில் பொலிஸார் நேற்று முன்தினம் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் சந்தேக நபர்களுக்கு 10,000 ரூபா அபராதம் விதித்ததுடன் கால் நடைகளையும் வாகனத்தை யும் ஒருலட்சம் ரூபா பிணை முறியில் குறித்த நபர்களிடம் கையளிக்குமாறும் உத்தர விட்டு தீர்ப்பளித்தார். (ங-319)

## மொட்டையாக்கப்படும் சவுக்கு மரங்கள்

கோப்பாய் இராச வீதியில் உள்ள சவுக்கு மரங்களின் கிளை கள் வெட்டப்பட்டு மொட்டை யாக்கப்பட்டுள்ளன. நத்தார் புதுவருடத்துக்காக இந்த சவுக்கு மரங்களின் கிளைகளை வெட்டிச் சிலர் அதை விற்பனை செய்தும் வருகின்றனர். வருடா வருடம் இந்தச் சவுக்கு மரங்களின் கிளைகள் நத்தார் காலத்தில் வெட்டப்பட்டுமொட்டையாக் கப்பட்டு வருவது வழக்கம்.

இந்த சவுக்கு மரங்களின் கிளைகள் கண்டபடி வெட்டுவ தால் அவை பாதிக்கப்பட்டும் வரு கின்றன. இதே வேளை, நேற்று யாழ். கரையோரப் பகுதியில் சிறிய வடி வாகனத்தில் வைத்து சவுக்கு கிளைகள் விற்பனை செய்யப்பட்டதையும் அவதா னிக்க முடிந்தது. (ம-26)

## குன்றும் குழியுமாக கொடிகாமம் வீதி

யாழ்ப்பாணம்,டிசெ.24

கொடிகாமம் பிரதேச சபைக்கு முன்பாக உள்ள ஏ-9 பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் அதிகள வான விபத்துக்கள் இடம் பெறுவதாக பொதுமக்கள் விச னம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியின் ஒருபுறம் பிரதேச சபையும் மறுபுறம் பஸ் தரிப்பிடமும் அமைந் துள்ள நிலையில் இந்த வீதி மிகவும் சேதமடைந்து இருப் பது தொடர்பாக எந்தவித நட வடிக்கைகளும் மேற்கொள் ளப்படவில்லை.

ஏ-9 பிரதான வீதி என்பதால் 24 மணி நேரமும் வீதியில் வாகனங்கள் சென்ற வண் ணமே உள்ளன.

இதனால் வாகனங்கள் ஒன் றையொன்று விலகிச் செல்லும் போதும், சேதமடைந்த இடத் தைக் கடக்க முயற்சிக்கும் போதும் வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்



வதுடன், வாகனங்களும் விபத் துக்குள்ளாகின்றன.

அத்துடன் இந்த வீதியில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் குழாய் மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் பாவனைக்கு அற்ற விதத்தில் காணப்படு கின்றது.

இதனால் பஸ்களுக்காகக் காத்திருக்கும் மக்கள் குடி தண்ணீர் பெறுவதற்குப் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே, வீதிப் புனரமைப்புத் தொடர்பாகவும் குடிதண்ணீர் குழாய் புனரமைப்புத் தொடர் பாகவும் சம்பந்தப்பட்ட அதி காரிகள் கவனத்தில் எடுத்து பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

## வாகன நெருக்கடியைத் தடுப்பதற்கு சாவகச்சேரியில் அதிரடிச் செயற்பாடு

தென்மராட்சி, டிசெ.24

சாவகச்சேரி நகரப் பகுதி யில் ஏற்பட்டுள்ள வாகன நெருக் கடியைத் தவிர்க்கும் முகமாக நவீன சந்தை முன்பாக வாக னங்கள் நிறுத்துவது நகரசபை யால் தடை விதிக்கப்பட்டுள் ளது.

நவீன சந்தைக்கு முன்பாக சைக்கிள் உட்பட வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்கு வரத்து நெருக்கடி ஏற்படுவ தாகவும் நவீன சந்தை விறாந் தையில் வர்த்தகர்கள் பொருள் களைப் பெருமளவு வைப்ப துடன் தமது சைக்கிள், மோட் டார் சைக்கிள் போன்ற வற்றை நிறுத்துவதால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர் என்று கிடைத்த முறைப் பாடுகளை அடுத்து நகர சபையால் இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்தச் செயற்பாடு கள் நடைமுறைக்கு வருமென நகரசபைத் தலைவர் சி.தேவ சகாயம்பிள்ளை தெரிவித்துள் ளார். (ம-207)

greentel

வாழ்வின் தோழன்



GT 400 earth

மெகாபிக்சல் கெமரா/வீடியோ
மெமரிகார்ட் 4GB வரை
FM ரேடியோ
MP 3 /MP 4
டோர்ச்
Bluetooth
GPRS | MMS / Games
மெகா ஆயுள் Battry life

4,990/=

தொடர்புகளுக்கு
0777 939225 /0712 447770 / 0777 003838

முதன்முறையாக இலங்கையில் அறிமுகபடுத்தும்
தமிழ்மொழியுடன் கூடிய மொபைல் போன்

techsas
1 Year warranty
TRC Approved

# மரண அறிவித்தல்



## திருமதி செல்லையா திரவியம்

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கு, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா திரவியம் 22.12.2011 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு செல்லையா (தொழில திபர் - மலேசியா) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் செல்வராணி, புஸ்பராசா (லண்டன்), தவமலர், காலஞ்சென்ற குணசிங்கம், புஸ்பராணி (பிரான்ஸ்), சுபந்தினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், இராஜேஸ்வரி, சிவநாய கம், பற்றீசியா (கொழும்பு -13), காலஞ்சென்ற சிதம்பரநாதன், பரமசிவம்(பிரான்ஸ்), தெய்வேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் நிக்ஷன், லுமினா (லண்டன்), கோகிலன் (ஜேர்மனி), சிந்து (ஆசிரியர்), நந்தலாலன், றொசான் (லண்டன்), செனீசியஸ் (டுபாய்), பிருந்தா(பிரான்ஸ்), திவ்வியா(பிரான்ஸ்), தேனுகா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை( 25.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் அளவெட்டி மேற்கு கொட்டுப் பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு — தகவல்: இ.சிவநாயகம்

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
**The Only Official French Language Centre in Jaffna**
**Learn French the French Way**

சர்வதேச மொழியான French மொழியை எவரும் இலகுவாக கற்றுக்கொள்ளலாம்...
6மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்குத் தோற்றலாம்.
வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்..

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna. T.P:021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து வழங்கப்பட்ட No.1 பிறிமா புறொயிலர், பேட்டுக் குஞ்சுகள் 29.12.2011 வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

தொடர்பு: 01) நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். - **0212226944**
02) நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், அம்பாள் குளம், கிளிநொச்சி. - **0776225944**

(1199)(5,6,9)

# சாவகச்சேரி பிரதேச சபை

**01.01.2012 முதல் 31.12.2012 வரை சந்தைகள் இறைச்சிக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான**

# மீள் கேள்வி அறிவித்தல்-2012

1. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 24.12.2011 - 29.12.2011
2. கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 30.12.2011 ந.ப12 மணி வரை
3. கேள்வி பத்திரம் திறக்கும் திகதி : 30.12.2011 பி.ப. 2 மணி

| இல | விவரம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க படாதது) (VAT, NBT தவிர) |
|---|---|---|---|---|
| | கச்சாய் உபஅலுவலகம் | | | |
| 01 | கொடிகாமம் ஆட்டிறைச்சிக் கடை | 45,000.0 | 1000.00 | 500.00 |
| | கைதடி உபஅலுவலகம் | | | |
| 02 | கைதடி பொதுச்சந்தை | 25200.00 | 1000.00 | 500.00 |
| | மிருசுவில் உபஅலுவலகம் | | | |
| 03 | மிருசுவில் பொதுச் சந்தை | 22500.00 | 1000.00 | 500.00 |

## நிபந்தனைகள்

1. இறைச்சிக் கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித்தொகையுடன் செலுத் தப்பட வேண்டும்
2. கேள்வித் தொகை, படிவக்கட்டணம், மாதவாடகை என்பவற்றுடன் VAT 12%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
3. சந்தையிலிருந்து1Km சுற்றாடலில் மீன், மரக்கறி விற்றல் தடை செய்யப்பட்டுள்ளது
4. சந்தை வளவில் உள்ள கடைகளுக்குத் தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் எவ்வித வரி அறவீடு களையும் மேற்கொள்ள முடியாது.
5. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப் பட்டு இறைச்சிக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப்பணமாக அறவிடப் படும்.
7. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகை விவரத்தினை குறிப் பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை ''தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடி காமம்'' என்ற விலாசத்துக்கும் மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
8. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
9. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேச சபை
கொடிகாமம்.

சிற்றம்பலம் துரைராஜா
தவிசாளர்,

(சி/2896) (2-6-7)

# மரண அறிவித்தல்

## திருமதி குணநாயகி இரத்தினசபாபதி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிட மாகவும் வியாசர் வீதி, பண்டாரிகுளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணநாயகி இரத்தினசபாபதி 21.12.2011 புதன்கிழமை வவுனியா வில் காலமானார்.

அன்னார் காங்கேசு இரத்தின சபாபதியின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான ஞானப் பிரகாசம்-பத்மாவதி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி காங்கேசு (சங்கானை) தம்பதியரின் சிரேஷ்ட மருமகளும் கோமளகௌரி (லண்டன்), ஸ்ரீதரன் (டென்மார்க்), ஸ்ரீ பவன் (சுவிஷ்), கௌசலா (லண்டன்), உமாபரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் கண்ணபிரான், சந்திரோதயம், வனஜா, சபா நாதன், ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமியும், கஜானி, டிலானி, புருசோத், டிலக்சியா, டிலோஜன், சன்ஜீவன், பவன்ஜா, ரட்ணன், டிலக்ஷன், யசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திலகநாயகி, விமலாதேவி, காலஞ்சென்ற பரமநாயகம், நேசநாயகம், சூரியகுமார், ரேவதி, தனபதி, கயிலநாதன், துரைசிங்கம், ஜெயலிங்கம், போஜலிங்கம், கந்தகௌரி, காலஞ்சென்ற இந்திரகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சபாநாதன், காலஞ்சென்ற பாலசுந்தரம், பாலகிருஷ்ணன், சகுந்தலாதேவி, ரூபராணி, இளங்கோவன், பரமேஷ்வரி, காலஞ்சென்ற ஜெயராஜா, காலஞ்சென்ற துரைராஜா, செல்வலட்சுமி, றஜனி, காலஞ்சென்ற தவராஜா, ஜெயசுந்தரி, பகவதி, நகுலேஸ்வரி, ஸ்ரீரஞ்சன், நளினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப.11 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

79, வியாசர் வீதி,
தோணிக்கல்,
வவுனியா.

(சி/7154) (2-6-7)

சிறிகொத்தாவில் நடந்த மோதல் சம்பவம்:

# கலகத்தைத் தடுக்கத் தெரியாத பொலிஸார்; தற்போது விசாரணையில் மட்டும் தீவிரம்

கொழும்பு,டிசெ.24

எதிர்க்கட்சி மற்றும் கட்சித் தலைவர் பதவிகளை பரிமாறிக் கொண்டிருந்தால் கலகம் ஏற்பட்டிருக்காது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

கட்சித் தலைவர் பதவியை கரு ஜயசூரியவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வழங்குமாறு தாம் உள்ளிட்ட சிலர் யோசனை முன்வைத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் கலக நிலைமை ஏற்பட்டிருக்காது என்று அவர் தெரிவித்துள்ளார். இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ளாமல் வாக்கெடுப்பு நடத்தியதனால் கலக நிலைமை ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சித் தலைவர் பதவி உள்ளிட்ட முக்கிய பதவிகளுக்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பானது சுயாதீனமான முறையில் நடத்தப்படவில்லை. இதுவே மோதல்கள் உருவாகக் காரணம் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வாக்கெடுப்பு நடத்தப்பட்ட தினமன்று நியமிக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் மீது தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோதல்களைத் தடுப்பதற்காக முயற்சி செய்த நபர்களே கலகம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு மாகாண சபை உறுப்பினர்கள் ஆயுததாரிகளை அழைத்துச் சென்றிருந்ததாகக் குற்றம் சுமத்தியுள்ளார். இந்த ஆயுததாரிகள் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் சுதந்திரமாக நடமாடியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தில் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தாத பொலிஸார், தற்போது விசாரணைகளில் ஏன்



தீவிரம் காட்டுகின்றனர் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மோதல் இடம்பெற்ற தினத்தில் பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை.

சிறிகொத்த பௌத்த சிலை மீது நடத்தப்பட்ட தாக்குதலை இனவாதத்தைத் தூண்டும் வகையில் எவரும் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று அவர் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியை வலுவான ஒரு தேசிய அமைப்பாக மாற்றும் முனைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# தன்னார்வ தொண்டு நிறுவனம் குறித்து அரசு விசாரணை நடத்தத் தீர்மானம்

கொழும்பு,டிசெ.24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகச் செயற்படும் ஜேர்மன் தன்னார்வ தொண்டு நிறுவனம் குறித்து அரசு விசாரணை நடத்தத் தீர்மானித்துள்ளது.

தம்மை தலைமைப் பதவியிலிருந்து வெளியேற்றுவதற்காக ஜேர்மனிய தன்னார்வ தொண்டு நிறுவனமொன்று பணத்தைச் செலவிட்டு வருவதாக ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் குறித்து நாடாளுமன்றம் விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று அரசு தெரிவித் துள்ளது.

ஜேர்மன் நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக் குழுவுக்கு ஜேர்மனும் மேலும் இரண்டு நாடுகளும் உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்களை கிளர்ச்சிக் குழுவினர் நிராகரித்துள்ளனர்.

அரசியல் லாபத்திற்காக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுவதாக கிளர்ச்சிக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வரவு - செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு விவாதத்தின் நிறைவில் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகள் குறித்து ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் பேச்சு நடத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது. (ச)

# துமிந்த சில்வாவுக்கு கை, கால் செயற்படா

## மருத்துவ அறிக்கையில் தகவல்

கொழும்பு,டிசெ.24

முல்லேரியா துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் காயமடைந்த கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் ஒரு கையும் ஒரு காலும் நிரந்தரமாகச் செயற்படா என்று மருத்துவ அறிக்கைகள் தெரிவிப்பதாக, குற்றப் புலனாய்வுப் பணியகம் நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் துப்பாக்கிப் பிரயோகத்தினால் துமிந்த சில்வாவின் மூளையிலும் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜயவர்தனபுர வைத்தியசாலையில் துமிந்த சில்வாவுக்கு மூளை சத்திரசிகிச்சை செய்த டாக்டர் மஹேசி விஜேசேகரவினால் தயாரிக்கப்பட்ட மருத்துவ அறிக்கை குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொல்லப்பட்டமை தொடர்பான இந்த வழக்கில் நீதிமன்ற உத்தரவின்படி, துமிந்த சில்வாவின் மருத்துவ அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதேவேளை, சாட்சியங்களின்படி இந்தப் படுகொலைச் சம்பவத்தில் முதலாவது துப்பாக்கிப் பிரயோகம் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரின் ஆயுதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(ச)

# அபிவிருத்திக்கு ஆதரவைத் திரட்டுகிறது சீனா

இலங்கை அபிவிருத்தியை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டுமாயின் அதற்கு சர்வதேச சமூகம் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நிலையான அபிவிருத்தியை உருவாக்க வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்று சீனா கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையின் உள் விவகாரங்களில் கூடிய கவனம் செலுத்தி வருவதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் லியூ மெயின் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் திறன் இலங்கை மக்களிடம் உள்ளது என்று தாம் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



இலங்கைக்கான ஈரான் தூதுவர் நபி மொஹமட் ஹஸனி போரி நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமை கடந்த புதன்கிழமை சந்தித்துள்ளார்.

# கல்வியைத் தனியார் மயப்படுத்த அரசு தொடர்ந்து நடவடிக்கை

கொழும்பு,டிசெ.24

நாட்டில் கல்வித் துறையை தனியார் மயப்படுத்தும் முதல் நடவடிக்கையை அரசு ஆரம்பித்துள்ளதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

மாணவர் ஒன்றியங்களை தடை செய்வதன் மூலம் தனியார் மயப்படுத்தலுக்கான முதல் கட்ட நடவடிக்கையை அரசு தொடங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

மாணவர்களின் ஜனநாயக உரிமைகளை முடக்குவதன் மூலம் ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடலாம் என்று ஜே.வி.பி குறிப்பிட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களை தற்காலிகமாகத் தடை செய்யும் உத்தரவு ஓர் அரசியல் நகர்வாகவே கருதப்பட வேண்டும் என்று ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் தனியார் பல்கலைக்கழக சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான பின்னணியை அரசு உருவாக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர் ஒடுக்குமுறைகள் எவ்வாறான இரத்தக் களறியை ஏற்படுத்தும் என்பதனை வரலாறு நமக்கு பாடம் கற்பித்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்கள் தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக ஜே.வி.பி தொடர்ச்சியாக குரல் கொடுக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# குழப்பம் விளைவித்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கம்

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.24

பல்கலைக்கழகங்களில் குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்ட மாணவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி, அவர்கள் அடையாளம் காணப்பட்டால் பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கப்படுவர் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் மாணவர்களால் பல்கலைக்கழகத்தில் சிறிய எதிர்ப்பு பேரணி ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாகவும் இந்தப் பேரணியில் மாணவர்கள் கலந்து கொள்ளாததால், விரிவுரைகளில் கலந்து கொண்டிருந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் பலவந்தமாக அழைக்கப்பட்டு பேரணியில் கலந்து கொள்ளச் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலாம் ஆண்டு மாணவர்களைப் பேரணிக்கு அழைத்து செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்த விரிவுரையாளர் ஒருவர் மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளார். இந்த விரிவுரையாளரை காப்பற்றச் சென்ற பாதுகாவலர்கள் மற்றும் மேலும் ஒரு விரிவுரையாளரையும் மாணவர்கள் தாக்கியுள்ளனர் என்று



அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களைத் தாக்கி ஒழுக்கத்தை மீறி நடந்து கொண்ட மாணவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# எம்.ஜி.ஆரின் 24 ஆம் ஆண்டு தினமும் சுனாமியின் 7 ஆம் ஆண்டு நிகழ்வும்

யாழ்ப்பாணம், டிசெ.24

எம்.ஜி.ஆரின் 24 ஆம் ஆண்டு நினைவு நாளும், அணைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவர் பொன். மதிமுகராஜாவின் 13 ஆம் ஆண்டு நினைவு நாளும், சுனாமியின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளும், இன்றும், நாளையும், நாளை மறுதினமும் முப்பெரும் விழாவாக நடத்துவதற்கு அணைத்துலக எம்.ஜி.ஆர். பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

முதல் நிகழ்வில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு குருநகர், பாஷையூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைமை அலுவலகத்திலுள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு மலர் மாலை அணிவித்தல் இடம்பெறும்.


இரண்டாம் நாள் நிகழ்வுகளாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய முன்றிலில் ஆண்களுக்கான 40 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, பெண்களுக்கான 15 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி 25 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப்போட்டி, 8 மைல் மூன்று சில்லு சைக்கிள் றிக்சோ ஓட்டப்போட்டி, கழகங்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி என்பன இடம்பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் முன்றிலில் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவையின் தலைவர் பொன். மதிமுகராஜா விஜயகாந் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகி மங்கல இசை, தமிழ் மரபிசை, நினைவுப் பேருரை, எம்.ஜி.ஆர் விருது வழங்கும் நிகழ்வு, கவியரங்கு, பட்டிமன்றம், கரகாட்டம், நாடகம், வில்லிசை, மெல்லிசை, இசை அமுதம், தமிழினச் சட்ட மன்றத்தின் விவாதம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மேற்படி நிகழ்வுகளில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு அனைத்துலக சமூக சேவைகள் நற்பணி பொதுப் பணி தலைமைச் செயலகம், அனைத்துலக எம்ஜிஆர். பேரவை தலைமையகம் ஆகியன கேட்டுள்ளது. (வ-311)

# மண்டைக்கல்லாறு புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அடிக்கல் நடப்பட்டது



யாழ்ப்பாணம், டிசெ.23

மண்டைக்கல்லாறு புனித அந்தோனியார் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

ஆலயத்துக்கான அடிக்கல்லை பூநகரி பங்குத்தந்தை அருட்பணி பிறாயண் அடிகளாரும் மற்றும் ஆலய மூப்பர் மடுத்தீஸ் ஆசைத்துரையும் நட்டனர்.

பாசையூர், பள்ளிக்குடா, நாச்சிக்குடா, பூநகரி பகுதிகளிலிருந்து வந்த மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (வ-23)

# கைத்தொழில் அதிகார சபையால் கிளிநொச்சியில் பயிற்சி நெறிகள்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத் தப்படும் கற்கை நெறிகளான வீட்டுமின்னிணைப்பு நீர்க்குழாய் பொருத்துதல், குளிரூட்டி திருத்துதல், தாதிஉதவியாளர், கணினிகற்கை அனுமதிப்பத்திரம் ஆகிய கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பங்களை தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், ஆனந்தபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (வ)

## முதியோர் விழிப்புணர்வு நிகழ்வு

முதியோர் செயலகமும் வட மாகாண சமூக சேவைத் திணைக்களமும் இணைந்து வவுனியா செட்டிகுள பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த 19ஆம் திகதி முதியோர் நலன் தொடர்பான விழிப்புணர்வு செயல மர்வு ஒன்றை நடாத்தியுள்ளன.

பிரதேச செயலக கணக்காளர் பா.ஜெயபாஸ்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 50இற்கும் மேற்பட்ட வயோதிபர்கள் கலந்துகொண்டனர். வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாஸன் முதியோர் தொடர்பாக கலந்துரையாடலில் ஈடுபட்டார். சமூக சேவைத் திணைக்களத் தின் நிதியுதவியுடன் செட்டி குளத்தில் உள்ள மெனிக்பாம் என்ற இடத்தில் முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.(வ)

# வினைத்திறன்காண் பெறுபேற்றின் தாமதத்தால் அதிகாரிகள் விசனம்

நாவற்குழி, டிசெ.24

சமூக சேவைகள் அதிகாரிகளை முதலாம் வகுப்புக்கு பதவி உயர்த்துவதற்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சையின் பெறுபேற்றை இரண்டு வருடங்களாகியும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழு இது வரையும் வெளியிடவில்லை.

குறிப்பிட்ட சில அதிகாரிகள் மட்டுமே இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய போதும் விடைத்தாள்களைத் திருத்திப் பெறுபேற்றை வழங்க ஏன் தாமதம் ஏற்படுகிறது என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

பத்து வருட திருப்திகரமான சேவையைப் புரிந்தோர் முதலாம் வகுப்புக்குத் தரம் உயர்த்தப்படும் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு வந்த போதும் மேற்படி பெறுபேறு தாமதத்தால் அவர்கள் உள்வாங்கப்படாதமை குறிப்பிடத்தக்கது. (வ-121)

## வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.24

வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் கடமையாற்றும் இணைந்த சேவைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் ஊடாக எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-207)

பிறந்த தின வாழ்த்து



அம்பலம் ஜெயரத்தினம்

இவர் தனது 65 ஆவது பிறந்த நாளை இன்று (24.12.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவரை இன்னும் பல ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழவேண்டும் என எங்கள் குலதெய்வமாகிய அழகாபுரி அருள்மிகு சோலை வைரவ முருகப்பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பான
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேர்த்தி சுபாநு
செட்டியார் மடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
(1941)(3.6.7)

தலைநகரில் தங்குமிட வசதி

Rooms A/C, Non A/C, Attached Bath room, T.V, புகையிரத நிலையம் , பஸ்தரிப்பு நிலையம், பொதுச் சந்தை மிக அருகில், சகல வசதிகளையும் கொண்ட (New Oasiss rest) ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். முன் பதிவு ஏற்றுக் கொள்ளப்படும்.
இல.135, மெலிபன் வீதி, கொழும்பு-11
தொ.பே: 0112338437, 0112323449, 0112470209.
(10693)(6-19-8)

பாராட்டி வாழ்த்துகிறோம்

செ.உதயகுமார் அவர்கள்
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், நிர்வாகம்)



இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு II
திறந்த போட்டிப்
பரீட்சையில் 1993 இல் தெரிவாகி
தென்மராட்சி வலயத்தில்
கல்வி அபிவிருத்தி
பிரதிக் கல்விப்பணிப்பாளராக ...!
வடமராட்சி வலயத்தில் நிர்வாகக்
பிரதிக் கல்விப்பணிப்பாளராக...!
சீருடனே சேவை செய்தே பட்டம் பல பெற்றே
செம்மையோடு மேலதிக
மாகாணக் கல்விப் பணிப்பாளராக (நிர்வாகம்)
உயர்ந்து நிற்கும் உத்தமரை வாழ்த்துவதில்
உவகை அடைகின்றோம் நாமும்!
வடமராட்சி முதுகல்வியியல்மாணி
நண்பர்கள் அணி VH I.
(சி/7147) (2-6-7)

சாவகச்சேரியில்
20% தள்ளுபடியுடன்
மாபெரும்
மலிவு விற்பனை
இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பெண்களுக்கான அழகிய சல்வார், சாறி, கொட்டன் சாறிகள்.
சிறுவர்களுக்கான ஆடைகள்.
மரியம்'ஸ்
பெண்களுக்கான பெருமை மிகுந்த ஆடையகம்
இடம் : "கலா, காமென்ட்"
16.A, கண்டி வீதி, சாவகச்சேரி (கொமஸியல் வங்கி அருகில்)
திகதி : 20.12.2011 தொடக்கம் 31.12.2011 வரை.
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
5000/= இற்கு அதிகமாக கொள்முதல் செய்தால்
800/= பெறுமதியான அழகிய With பிளஸ் கொட்டன் சாறி Free
தொடர்புகளுக்கு: 0777140844,0718034848
(11851)(3.6.7)

ஆயுஷ்ய ஹோம வாழ்த்து



# பாகிஸ்தான் பிரதமரின் பதவியைப் பறிக்க சதி

## அவர் ஆவேசம்

இஸ்லாமாபாத்,டிசெ.24
ஜனநாயக அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட என்னைப் பதவியில் இருந்து தூக்கி எறியும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியா? அல்லது, ராணுவ ஆட்சியா தேவை? என்று மக்கள் முடிவு செய்ய வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆவேசமாகத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானை உருவாக்கிய, ஜின்னா பிறந்த நாள் விழா தொடர்பாக நடந்த விழாவில்,பாகிஸ்தான் பிரதமர் கிலானி பங்கேற்று பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மே மாதம் அபோதாபாத்தில் ஒசாமா பின்லேடன் அமெரிக்க ராணுவ வீரர்களால் கொல்லப்பட்டதிலிருந்து, அரசுக்கு அதிக நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பின், பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் தெரிவித்து, அமெரிக்க வர்த்தகர் இலியாஸ் கிளப்பிய விவகாரம் தொடர்பாக தற்போது பாகிஸ்தான் மேன் நீதிமன்றில் வழக்கு நடக்கிறது.

மெமோகேட் என்றழைக்கப்படும் இந்த விவகாரம், பாகிஸ்தான் ராணுவத்தின் கை ஓங்கி இருப்பதை வெளிப்படுத்தியது. பாகிஸ்தான் உளவு அமைப்பான, ஐ.எஸ்.ஐ. மற்றும் ராணுவம் சேர்ந்து பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சியைக் குலைத்து விடும் என்ற கருத்து மேலோங்கி வருகிறது.



இந்தப் பரபரப்பில், நாடு இருக்கும் சூழ்நிலையில் கிலானி மேலும் தெரிவித்ததாவது;

அரச அதிகாரத்தையும் தாண்டி மற்றொரு அரசு செயற்படுவது சரியானதல்ல. ஜனநாயக அரசைத் தூக்கி எறியும் சதி முயற்சிகள் நடக்கின்றன. இது எனக்குத் தெரியும். ஆட்சியில் இருந்தாலும், இல்லை எதிர்க் கட்சியாக இருந்தாலும், நாங்கள் மக்கள் உரிமைகளைக் காக்க போராடுவோம். ராணுவ அமைச்சகமும், பிரதமரின் கீழ் செயற்படுகிறது என்பதை உணர வேண்டும். எவராவது தாங்கள் சுயேச்சையாகச் செயற்படுவதாக நினைத்தால் அது தவறு.

ஆகவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியா ? அல்லது, ராணுவத்தின் தலைமையிலான சர்வாதிகார ஆட்சியா ? என்பதை, மக்கள் முடிவு செய்ய வேண்டும்- இவ்வாறு கிலானி பேசினார்.

இது பாகிஸ்தான் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (ந)

# அமெ.நிறுவனத்தில் உளவு பார்த்த சீன நாட்டவருக்கு 7 ஆண்டுச் சிறை

வாஷிங்டன்,டிசெ.24
அமெரிக்க நிறுவனத்தில் உளவு வேலை பார்த்ததாகக்கைது செய்யப்பட்ட சீனாவைச் சேர்ந்த ஒருவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த விவசாய நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்த சீனாவைச் சேர்ந்த ஹூவாங்ஹெச்யூ கடந்த 2003 முதல் 200 8 ஆம் ஆண்டுவரை மேற்கண்ட நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த காலகட்டத்தில் அந்நிறுவனத்தின் வர்த்தக ரகசியங்களை சீன நிறுவனத்துக்கு அளித்ததாகப் புகார் கூறப்பட்டது.இதுமட்டுமன்றி ஜேர்மன் நாட்டுக்கும் ரகசியங்களை விற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. இதன் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட இவருக்கு இது குறித்து விசாரணை நடத்திய இண்டியானா பகுதியைச் சேர்ந்த நீதிபதி வில்லியம் லாரன்ஸ் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

ஹூவாங் ஏற்கனவே இதுபோன்ற வழக்கு ஒன்றுக்காக 25 ஆண்டுகள் சிறைதண்டனை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)



சிகிச்சைக்காக துபாய் சென்று கடந்த வாரம் நாடு திரும்பிய பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரியை (இடது), அந்த நாட்டுப் பிரதமர் யுசுப் ரசா கிலானி இஸ்லாமாபாத் அதிபர் மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

# இரட்டைத் தலை ஆண் குழந்தை !

## பிரேசிலில் அதிசயம்

பிரேசிலில் நாட்டில் ஒரு பெண்ணுக்கு தலைகள் ஒட்டப்பட்ட நிலையில் இரட்டை ஆண் குழந்தை பிறந்துள்ளது. ஆனால் முழு உடலும் இணைந்து உள்ளது. தலைகள் மட்டும் தனித் தனியாக உள்ளன.



இந்தக் குழந்தைக்கு இரு மூளைகளும், இரண்டு முள்ளந்தண்டு எலும்புகளும், ஓர் இதயமும் உள்ளன. இரண்டு தலைகள் மூலமும் உணவு வழங்கப்படுகின்றது. இரண்டு வயிறு உள்ளதா? என்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தவில்லை.

இந்த அதிசயமான குழந்தை பிறந்தது குறித்து மருத்துவமனையின் நிர்வாக இயக்குநரான னெய்லா டெகாஸ் கருத்துத் தெரிவிக்கையில்;

குழந்தையின் உடல் சாதாரண குழந்தையின் உடல் தோற்றத்தைப் போலவே இருக்கின்றது. இரு தலைகளில் ஒன்றை அறுவைச் சிகிச்சை மூலம் நீக்குவது பற்றி ஆலோசித்துக் கொண்டு இருக்கின்றோம்.

இரண்டு தலைகளில் உள்ள மூளைகளும் வேலை செய்வதாக இருப்பதால் எதை நீக்குவது என்பது குழப்பமாக உள்ளது-என்றார். (ந)

# பாகிஸ்தான் ராணுவத்தினர் மீதான தாக்குதல் தற்காப்பு நடவடிக்கையே


## நேட்டோ அறிக்கையில் தெரிவிப்பு

வாஷிங்டன், டிசெ.24
கடந்த நவம்பர் மாதம் பாகிஸ்தான் இராணுவ சோதனை நிலையம் மீது நடத்தப்பட்ட நேட்டோ படையின் விமானத் தாக்குதல் தற்காப்பு நடவடிக்கையே என்று நேட்டோ சார்பில் நேற்றுமுன்தினம் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க பாதுகாப்புத் துறையும் இந்தச் சம்பவத்துக்குத் தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதம் 26ஆம் திகதி ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள பாகிஸ்தான் ராணுவச் சோதனைச் சாவடியை நோக்கி அமெரிக்கா தலைமையிலான நேட்டோ விமானப் படை தாக்குதல் நடத்தியது. இதில் 28 பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் அமெரிக்கா-பாகிஸ்தான் உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்தியது.

இந்நிலையில், நேட்டோ சார்பில் நவம்பர் மாத சம்பவம் குறித்து நடந்த விசாரணையின் முடிவில் ஓர் அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் ,ஆப்கானிஸ்தான் எல்லையில் அமைந்த சோதனைச் சாவடி மீது நடத்தப்பட்ட தாக்குதல் நேட்டோ படையினரின் தற்காப்புக் காகவே நடத்தப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. (ந)

# ஸ்டீவ் ஜோப்ஸூக்கு கிராமி விருது



லாஸ்ஏஞ்சல்ஸ், டிசெ. 24
சமீபத்தில் புற்று நோயால் மரணம் அடைந்த பிரபல அப்பிள் கணினி நிறுவுநர்களில் ஒருவர் ஸ்டீவ் ஜோப்ஸூக்கு இந்த ஆண்டு மரணம் அடைந்தவர்களை கௌரவிக்க வழங்கப்படும் போஸ்துமஸ் கிராமி விருது வழங்கப்படுகிறது. இதற்கான அறிவிப்பை அமெரிக்காவின் ரெக்கார்டிங் அக்கடமி வெளியிட்டுள்ளது.

ஸ்டீவ் ஜோப்ஸ் தனது உயரிய கணினிக் கண்டுபிடிப்புகளான ஐ பாட், ஐ.டியூன் மூலம் இசையை உலகம் பரப்ப சேவை செய்துள்ளார். அதற்காக அவருக்கு இந்தக் கிராமி விருது வழங்கப்படுகிறது. இதற்கான சிறப்பு விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி நடக்க இருக்கிறது. (ந)

# நியூசிலாந்தில் 5.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம்

கிறிஸ்ட்சர்ச்,டிசெ.24
நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் நகரில் இன்று 5.8 என்ற ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நில நடுக்கத்தால் பீதி அடைந்த மக்கள், வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதன் போது கட்டடங்கள் லேசாகக் குலுங்கின. இருப்பினும், சேத விவரங்கள் குறித்து உடனடித் தகவல் ஏதுமில்லை.

சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளதாகவும், மின்சாரம், தொலைப்பேசி உள்ளிட்ட இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே நகரில் கடந்த பெப்ரவரி மாதம் 6 புள்ளி 3 ரிச்டர் அளவிலான நில நடுக்கம் ஏற்பட்டதில் 181 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# அனல் மின் ஆலைக்கு எதிராக சீனாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

பீஜிங்,டிசெ.24
சீனாவின் குவாங்டோங் மாநிலத்தில் அமைந்திருக்கும் அனல் மின் சக்தி ஆலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதியில் வசிக்கும் ஏராளமான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் போது அவர்கள் அங்குள்ள அரச கட்டடங்களையும் தாக்கினர். இதனால் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல் துறை அதிகாரிகள் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதோடு அவர்கள் மீது தாக்குதலும் நடத்தியுள்ளனர். இதனால் நாட்டில் வன்முறை வெடிக்கும் அபாயகரமான சூழ்நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்துக் கோயிலை உரிமை கொண்டாடும் விவகாரம்

## தாய்லாந்து - கம்போடியா நாடுகள் சமரசம்

பாங்கொக்,டிசெ.24
எல்லைப்பகுதியில் சர்ச்சைக்குள்ளான இந்துக்கோயிலை உரிமை கொண்டாடும் விவகாரம் குறித்து தாய்லாந்து - கம்போடியா ஆகிய இருநாடுகளும் சமரசம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளன.

தாய்லாந்து - கம்போடியா எல்லையில் போனோபென் நகரில் மிகவும் பழைமையான சிவன் கோவில் ஒன்று உள்ளது. இந்தக் கோயிலை கடந்த 2008 ஆம் ஆண்டு உலக கலாசாரச் சின்னமாக ஐ.நா.வின் யுனெஸ்கோ அறிவித்தது. இதனையடுத்து தாய்லாந்தும், கம்போடியாவும் சிவன் கோவிலுக்கு உரிமை கொண்டாடின. இதனால் இருநாடுகளிடையே போர் மூண்டது.

இதனையடுத்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் கடந்த ஜூலை மாதம் இரு தரப்பினரும் தங்களது இராணுவத்தை விலக்கி கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் இரு நாடுகள் சமரசம் செய்து கொள்ள முன் வந்துள்ளன. அதன்படி இருநாட்டு இராணுவ அமைச்சர்களிடையே பேச்சு நடந்தது. இதில் தாய்லாந்து இராணுவ அமைச்சர் யூதாஸாக் சசிபிரேபா, கம்போடியா இராணுவ அமைச்சர் டீபன்னாக் சந்தித்து பேசினர். இதில் இரு தரப்பிலும் இராணுவத்தை விலக்கி கொள்வது, இருநாட்டு இராணுவ உயரதிகாரிகளைக்கொண்ட செயற்குழுவை அமைப்பது எனவும் கம்போடியாவுக்கு சொந்தமான பகுதிகளில் உள்ள கலாசாரக் கோவில்கள் எதனையும் தாய்லாந்து உரிமை கொண்டாடாது எனவும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01 . 01 . 1944



விண்ணில் 18 . 12 . 1998

**அமரர் சின்னப்பொடி நல்லதம்பி**
**(திரவியம்)**

பாசத்தின் உறைவிடமே பண்பின் ஒளிவிளக்கே அறிவின் இருப்பிடமே ஆண்டுகள் பதின்மூன்று ஆகியும் ஆற வில்லை எம்மனம் காலங்கள் எத்தனை கடந்தாலும் மாறாது உங்கள் நினைவலைகள்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சாந்தா தோட்டம்,
ஆவரங்கால் மேற்கு.

(11962)(6-7-8)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1980 இல் பிறந்த 7 இல் செவ்வாய் கிரகபாவம் 67 உடைய அரச உத்தியோகம் பார்க்கும் மண மகளுக்கு தகுந்த மணமகன் தேவை. வெளிநாடும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0775478251

## Organ/ violin Notes

Organ , Guitar, புல்லாங்குழல், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் இசை வகுப்புகள் நடைபெறுகின்றன. சுரவீணா இசைமன்றம்,
18/1, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொடர்பு: 0777031293

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## மாடுகள் இன்று ஏலத்தில்

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட அறுகு வெளிப் பகுதி களில் கடந்த வாரம் கட்டாக் காலியாகப் பிடிக்கப்பட்ட மாடுகளில் ஒரு தொகுதி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட வுள்ளதாகப் பிரதேச சபை யின் தலைவர் சி.துரைராஜா தெரிவித்தார்.(ம-131)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

**திருமதி குபேந்திரராஜா சறோஜினிதேவி**



மலர்வு 02.08.1943
உதிர்வு 24.12.2010

துக்கம் தாழவில்லை
துயரம் நீங்கவில்லை
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
ஓடிவிட்டது ஒருவருடம்
ஆழிபோல் உங்கள் நினைவுகள்
அலைபோல் அடிக்கிறது
ஓடிவிட்டதே ஒருவருடம்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
என்றும் உங்கள் நினைவில்
கணவர், மகன், மகள்மார்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(11487)(6-7-8)



# வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட ஆசிரியைகளின் இடமாற்றம் இரத்து

## ஆண்கள் மூலம் சமப்படுத்த முடிவு

பெரியநீலாவணை,டிசெ.24

கிழக்கு மாகாண இடமாற்றத்தினால் வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட பெண் ஆசிரியைகளைத் தமது சொந்த வலயப் பாடசாலைகளுக்கு மீண்டும் பணியாற்ற மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீலினால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணை மீதான அவசர கூட்டத்தின் போதே இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண இடமாற்றத்தில் கல்முனை கல்வி மாவட்டத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்திற்கு பெண் ஆசிரியைகள் இடமாற்றப்பட்டிருப்பதனால் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து ஆராயப்பட்ட போதே இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டதுடன், இடமாற்றப்பட்ட பெண் ஆசிரியைகளுக்குப் பதிலாக ஆண் ஆசிரியர்களை சமப்படுத்துவதற்கு இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்ட மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயகக்கல்விப் பணிப்பாளர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைத் தங்களது முறைப்பாட்டில் சமர்ப்பித்துள்ள ஆண் ஆசிரியர்கள் மீதும் கவனம் செலுத்துவதெனவும் உடன்பாடு காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் புதியவர்களை நியமனம் செய்யும்போது ஆசிரியர் தேவையுள்ள திருகோணமலை மாவட்டத்திற்கு அனுப்புவதுடன் அங்கு நீண்டகாலம் பணியாற்றுகின்ற வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை சொந்த மாவட்டத்திற்கு மீண்டும் அனுப்புவதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவிலில் ஏற்கனவே ஆசிரியர் தேவைப்பட்டுள்ள நிலையில் அங்கிருந்து ஏனைய வலயங்களுக்கு அனுப்பப்பட்ட பொத்துவில் பிரதேச ஆசிரியர்கள் மீள அனுப்பப்படுவதுடன் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ள இடமாற்றத்திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி புதிய கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கும் இந்தக்கூட்டத்தில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

ஆசிரியர் இடமாற்றத்தின் போது தனிப்பட்ட முறையில் பாடமாற்றம் செய்த ஆசிரியர் விடயத்தை விசாரணை செய்வதற்குரிய பணிப்புரையொன்றும் இதன்போது விடுக்கப்பட்டுள்ளது. (ச)

## கொங்கிறீட் வீதி

மட்டக்களப்பு,டிசெ.24

கிழக்கு மாகாணத்தில் 450 கிலோ மீற்றர் வீதி கொங்கிறீட் வீதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு பதினொராயிரத்து நூறு மில்லியன் ரூபா செலவில் 750 கிலோ மீற்றர் வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்படும் என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வீதி அபிவிருத்தி முன்னேற்றம் தொடர்பான விசேட கலந்துரையாடல் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ச)

## கண்டியில் விமானத்தளம்; மார்ச்சில் பணிகள் ஆரம்பிக்க ஏற்பாடு

கண்டி,டிசெ.24

கண்டியில் அமைக்கப்படவுள்ள புதிய விமானத் தள பணிகளை எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்க ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

புதிய விமானத் தளத்தை அமைப்பதற்குப் பொருத்தமான நிலப் பிரதேசமொன்றைத் தெரிவுசெய்வது தொடர்பாக அண்மையில் கண்டிக்குச் சென்ற அமைச்சர் கண்டிப் பிரதேசத்தில் கண்காணிப்புக்களை மேற்கொண்டிருந்தார்.

விமானத்தளம் அமையும் நில அமைப்புத் தொடர்பான ஆய்வறிக்கையை இருவார காலத்துள் தயார்படுத்துமாறும் அமைச்சின் செயலாளருக்கு அவர் பணித்துள்ளார். (ச-22)



காலநிலை மாற்றத்திலிருந்து சூழலைப் பாதுகாத்தல் என்னும் திட்டம் மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கும் வகையில் மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன் மரக்கன்றை நடுகின்றார்.

## எம்பிலிப்பிட்டிய நகரசபையின் வரவு-செலவுத்திட்டம் தோல்வி

எம்பிலிப்பிட்டிய, டிசெ.24

எம்பிலிப்பிட்டிய நகரசபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 3 வாக்குகளும், எதிராக 4 வாக்குகளும் பெறப்பட்டன. ஆளும் ஐ.ம.சு.மு உறுப்பினர் ஒருவர் வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய நகரசபையின் ஆட்சி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஓய்வுபெற்ற ஆசிரியர் கஞ்சாவுடன் கைது

தியத்தலாவை, டிசெ. 24

நன்கு காயவைத்த நான்கரைக் கிலோ கஞ்சாவை பொதி செய்துகொண்டிருந்த ஓய்வுபெற்ற ஆசிரியரொருவரை பிபிலை பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர்.

பிபிலை, மஹியங்கனை வீதியில் மிக நீண்டகாலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுவந்த இவர் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றை அடுத்து அங்கு சென்ற பொலிஸ்குழு அவரைக் கைதுசெய்ததுடன் கஞ்சாவையும் கைப்பற்றினர்.

## கல்முனை மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேறியது

அம்பாறை, டிசெ.24

கல்முனை மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் சபை உறுப்பினர்களின் ஏகமன தான அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆளும் தரப்பாகக் கொண்ட கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாநகரசபை சபா மண்டபத்தில் முஹம்மட் சிரகஸ் மீராசாகிப் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் முதல்வர் முஹம்மட் சிரகஸ் மீராசாகிப் 2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைச் சபையில் சமர்ப்பித்தார்.

வரவு செலவுத் திட்டம் மீது உரையாற்றிய சகல கட்சி உறுப்பினர்களும், மிகச் சிறந்த வரவு செலவுத் திட்டமெனப் பாராட்டியுள்ளனர்.

தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் நான்கு பேர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் உட்பட கூட்டத்தில் கலந்துகொண்ட ஆளும் தரப்பு உறுப்பினர்கள் வரவு செலவுத்திட்டத்திற்கு ஏகோபித்த அங்கீகாரத்தைத் தெரிவித்ததுடன், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது. (ச-30)

## தொழிலாளர்கள் பணி நிறுத்தம் சத்தியாக்கிரகமாக மாறியது

ஹற்றன்,டிசெ.24

ஹற்றன் - வெலிஓயா தோட்டத் தொழிலாளர்களின் பணி நிறுத்தப் போராட்டம் சத்தியாக்கிரகப் போராட்டமாக மாற்றமடைந்துள்ளது.

தோட்ட முகாமையாளரை வெளியேற்றக்கோரி வெலிஓயா தோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகப் போராட்டமொன்றில் நேற்றுமுன்தினம் முதல் ஈடுபட்டனர்.

இவர்களின் போராட்டம் காரணமாக தோட்ட அலுவலகத்தின் பணியாளர்கள் பீதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

வேலைப்பளுவை அதிகரித்துக் கொள்வதற்காக தோட்ட நிர்வாகம் இராணுவத்தையும் பொலிஸாரையும் வரவழைத்துத் தம்மை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்ட வெலி ஓயா தோட்ட முகாமையாளரை இடமாற்றக்கோரி கடந்த 13 ஆம் திகதி முதல் சுமார் 1000 தொழிலாளர்கள் பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



## இ.போ.ச.-தனியார் இணைந்த பஸ் சேவை

### கிழக்கில் மீண்டும் நடைமுறைப்படுத்த முடிவு

மட்டக்களப்பு,டிசெ.24

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்துச் சபைகள் இணைந்து கிழக்கு மாகாணத்தில் இணைந்தபஸ் சேவையை நடத்துவது தொடர்பாக ஆராயும் உயர் மட்ட மாநாடு திருகோணமலை கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் வீதிப்போக்குவரத்து அமைச்சில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்துச் சபைகள் சமரசமாக இணைந்து மாகாணத்தில் இணைந்த பஸ் சேவையை வழங்குவது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் தொடர்பாக தீர்க்கமான முடிவை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## குளங்களின் வான்கதவுகள் திறப்பு

மட்டக்களப்பு,டிசெ.24

கிழக்கில் பெய்துவரும் அடைமழையினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குளங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ். இன்பராஜா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு உன்னிச்சைக் குளத்தின் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டு நான்கு அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளதுடன், உறுகாமம் குளத்தின் இரண்டு வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. வாகனேரி குளம் மற்றும் வடமுனைக் குளம், வெலிக்கா கண்டி குளம் என்பவற்றின் வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# முல்லேரியா சூட்டுச் சம்பவம்: இரு வழக்குகளைத் தொடர்க!

## நீதிவான் ஆலோசனை

கொழும்பு,டிசெ.24

முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பாக இரண்டு வழக்குகளைத் தொடருமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன அல்விஸ், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்றுமுன்தினம் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்டமை மற்றும் துமிந்த சில்வாவிற்குக் காயம் ஏற்படுத்தியமை ஆகியன இரண்டு சம்பவங்களாகும் என்று நீதிவான் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு சம்பவங்களையும் ஒன்றாக விசாரணை செய்வது சிக்கலைத் தோற்றுவித்துள்ளது என்று கொழும்பு மேலதிக நீதிவான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டியுள்ளது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஷாம் அபேசேகர நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகளை இரண்டாக மேற்கொள்வது மிகவும் உகந்ததாகும் என்று நீதிவான் வலியுறுத்தினார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவிடம் பாதுகாவலராக சேவையாற்றிய காமினி ஜயநாத் என்பவரைக் கைதுசெய்துள்ளதாக, சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஷாம் அபேசேகர குறிப்பிட்டார்.

இதுதவிர, துமிந்த சில்வாவின் பாதுகாப்பிற்காக இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உள்ளிட்ட 3 பேர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 18 சந்தேகநபர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 10 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் பாதுகாப்புக்காக இருந்த பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்து, இந்தப் பிரச்சினையை மேலும் குழப்புவதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முயற்சிப்பதாக பாரத லக்ஷமனின் உறவினர்கள் சார்பாக பிரசன்னமாகிய சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர். அதேபோன்று, துமிந்த சில்வாவின் பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கைதுசெய்தமை தொடர்பில் அவரின் சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

அரச இரசாயன பகுப்பாய்வாளரால் கண்டறியப்பட்ட விடயங்களே சந்தேகநபர்கள் இருவரையும் கைதுசெய்ய காரணமாக அமைந்தது என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

எனினும், இரண்டு சந்தேகநபர்கள் தொடர்பிலும் காணப்படுகின்ற சாட்சியங்கள் குறித்து இரண்டு அறிக்கைளை எதிர்வரும் 3ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-சி)

# நத்தார் பண்டிகையையொட்டி விசேட பஸ் போக்குவரத்து

கொழும்பு,டிசெ.24

நத்தார் பண்டிகைக் காலத்தினை முன்னிட்டு கொழும்புக்கு வருகின்ற மற்றும் கொழும்பிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்குச் செல்கின்ற பயணிகளின் நலன் கருதி நேற்றுமுன்தினம் முதல் விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு மேலதிகமாக 40 பஸ்கள் வீதம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் தேவையைக் கருத்தில்கொண்டு மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளது எனவும் இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவிக்கின்றது.

இந்த விசேட பஸ் சேவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

இதற்காக புறக்கோட்டை மத்திய பஸ் தரிப்பிடத்தில் விசேட பிரிவொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தச் சேவையை முன்னெடுக்குமாறு அனைத்து டிப்போக்களின் முகாமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைப் போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது. (ச)

# சிறிகொத்தா தாக்குதல் குறித்து விசாரணை நடத்த விசேட குழு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமாக சிறிகொத்தா மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய நால்வர் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மற்றும் அதற்கு வழிகாட்டியவர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவென இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவின் மேற்பார்வையின் கீழ் இந்தக் குழு செயற்படவுள்ளது. இந்தக் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா, சட்டத்தரணி நிசங்க நாணயக்கார, ரஜீவ செனவிரத்ன மற்றும் உபாலி பெரேரா ஆகியோர் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

நத்தார் புதுவருட பரிசில்களுக்கு......




★ சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
★ நவீன டிசைன், ரெடிமேட் ஆடைகள்
★ நவநாகரிக நங்கையர்களுக்கேற்ற சல்வார், சுடிதார், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் ஆடைகளுக்கும்
★ ஆடவர்களுக்கான சிறுவர்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளுக்கும்

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

No.10,11,POWER HOUSE RD.
GRAND BAZAAR, JAFFNA
T.P: 021 222 9399 (மலாயன் கபே முன்பாக)
(சி/08548)(2.6.7)

பொது மக்கள் கவனத்துக்கு



பல நோயாளர்களின் முறைப்பாடுகளுக்கு இணங்க பொது மக்களுக்கு இந்த அறிவித்தலைத் தருகின்றோம். வைத்திய கலாநிதி க.இராமசுவாமியின் இராமசுவாமி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கிலுள்ள (பழம் சந்தி) மேல்மாடி வீட்டில் மட்டும் ஆரம்பம் முதல் தொடர்ந்து இயங்கி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் இந்த வைத்தியசாலைக்கு வேறு எந்தவிதமான தொடர்போ, கிளைகளோ இல்லை என்பதை தெளிவாகக் கூறுகின்றேன். நோயாளர்கள் வரும்போது தயவு செய்து விளம்பரப் பலகையையும் மேல்மாடிவீட்டையும் அவதானித்து வரவும். வதந்திகளினால் நோயாளர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதுடன் எமது வைத்தியசாலையின் பெயருக்கும் களங்கம் ஏற்படுகின்றது. எனவே வதந்திகளை நம்ப வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கு சகல விதமான வியாதிகளுக்கும்
ஆயுள்வேத முறைப்படி சிகிச்சை அளிக்கப்படும்.

தொலைபேசி: 021 222 3809.
டாக்டர் இராமசாமி மகேஸ்வரன் (D.A.M)
(11890)(3.6.7)

## நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலி

15 ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு



களபூமி - காரைநகர்

அமரர் வேலுப்பிள்ளை சண்முகம்
மண்ணில் - 04.04.1910
விண்ணில் - 09.12.1996

திருமதி சண்முகம் சரஸ்வதி
மண்ணில் - 16.09.1915
விண்ணில் - 04.01.2011

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் இருந்து எம்மை
நல்வழி நடத்திய அன்புத் தெய்வங்களே நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது

சென்ற வருடம் சிவபதம் அடைந்த அம்மா
உங்களை இறுதிக்காலம் வரை மனங்கோணாது
இரவு பகல் கண்துஞ்சாது பார்த்த தங்கள் மருமகள்
ஆறாத் துயரில் உள்ளார், உங்கள் ஆத்மசாந்திக்காக
பிரார்த்திக்கும், மகன், மருமகள்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.21, முதலாம் ஒழுங்கை,
குருமன்காடு, வவுனியா.
- திரு.திருமதி ச.பாலசுப்பிரமணியம்.
(11895)(2-6-9)

# ராம நாமம் ஒலிக்கும் இடங்கள் எங்கும் ஆனந்தக் கண்ணீர் மல்க வீற்றிருப்பார் மாருதி

ஆஞ்சநேயருக்கு இன்று தேர்

இணுவில், மருதனார்மடத்தில், ஆஞ்சநேயர் கோயில் தேர்த்திருவிழா இன்றாகும். காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று, காலை 9 மணிக்கு பெருமான் தேரில் பவனி வருவார். நாளை ஞாயிறு ஹனுமத் ஜெயந்தி தினம். அதனை முன்னிட்டு காலை 8 மணிக்கு 108 கலச அபிஷேகம் இடம்பெறும். கூட்டுப் பொங்கல் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்று இணுவில் மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய தேர்த் திருவிழா. இறைவன் புரியும் ஐந்தொழில்களில் அழித்தல் தொழிலை பிரதிபலிக்கிறது இந்தத் தேர்த்திருவிழா. இறைவன் தேரில் ஏறி பாவங்களை அழித்துப் பக்தர்களைக் காக்கும் புனித நிகழ்வு இது. இதனை ஸம்ஹாரம் என்று சொல்வர். ஸம்ஹாரம் என்பது நன்றாக ஒடுக்குதல் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது.

சிதறிக் கிடக்கும் மலர்களைத் தொகுத்து மாலையாக ஒடுக்குதலை, நிரல்படுத்துதலை ஆரம் என்பர். அதன் வழி ஸம்ஹாரம் என்பது இன்னும் நன்றாக ஒடுக்குதல் என்றாகிறது.

உண்மையில் இறைவன் யாரையுமே முழுமையாக அழிப்பது இல்லை. அவர்களின் தீய எண்ணங்களை அழிக்கிறார் அவ்வளவே.

சூரபத்மனை வென்று முருகன் அவனை சேவலும் மயிலும் ஆக்கினார். கஜமுகாசுரனை வென்று விநாயகர் தனக்கு வாகனம் ஆக்கினார். ஆக அங்கே அழித்தல் என்பது பாவங்களை ஒடுக்கி பக்குவப்படுத்துதல் என்றாகிறது.

இங்கே ஆஞ்சநேயர் கண்கண்ட தெய்வம். கலியுக தெய்வம். ராமாவதாரம் முழுமையுற்று சரயுநதியில் மூழ்கி விஷ்ணு வைகுண்டம் ஏகிய போது... ''பாற்கடலில் நீங்கள் ஸ்ரீ ராமனாக இருக்கமாட்டீர்கள். அங்கே பரந்தாமனாகத்தானே இருப்பீர்கள். எனது மன, மொழி, மெய் மூன்றிலுமே ஸ்ரீ ராமனையே நான் காண்கிறேன் இனியும் காண விரும்புகிறேன். எனவே நான் வைகுண்டம் வரவில்லை இங்கு ராம வழிபாட்டிலேயே இருக்கின்றேன்'' என்று சேதுவைக் காத்தபடி பூமியிலேயே தங்கிவிட்ட பெருந்தெய்வம் இந்த ஆஞ்சநேயர்.

– பிரம்மஸ்ரீ குமார. சுவாமிநாதசர்மா.

மகாபலி, பரசுராமர், அஸ்வத்தாமன், வியாசர், விபீஷணன், கிருபன் ஆகியோர் போன்று நிரந்தரத் தன்மை பெற்ற சிரஞ்சீவித் தெய்வம் இந்த அனுமன். இந்த எழு வருமே சப்த சிரஞ்சீவிகள் எனப்படுகின்றனர்.

எனவே கலியுகத்தில் வாழும் தெய்வமான ஆஞ்சநேயரை வணங்கி மனதார தியானிப்பதன் மூலம் துன்பங்களிலிருந்து மீள முடியும்.

நாம ஜெபங்களிலேயே அதி உன்னதமானதும் சக்தி மிக்கதுமானதுமாக இருப்பது ராமநாமம். அக்னி, சூர்ய, சந்திர பீஜங்கள் இதிலே உள்ளடங்கி சச்சிதானந்த பரப்பிரம்மமாக இருப்பது இந்த ராம நாமத்தின் தனிச் சிறப்பு.

எங்கெல்லாம் பக்தியோடு ராம நாமம் ஒலிக்கின்றதோ அங்கெல்லாம் கைகள் தொழுத நிலையில் ஆனந்தக் கண்ணீர் மல்க அருளைப் பொழிந்தபடி இந்த மாருதி வீற்றிருப்பார். எனவே பிறவிக்கடல் கடந்து, பிறவிப் பயன் அடைந்து, சகல பாவ வினைகளும் தீர ராமநாமம் சொல்லி இந்த ஆஞ்சநேயர் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டு பேரானந்த பெரு வாழ்வான பரம் பொருளின் பாத கமலங்களைச் சரண் புகுவோமாக....



ஸ்ரீராம ஜெயம்

# இந்த ஆண்டு எப்படியிருக்கிறது நத்தார் கொண்டாட்டம்

'இந்தமுறை கிறிஸ்மஸுக்கு எனக்கு என்னப்பா வாங்கித் தருவீங்க?' ஆவலுடன் கேட்கும் மகளுக்கு எதை வாங்கிக் கொடுப்பது என அப்பாவின் சிந்தனை ஒருபுறம் இருக்கும்.

வருடத்தில் ஒருதடவை வரும் இந்தப் பெருநாளை இப்படியெல்லாம் கொண்டாட வேண்டும் என மனைவியின் திட்டமிடல் இன்னொருபுறம்.

இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை! எதிர்பார்ப்பு! அன்றாட வாழ்க்கைச் செலவின் உயர்ச்சி எதை வாங்குவது எப்படிச் செலவைத் தாக்குப் பிடிக்கப் போகின்றேன் என்பது குடும்பத் தலைவனின் சிந்தனையில் அடிக்கடி வந்து போகும்.

கடைகளில் தொங்கும் நத்தார் பொம்மைகளும், பலூன்களும், கிறிஸ்மஸ் மரங்களும் நத்தார் கொண்டாட்டத்தின் பரபரப்பைத் தூண்டிவிடுகின்றது.

எந்தக் கடைகளைப் பார்த்தாலும் நத்தார் கொண்டாட்டச் சிறப்பு ஏதாவது இருக்கும்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டம் என்றாலே ஓர் ஆர்ப்பாட்டம் எனக் கலகலப்பாக இருக்கும். ஆண்டுதோறும் இயேசுவின் பிறப்பை எடுத்துக் காட்டும் முகமாக இந்தவிழா கொண்டாடப்படுகின்றது.

மேற்குலக நாடுகளின் பரவலாக இது தோன்றினாலும் கிறஸ்தவர்களுக்கு டிசெம்பர் 25 ஓர் புனித நாள்தான்.

இவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் நோக்குடன்தான் கடைகளிலும் ஓர் பரபரப்பு. விசேட விலைக்கழிவு. நினைவுப் பரிசு, வெகுமதி என வியாபாரம் களை கட்டத் தொடங்கியுள்ளது.

அத்தோடு இன்னொரு தனிச்சிறப்பாக நத்தார் தாத்தா ஆடி ஆடி வரவேற்கும் காட்சி தனிச் சந்தோசத்தை உண்டுபண்ணுகின்றது.

ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள், ஒளி விழா நிகழ்வுகள் டிசெம்பர் 25 ஐ இனிதாக வரவேற்கிறது. அத்துடன் ஆலயங்களிலும் வீடுகளிலும் சிறிய சிறிய பொம்மைகளால் வடிவமைக்கப்பட்ட மாட்டுத் தொழுவங்கள் சிறிதொரு மூலையில் இயேசுவின் பிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என இந்துக்கள் காத்துக் கொண்டிருக்கும் தருணம் புத்தாண்டை (2012) இனிதாக வரவேற்கத் தொடங்கிவிட்டார்கள் கிறிஸ்தவர்கள்.

இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தாலும் ஏழைக் குடும்பங்களுக்கு ஏது வழி? சாதாரண அன்றாடச் செலவையே ஜீரணிக்க முடியாத அவர்கள் குடும்பத்தில் மாட்டுத் தொழுவம் போடுவது எங்கே? சிறிய சிறிய பொம்மைகள் வாங்குவது எங்கே? 'ம்...ம்...' என்றே பெருமூச்சு விடத்தான் தோன்றும், முடியும்.

ஏழை வீட்டில் அமைதியின் சொரூபமாய் இறைவன் தோன்றுவான் என்பது ஒருபுறம் இருக்க அந்த ஏழைப் பிள்ளையின் ஆசைகள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற யார் கை கொடுப்பார்கள். பிள்ளையின் ஆனந்தத்தில்தான் இறைவனைக் காண முடியும்.

நத்தார் தாத்தா எங்கள் வீட்டையும் வருவார் என ஆவலோடு படலையை எட்டிப் பார்க்கும் பிள்ளைக்கு அடுத்த வீட்டுப் பையன் பலூன் ஊதிப் பட்டாசு கொளுத்துவதைப் பார்த்து ஏக்கப்படும் பிள்ளைக்கு ஏது மனதில் சந்தோசம்.

ஆனால் நாகரிக மோகம் எம்மவரை விட்டு வைக்கவில்லை. அடுத்தவன் எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன வந்தது என்று நினைக்கும் சமுதாயம் தான் எமது சமுதாயம்.

எனது குடும்பம், எனது சந்தோசம் தான் முக்கியம் என்பது அவர்களது கருத்து.

எப்படியோ இன்று இயேசு பாலன் அவதரிப்பார் எமது கஷ்டங்கள் தீரும் என்று ஆலயத்தில் பிரார்த்தனை செய்ய மட்டும் ஏழையவனால் முடியும்.

சோபனா






## வாழ்த்தி மகிழ்கின்றோம்



(17.12.2011) இல் கொழும்பு
ஜோன் டி சில்வா ஞாபகார்த்த
கலையரங்கில்
இலக்கியத்துறைக்கான
**'கலாபூஷண'**
**விருது**
பெற்ற எமது பாசத்திற்குரிய
தாத்தா
**கலாபூஷணம்**
**கே.ஆர்.டேவிட்**
அவர்கள் மேலும் பல சிறப்புகள்
பெற்றுப் பல்லாண்டு
வாழ்கவென
வாழ்த்துகிறோம்.
(11977) (2,6,7)

செயோன் (கனடா), மேவின் (கனடா), காவியா (ஆனைக்கோட்டை)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 22.12.2011 அன்று இறைவனடி சேர்ந்த
யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி
எமது மதிப்புக்குரிய



**மரியசீலன் பிள்ளை**
**மரியதாசன்**
அவர்களின் இழப்புச்
செய்தி அறிந்து மிகுந்த
துயர் அடைகின்றோம்.
அன்னார் யாழ்.மாநகர
சபையின் மக்களின்
சுகாதார மேம்பாடு கருதி
10 வருட காலமாக
அர்ப்பணிப்புடன்
சேவையாற்றியுள்ளார்.
இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
(12011) (2-6-7)

J/101, நீராவியடி சுகாதாரப் பரிசோதகர்,
குடும்பநல உதவியாளர்கள்,
பொதுமக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### விஸ்வலிங்கம் சண்முகம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி சிவன்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சண்முகம் 22.11.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற பதிவாளர், சாவகச்சேரி நீதிமன்றம்), திசைவீரசிங்கம் (கனடா), காலஞ்சென்ற பரராசசிங்கம் (பரம்ஸ்), யோகேஸ்வரி, காராளசிங்கம் (அமெரிக்கா), நாகேஸ்வரி (ஜேர்மனி), பூபாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற இரத்தினசிங்கம், மகேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.12.2011) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் இடம்பெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்கோயிலடி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
C/7149(6-7-8)

### பொன்னையா பத்மநாதன் *(ராசன்)*

நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிட மாகவும் கொண்ட பொன்னையா பத்மநாதன் 21.12.2011 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மரு மகனும் சுகந்தினியின் அன்புக் கணவரும், பைரவி, வாதுனன் ஆகி யோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற அருளம்பலம், அன்ன லட்சுமி, சண்முகநாதன், கயிலைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிற்சபேசன், மனோரஜனி, சவுந்தரரஜனி, நடன சபேசன், ஞானசபேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.12.2011 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.கயிலைநாதன்
(11974)(3.6.7)(சகோதரன்)
நுணாவில் மத்தி, சாவகச்சேரி

## மதுபானசாலை நாளை மூடப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.24

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை சகல மது பானசாலைகளும் மூடப்படும் என யாழ். மாவட்ட மதுவரித் திணைக் களப் பொறுப்பதிகாரி என். கிருபாகரன் அறிவித்துள்ளார்.

நாளைய தினம் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்படுவதால் வீதிகள் மற்றும் பொது இடங்களில் மதுப்பிரியர்களால் ஏற்படும் அசம்பாவிதங்களை இடைநிறுத்தும் நோக்குடன் சகல மதுபானசாலைகளும் மூடப்பட்டிருக்கும்.

இதேவேளை மதுவரித் திணைக் களத்தின் அறிவித்தலை மீறி மதுபான சாலைகள் திறந்திருந்தாலோ அல்லது மறைவாக மதுசாரம் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-313)

### Scooty Pep விற்பனைக்கு

NPHX தொடரிலக்கம் கொண்ட Scooty PEP விற்பனைக்குண்டு.
விலை ரூபா 70,000/=
தொடர்பு: 0779581741

### காணி விற்பனைக்கு

மறுவன்புலவு மேற்கு, சாவகச்சேரியில் கட்டடம், வீடு(கள்) அமைப்பதற்கான 50 பரப்பு வெள்ளை மணல் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771744528
0718474720

### தேவை

கோண்டாவில் சந்திக்கும் யாழ். இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் கடை வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0776989082

### காணி விற்பனைக்கு

ஏ-9பிரதான வீதியில் ஆசைப்பிள்ளை ஏற்றத்துக்கு அருகில்( மிருசுவில்)"6" பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: 0776099004

### திருமண சேவை

70 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 35 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

71 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 30 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

67 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 30 பாவமுடைய B.Com ஆசிரியருக்கு ஆசிரியை மணமகள் தேவை.

77 இல் பிறந்த 2 இல் செவ்வாய் பாவம் 15 உள்ள B.Sc ஆசிரியருக்கு படித்த அழகான மணமகள் தேவை.

மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், சைவபோசனமுள்ள அரச உத்தியோகத்தரும் பாவம் கூடிய குறைந்த அரச உத்தியோகத்தரும், செவ்வாய் பாவம் கூடிய அரச உத்தியோகத்தர்களும், வர்த்தகர்களும்,வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளனர்.

தொடர்பு: கமலக்கண்ணன்
திருமணசேவை
இல 171/7 மனோன்மணி அம்மன் கோயிலடி, நல்லூர். 0776070862

### பெண் உதவியாளர் தேவை

சாவகச்சேரி S.K உணவகத்துக்கு சமையல் வேலையில் உள்ள பெண்ணுக்கு உதவியாளராக வேலை செய்யக்கூடிய பெண் தேவை.
தொடர்பு: 0775591366

## உளம் கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



(17.12.2011) சனிக்கிழமை இந்து சமய
கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்
**'கலாபூஷண' விருது**
பெற்ற கலைவாணர் நாடக மன்றக் கலைஞர்
**இராசையா பீதாம்பரம்**
**(பற்துணம் அண்ணா)**
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதோடு மேலும் பல
சிறப்புக்களைப்
பெற்று நீடூழி வாழ
வண்ணை காமாட்சி அம்பாள்
அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:- திருச்செல்வம்
புஸ்பராணி குடும்பத்தினர்(தவில்)
- நாச்சிமார் கோவிலடி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு
13.08.1956

உதிர்வு
24.11.2011



### அமரர் மாணிக்கம் தேவராசா

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும்
அரவணைத்து இனிய வாழ்வு தந்த தெய்வமே
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த
உங்கள் சிரித்த முகங் காண்பதற்கு
ஏங்கித் தவிக்கின்றோம் தினந் தினம்
உங்கள் செல்லமான அருமை மகளும் மகனும்
பிரிவு தாங்காது தவிக்கின்றாரிங்கு
உங்களை ஈன்றெடுத்த தாயுந் தந்தையும்
கலங்கி நிற்கின்றார்
எம்முடன் சேர்ந்து வாழ்ந்த ஒவ்வொரு கணமும்
எமக்குச் சொர்க்கமாய் இருக்குதையா
உங்களை என்றும் எங்கள் இதயங்கோயிலிலிருத்திப் பூசிப்போம்.
(11987)(2,6,7)

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.12.2011) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாதையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தே.செங்கமலம் (மனைவி),
தே.பிரகாஸ், தே.மதுவந்தி (பிள்ளைகள்)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர் பழனிநாதன்
சர்வேஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தை
**பொன்னம்பலம் பழனிநாதன்**
அவர்கள் கடந்த 20.12.2011 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்தமையையிட்டு அவர்களின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(C/7144)(7-8-6)

வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.(மல்லாகம்)

ஊழியர் நலன்புரிசங்கம்,

## பத்தொன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
12.08.1941

உதிர்வு
22.12.1992

அமரர்
**இளையதம்பி**
**நடராசா**
(முன்னாள் நடத்துநர்,
இ.போ.ச. கோண்டாவில்
சாலை)

திதி:- 24.12.2011

ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
நீகாதையா உம் நினைவுகள்

உங்கள் நினைவுடன்.

'திருத்தணி',
கைதடி தெற்கு. கைதடி. (7881)(2-6-7) - குடும்பத்தினர்.

நெல்லியடியில்...
**London College Of Achievers**

- A.A.T (குறைந்த தகைமை O/L)
- வங்கித்துறை சார்ந்த பாடநெறிகள் (CBF & DBF குறைந்த தகைமை O/L)
- G.A.Q, B.A கற்கை நெறிகள் (யாழ்ப்பாணம், பேராதனை)
- IELTS , Spoken English(O/L,A/L முடித்தவர்கள், வீட்டில் இருப்போருக்கும்
- சிறுவர்களுக்காக லண்டன் பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள் (வயதெல்லை 6-15)

6-11 தரம் மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பிரத்தியேக வகுப்புக்கள் (ஆங்கிலம், தமிழ் மொழி)

APPROVED BY SPECTRA SKILLS

திருமகள் சோதி வீதி,
நெல்லியடி.021 226 4206

உடன் தொடர்புகளுக்கு : 0770424588

(சி/7146)(3.6.7)

# கேரள- தமிழக மக்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கிறது மத்திய அரசு

சென்னை, டிசெ.24

தமிழ்நாட்டில் நதிநீர் பங்கீடு ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வருகிறது. காவிரி, முல்லை பெரியாறு போன்றவை பல மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதால் மக்களை மோதவிட்டு மத்திய அரசு வேடிக்கை பார்க்கிறது. இதனைக் கைவிட்டு இந்த பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுமாறு கம்யூனிஸ்ட்டு கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

பெரம்பலூரில் அரியலூர், பெரம்பலூர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 5 ஆவது மாவட்ட மாநாடு நடைபெற்றது. இதில் அவர் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:



முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை கேரள அரசு ஏற்க வேண்டும். இந்தப் பிரச்சினை தொடர்பாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது பேரிடர் ஆணையம் ஒரு தனி குழுவை அமைத்தது தவறு. இந்தப்

**பாண்டியன் காட்டம்**

பிரச்சினையில் தேவைப்படும்போது அனைத்துக் கட்சிக் கூட்டத்தை தமிழக முதலமைச்சர் கூட்ட வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழக மீனவர் பிரச்சினை, நதிநீர் பிரச்சினை போன்ற தமிழகம் முன்வைக்கும் எந்த பிரச்சினையிலும் மத்திய அரசு தமிழக மக்களுக்கு எதிரான நிலையை எடுத்து வருகிறது. மத்திய அரசு கொள்கைகளை முறியடிக்கவும், நேர்மையான பொருளாதாரக் கொள்கை அமைக்கவும் ஒரு மாற்று அரசு அமைய தமிழகக் கட்சிகள் அனைத்தும் ஒரு கூட்டாக முயற்சி மேற்கொள்ள வேண்டும் - என்றார். (வ)

# அண்ணா நூற்றாண்டு நூலகத்தை தேசிய பொதுநூலகமாக்கலாமா?

சென்னை, டிசெ.24

சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை தேசிய பொது நூலகமாக ஏன் அறிவிக்கக் கூடாது என்ற பொதுநல மனுவை விசாரித்த உயர் நீதி மன்றம், அதுகுறித்து 4 வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணி பிரபாகரன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் பொது நல மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அதில், அண்ணா நூற்றாண்டு நூலகம் இந்தியாவின் மிகப்பெரிய நூலகம் என்றும் தெற்காசியாவில் இரண்டாவது பெரிய நூலகம் என்பதையும் அவர் சுட்டிக்காட் டியிருந்தார். தேசிய பொது நூலகம் என்ற வரையறைக்

**உயர்நீதிமன்றம் மத்திய அரசுக்கு நோட்டீஸ்**

குள் இந்த நூலகம் கொண்டுவரப்படத் தகுதியானது. எனவே அண்ணா நூற்றாண்டு நூலகத்தை தேசிய பொது நூலகமாக அறிவிக்க வேண்டும் என்றும் தமது மனுவில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த மனு தலைமை நீதிபதி எம்.ஒய். இக்பால், நீதிபதி சிவ ஞானம் அடங்கிய முதன்மைக் குழு முன்பு விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், மத்திய அரசின் வழக்கறிஞர் நான்கு வாரங்களில் பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர். வழக்கை ஜனவரி 19 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (வ)

## மரக்கறி லொறியில் ரூ.98 லட்சம் பணம்

கோவை, டிசெ.24

மேட்டுப்பாளையத்திலிருந்து கேரள மாநிலம், எர்ணாகுளம் நோக்கி மரக்கறி ஏற்றிக்கொண்டு சென்ற லொறியில் 98 லட்ச ரூபா பணத்தை பொலிஸார் பறி முதல் செய்துள்ளனர்.

இந்த லொறியில் பணம் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தையிட்டு நள்ளிரவில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். லொறியைச் சோதனை செய்தபோது அதில் கணக்கில் வராத 98 லட்ச ரூபா பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 5 பேரிடம் போலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட பணம் குறித்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (வ)



*சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு நாமக்கல் மாவட்டம், முத்துக் காளிப் பட்டியைச் சேர்ந்த மேகநாதன் என்பவர் 25 ஆயிரம் ருத்ராட்சங்களால் சிவ சிம்மாசனத்தை உருவாக்கியுள்ளார். இதனை வைத்து பவானியில் நேற்று முன்தினம் விசேட வழிபாடு நடைபெற்றது.*

# குழந்தைகளுக்கு எய்ட்ஸ் நோய்: விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவு

டில்லி,செ.24

இந்திய மாநிலமான குஜராத்தில் குழந்தைகளுக்கு எய்ட்ஸ் நோய் பரவியது குறித்து விசாரணை நடத்தும்படி மாநிலப் பொலிஸாருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு ஜூனாகத் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலையில் சுமார் 23 குழந்தைகள் மர்ம நோய் தாக்குதல் காரணமாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சையின் ஒரு பகுதியாக ரத்தம் செலுத்தப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட ரத்தத்தில் எயிட்ஸ் கிருமி இருந்ததால் குழந்தைகள் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து குழந்தைகளின் பெற்றோர் வைத்தியசாலைக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளனர். இந்த வழக்குக் குறித்து விசாரித்த குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி பாஸ்கர் பட்டாச் சார்யா விசாரணை நடத்தி அறிக்கை தர பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தநிலையில் வைத்தியசாலைக்கு ரத்தம் வழங்கும் தனியார் நிறுவனங்களின் உரிமங்களை அரசு ரத்துச் செய்ய நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று பெற்றோர் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த நீதிபதி பாஸ்கர் பட்டாச் சார்யா விசாரணைக்குப் பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

# பரமக்குடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவு

மதுரை, டிசெ.24

பரமக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்த மதுரை உயர் நீதிமன்றக்கிளை உத்தரவிட்டுள்ளது. முன்னதாக இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்றும் இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்றும் கோரி சட்டத்தரணிகள் முருகன், விஜயன் ஆகியோர் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த கே.என். பாஷா மற்றும் வேணுகோபால் ஆகியோர் தலைமையிலான குழு துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது.

## இந்தியா வருகிறார் ஜப்பான் பிரதமர்

ஜப்பான் பிரதமர் யோஷிஹிகோ நோடா அடுத்த வாரம் 2 நாள் பயணமாக இந்தியா வரவுள்ளார். எதிர்வரும் 27 ஆம் திகதி இருநாடுகளிடையே நடைபெறும் 6 ஆவது உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்க உள்ளார்.

இந்த பயணத்தின்போது இந்தியா-ஜப்பான் இடையிலான பொருளாதார உறவுகளை அவர் ஆய்வு செய்ய உள்ளார். மேலும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்த உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது

கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் சிறுபான்மையோருக்கு இட ஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதன்படி, ஓ.பி.சி. பிரிவினருக்கான 27 சதவிகித இட ஒதுக் கீட்டில் இருந்து உள் இட ஒதுக்கீடாக 4 புள்ளி 5 சதவிகிதம் சிறுபான்மையோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், இதனால் இஸ்லாமியர், சீக்கியர், கிறிஸ்தவர், பௌத்தர் மற்றும் பார்சிகள் ஆகியோர் இதன் மூலம் பலனடைவர். மத்திய அமைச்சரவையில் இதற்கான தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த கூட்டத்தில் ரயில்வே அமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் மூத்த தலைவருமான தினேஷ் திரிவேதி கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## வெற்றுக்குடங்களுடன் ஆர்ப்பாட்டம் தமிழர்களுக்கு பாரதிராஜா அழைப்பு



சென்னை, டிசெ.24

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் நீதி கோரி சென்னையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை வெற்றுக்குடங்களுடன் கண்ணகி சிலை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று மே 17 இயக்கம் சார்பில் இயக்குநர் பாரதிராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் நீதி கேட்டு மே 17 இயக்கம் சார்பில் நாளை ஞாயிற்றுக் கிழமை சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் மாலை கண்ணகி சிலைக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடை பெறும். இதில் வெற்றுக்குடங்களுடன் தமிழர்கள் பெரும் திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று அழைக்கிறேன்.

அதேபோல கம்பம் மற்றும் தேனியில் எதிர்வரும் 30 ஆம் திகதி தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று அவர் அறிவித்தார். (வ)

### முல்லைப் பெரியாறு விவகாரம்

# ஈரோட்டில் நேற்றுக் கடையடைப்பு

ஈரோடு, டிசெ.24

கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு விவகாரத்தைத் தொடர்ந்து நேற்று தமிழத்தில் ஈரோட்டில் கடை அடைப்பு போராட்டம் நடத்தப்படுகிறது.

கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை காரணமாக ஈரோடு மாவட்ட அனைத்து வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், நேற்று நடக்கும் கடையடைப்புக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

முல்லைப் பெரியாறு அணைக்கு சேதம் ஏற்படாமல் தடுக்க மத்திய பாதுகாப்பு படையை மத்திய அரசு அனுப்ப வேண்டும். உச்சநீதிமன்ற உத்தரவுப்படி நீர்மட்ட அளவை 142 அடியாக உயர்த்த வேண்டும்.

எந்தச்சூழலிலும் கேரள அரசு புது அணை கட்ட அனுமதிக்கக்கூடாது. கேரளாவில் வாழும் தமிழர்கள், சபரிமலைக்குச் செல்லும் பக்தர்களின் உயிர், உடைமைகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். தமிழகத்தில் வாழும் கேரளாவைச் சேர்ந்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். தமிழக மக்களின் ஒட்டு மொத்த உணர்வை மத்திய, மாநில அரசுகளுக்குத் தெரிவிக்க இந்த கடையடைப்பு நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசைக் கண்டித்தும், இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு சுமூக தீர்வு காண வலியுறுத்தியும் கரூர் நகரில் நேற்று அனைத்து வணிக நிறுவனங்களின் சார் பில் ஒரு நாள் கடையடைப்புப் போராட்டம் நடைபெற்றது. வணிகர்களின் போராட்டத்துக்கு ஓட்டோ ஓட்டுனர்கள் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் 07.11.2011 அன்று உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெற்ற

**செல்வன் சச்சிதானந்தன் தமிழன்பன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன் மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நயினை நாகபூசணி அம்மனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

– நண்பர்கள்.

(1206)(3:8:7)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தம்பி தவமணி

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி தவமணி 22.12.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சகுந்தலம் தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை சின்னத் தம்பியின் மனைவியும், இந்திராதேவி, சத்தியலோஜினி, செந்தூர் வேல்,மகேந்திரன்(கனடா), இளங்கீரன் ஆகியோரின் அன்புத் தாயும் குலசிங்கம்(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மின்சாரசபை), மகேந்திர ராசா (கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்) , பத்மாதேவி, ஜெயதேவி ஆகியோரின் அன்பு மாமியும் றஜீபன் (காலாசார உத்தியோகத்தர் - கரைச்சிப் பிரதேச செயலகம்), சுஜீபன்(லண்டன்), பிரகாஜீனி, சுகாஜினி(யாழ். பல்கலைக்கழகம், இறுதியாண்டு மாணவி), சிந்துஜன், யருஷ் (கனடா), தர்மினி, ஜெனனி, செல்லத்துரை ( மாவிரதன், இந்து கலாசார திணைக்களம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மிதுன்(லண்டன்), அபிநயா, அட்சயா, ஹர்சணன், தக்ஷா, சிவகர்சா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.12.2011) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலவளவு, ஏழாலை மேற்கு, ஏழாலை.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை,

# பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

குருநகர், டிசெ.24

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்கு வீதியில் யாழ் கடற்கரை வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள யாழ் கடற்றொழில்மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் கடற்றொழில் சம்பந்தமான பயிற்சிநெறிகள் ஜனவரி ஆரம்பமாக உள்ளதாக கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்ரியாம்பிள்ளை அறியத் தந்துள்ளார்.

வெளியிணைப்பு இயந்திரம் பழுது பார்த்தல், பெண்களுக்கான கடலக தொழில் நுட்பப் பயிற்சி, ஆழ்கடல் இயந்திர தொழில் நுட்பம், கடலக இயந்திர தொழில் நுட்பம், கடல் வரைபடம் வாசித்தல், செய்மதி உபகரணம்இயக்குதல், கடல் நீந்தல் பயிற்சி நெறி, டெக் அலுவலகர் டிப்ளோமா பயிற்சி, தும்பு கண்ணாடி நாரிழைப் படகு திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இந்தப் பயிற்சி வகுப்புக்களின் போது ஜப்பானால் வழங்கப்பட்ட புதிய கலங்கள், புதிய உபகரணங்கள் ஆகியவை செய்முறைப் பயிற்சிக்களுக்காக உபயோகப் படுத்தப்படவுள்ளன.

பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்பும் பயிற்சியாளர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுய விண்ணப்பம் படிவங்களை இந்தக் கல்லூரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-51)

# கிறிஸ்மஸ் வழிபாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ.24

கிறிஸ்மஸ்ஸை முன்னிட்டு ஆலயங்களில் விசேட ஆராதனைகளும் வழிபாடுகளும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

அல்வாய் வடக்கு சற்கோட்டை புனித பிரான்சிஸ்சி சவேரியக் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கு ஆலயப் பங்குத் தந்தை வணபிதா எம். அகஸ்ரின் அடிகளால் கிறிஸ்துப் பிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும்.

* * *

யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் கிறிஸ்துப் பிறப்புத் திருப் பலி ஒப்புக் கொடுக் கப்படுவதுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு முதலாம் திருப்பலியும், காலை 7.15 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் இடம்பெறும்.

* * *

இளவாலை புனித யூதாதேயு ஆலயத்தில் இளவாலைப் பங்குத் தந்தை வண பிதா எம். கிறிஸ தோபர் அடிகளார் தலைமையில்இன்று சனிக்கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கு திருப்பலிஒப்புக் கொடுக்கப் படும்.(ம-313,51)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
28.10.1958



விண்ணில்
24.11.2011

## அமரர் கணபதிப்பிள்ளை விக்னேஸ்வரராசா

[ஆசிரியர்]

அன்னார் எம்மை விட்டுப் பிரிந்த வேளையில் உடனடியாக வந்து உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட, அஞ்சலி உரை ஆற் றிய கல்விச் சமூகத்தினர், நோயுற்ற வேளையில் சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதியர்கள், தந்திமூலமும், தொலைபேசி மூலமும், அனுதாபம் தெரிவித் தோர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று [24.12. 2011] சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கல ந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மாரீசன்கூடல்,
இளவாலை.

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி வாசுகி கெங்கேஸ்வரன்

(யாழ். பல்கலைக்கழகம் விவசாய விஞ்ஞானபீடம் -2004)



தோற்றம் : 09.01.1978

மறைவு: 03.01.2011

திதி: அமாவாசை



ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறுமா எங்கள் துயரம் கண்மூடித் திறக்கும் முன் காலன் உன்னை அழைத்தானோ தினந்தோறும் உனது நினைவு, கண்ணீர்க்காவியமாகிறது உனது பிரிவால் நிம்மதியைத் தொலைத்து விட்டோம்.

60/4, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

உனது பிரிவால் வாடும் குடும்பத்தினர்.

(1982)(6-7-8)


# Computer Express

Institute Of Information Technology

## மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2012

O/L பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களுக்கு



அதிரடி கட்டணக்கழிவு

| Course | Duration | Old fee | Fee |
|---|---|---|---|
| Diploma in Microsoft office | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Desktop Publishing | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Web page Designing | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Graphic Designing | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Hardware Engineering | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Computerized Accounting | 3 Months | 15000 | 3000 |
| Diploma in Computer Science | 4 Months | 12500 | 2500 |
| Hon. Diploma in Computer Science | 4 Months | 12500 | 2500 |
| Hon. Diploma in Programming | 3 Months | 10000 | 2000 |
| AUTO CAD | 3 Months | | 2000 |

Advanced Diploma Courses

- Advanced Dip. in Multimedia
- Advanced Dip. in Video Editing
- Advanced Dip. in Networking

3000/=

100% செய்முறைப்பயிற்சி
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Batch i - 30/12/2011 - 9AM
Batch ii - 30/12/2011 - 3PM
Batch iii - 31/12/2011 - 9AM
Batch iv - 31/12/2011 - 3PM

No.15, Sirambiyadi lane, off Stanley Road, Jaffna.(ஆரியகுளத்துச்சந்திக்கு அருகில் கொசி Hotel மேல்) T.P No :- 021 222 8250, 077 722 2422, 077 490 7444



# பண்டிகைக்கால பரவசம்

## மொறட்டுவ தளபாடங்கள் விற்பனை

பண்டிகைக் காலங்களில் உங்கள் வீடுகளை அழகுபடுத்த,
மொறட்டுவையில் இருந்து விஷேடமாகக் கொண்டுவரப்பட்ட

சோபா செட்டுக்கள்,
அலங்கார சாப்பாட்டு மேசைகள்,
படுக்கைகள், கதிரைகள் மற்றும்
வீட்டுக்குத் தேவையான தளபாட வகைகள்

மிக விலைக்குறைவில் பெற்றுக்கொள்ளலாம்.
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலங்கை வங்கி பிரதான கிளை அமைந்துள்ள வேம்படி சந்தியில் அமைந்துள்ள காட்சியறைக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

சந்தர்ப்பம் டிசெம்பர் 20 முதல்
தை 20 வரை மட்டுமே.

காலை 8.30 மணியில் இருந்து இரவு 9.00 மணிவரை காட்சிச்சாலையில் பார்க்கலாம்.

பொருள்களுக்கு இரண்டு வருட உத்தரவாதம் தரப்படும்.
இன்றே விரையுங்கள்.
பண்டிகையைச் சந்தோஷமாகக் கொண்டாடுங்கள்.

(1993)(5,6,9)

# பான் கீ மூனின் அறிக்கையை விட ஆணைக்குழுவின் அறிக்கை மேல்

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.24

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையானது நாட்டு மக்களின் பிரச்சினைகளை சீராக ஆராய்ந்துள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஐக்கிய செயலாளர் நாயகத்தின் பணிப்புரைக்கமையத் தயாரிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கையைவிட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பெரும்பாலான பொதுமக்களிடம் சாட்சியங்களைப்பெற்ற ஆதாரங்களை கொண்டு அமையப்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை அலரி மாளிகையில் நடைபெற்ற கிறிஸ்மஸ் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். சகல இன மக்களின் நன்மதிப்புடன் எமது நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலை நிறுத்த இன்று எமக்கு புதியதொரு தருணம் ஏற்பட்டுள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார்.

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் உயிரிழப்பு

## கொஸ்கொடவில் சம்பவம்; தீவிர விசாரணை

கொழும்பு, டிசெ.24

கொஸ்கொட - கனேகொட பிரதேசத்தில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர் கொடகம பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொஸ்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அரச நத்தார் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்துகொண்டு ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறார்.

# சிறுவர் வேலைக்கு அமர்த்தல் வயதெல்லை நிர்ணயம் குறித்து நீதி அமைச்சு அதிருப்தி

கொழும்பு,டிசெ.24

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பில் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயதெல்லை குறித்து நீதி அமைச்சு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிருப்தி தெரிவித்தது.

தற்போது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் தொடர்பிலான வயதெல்லையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என நீதி அமைச்சின் செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி சுகத கம்லத் தெரிவித்தார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு தற்போது குறிப்பிடப்பட்டுள்ள 14 என்ற குறைந்த பட்ச வயதெல்லையின் மூலம் சிறுவர்களை சிறுவர்களே பாரமரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என அவர் கூறினார்.

இதனால், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள 14 என்ற குறைந்த பட்ச வயதெல்லையினை 18ஆக மாற்ற வேண்டும் எனவும் சுகத கம்லத் தெரிவித்தார்.

இதேவேளை, ''14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் மற்றும் அதற்காக தரகர் நடவடிக்கையில் ஈடுபடல் போன்றன மனித ஆட்கடத்தலுடன் தொடர்புடைய குற்றமாகும். இவற்றில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இலங்கையின் அபிவிருத்திக்கு சர்வதேச ஆதரவை திரட்டுகிறது சீனா

கொழும்பு,டிசெ.24

இலங்கை அபிவிருத்தியை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டுமாயின் அதற்கு சர்வதேச சமூகம் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என இலங்கையின் நெருங்கிய நட்பு நாடான சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நிலையான அபிவிருத்தியை உருவாக்க வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என சீனா கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையின் உள்விவகாரங்களில் கூடிய கவனம் செலுத்தி வருவதாக சீன வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் லியூமெயின் தெரிவித்துள்ளார். இலங்கை பிரச்சினைக்கு தீர்வுகாணும் திறன் இலங்கை மக்களிடம் உள்ளது என தாம் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டு!

# லண்டன் பௌத்த பிக்குவுக்கு எதிரான விசாரணை ஆரம்பம்

கொழும்பு,டிச.24

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள லண்டன் தேம்ஸ் பௌத்த விஹாரையின் தலைமை பிக்கு வண. பஹலகம சோமரத்னவுக்கு எதிரான விசாரணைகள் எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிக்கு, 16 வயது பெண்ணை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளமை மற்றும் பெண்ணை முறை தவறான வகையில் தாக்கியமை போன்றவற்றில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

அத்துடன் முறை தவறான தாக்குதல் ஒன்று தொடர்பில் கடந்த நவம்பர் 11 ஆம் திகதி மற்றுமொரு குற்றச்சாட்டும் பிக்குவின் மீது சுமத்தப்பட்டது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் Isleworth Crown நீதிமன்றத்தில் 65 வயதான இந்த பிக்கு மீதான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனினும், இதன்போது கருத்து வழங்கிய குறித்த பிக்கு தம்மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிராகரித்துள்ளார்.

# இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழ் எம்.பிக்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## பிரபா கணேசன் கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 24

இனப்பிரச்சினை தீர்வை இழுத்தடிப்பதுதான் அரசின் தேவையாக இருக்கிறது என இன்று தமிழ் மக்கள் கருத வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கட்சி பேதமின்றி அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய நிகழ்ச்சி நிரலை தயார் படுத்த வேண்டுமென ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடத்திற்கும் அதிகமாகியும் போர் ஆரம்பிக்கப்பட்ட காரணம் இன்னும் தீர்த்துவைக்கப் படவில்லை. அரசுடனான தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் பேச்சுகள் தோல்வியை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்தப் பின்னடைவிலிருந்து மீள்வதற்கு அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணையவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். பேச்சுகளில் ஈடுபடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே தலைமைப் பொறுப்பை ஏற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கடந்த காலங்களில் நான் பல தடவைகள் நாடாளுமன்றத்திலும், வெளியேயும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் அரசுடன் பேச்சுகள் நடத்துவதன் மூலம் எவ்விதமான தீர்வும் கிடைக்காது என்பதை அழுத்தமாக வலியுறுத்தி வந்தேன். இன்று பேச்சுகள் முறிவடையும் நிலைக்கு வருவதற்கு இதுவே காரணமாகி உள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் தீர்வை வழங்குவதற்கு சிங்கள அரசுகள் முன்வந்திருந்தன. தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரையும் இணைத்துக்கொண்டு அவர்களின் ஆலோசனையின்படி பேச்சு மேசைக்குச் சென்றிருந்தால் இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வு எமக்குச் சார்பாக இருந்திருக்கும்.

அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் ஒன்றிணைந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். இந்தத் தருணத்தை சாணக்கியமான முறையிலே உபயோகித்துக் கொள்ளவேண்டும்.

எமது ஒற்றுமையின்மையால் எமது சமூகத்தை பின்நோக்கி தள்ளிவிடக்கூடாது. அரசியல் அனுபவம்மிக்கவர்கள் என்று சொல்லிக்கொள்வதில் மாத்திரம் எவ்வித பிரயோசனமும் இல்லை. தென்னிலங்கை சிங்கள மக்களுக்கும் இனப்பிரச்சினை தீர்வில் பெரும் அக்கறை உள்ளது.

நாட்டின் யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு நிகரான துயரங்களைத் தென்னிலங்கை வாழ் தமிழ் மக்களும் அனுபவித்தார்கள். அரசின் மூலம் பெரும் அபிவிருத்திப் பணிகளை நாம் செய்து கொண்டிருக்கின்றோம். இனப்பிரச்சினை தீர்வின் மூலமாகவே முழுமையான அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ளலாம்.

அரசு தரப்பிலிருந்தாலும், எதிர்த்தரப்பிலிருந்தாலும் இனப்பிரச்சினை தீர்வில் அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான திட்டத்தை உடனடியாக உருவாக்கவேண்டும்.

# சீரற்ற காலநிலை சாரதிமார் கவனம்!

கொழும்பு, டிசெ. 24

சீரற்ற காலநிலையால் மத்திய மாகாண வீதிகளில் பயணிக்கும் வாகனச் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்தவேண்டும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக, நுவரெலியா நகருக்குள் பிரவேசிக்கும் வீதிகளில் கடும் பனிமூட்டம் நிலவுவதால் தெளிவற்ற காலநிலை காணப்படுவதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது. இதேவேளை, கண்டி - கம்பளை, கம்பளை-நுவரெலியா, கினிகத்தேன-ஹட்டன், ஹட்டன் - மஸ்கெலியா ஆகிய வீதிகளிலும் நுவரெலியா - பதுளை வீதியிலும் பனிமூட்டம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நுவரெலியா - உடபுசல்லாவ, உடப்புசல்லாவ - வெலிமட, தலவாக்கலை - டயகம ஆகிய வீதிகளிலும் பனிமூட்டம் அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஓ-சி)

# வென்றது யங்ஸ்ரார் அணி



யாழ்ப்பாணம், டிசெ.24

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்ஒளியில் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்மதீனா விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகியபோது இரண்டு அணியினரும் மிகவும் உற்சகத்தோடு மோதிக்கொண்டனர்.

இதன் போது அல்மதீனா விளையாட்டுக் கழக அணி தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டது.

இந்த நேரத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் முதலாவது கோலைப்போட்டது.

இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தமது அணிக்காகக் கோல்களைப் பெற வேண்டும். என்ற எண்ணத்தோடு களம் இறங்கி மோதிக் கொண்டனர்.

இரண்டு அணியினரும் எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் நுழைந்து கோல் பெற எடுத்த முயற்சிகள் பின் கள வீரர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டன.


இந்த வேளையில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி ஆட்டத்தை வேகப்படுத்தி இரண்டாவது கோலைப் பெற்றது. சிறிது நேரத்தில் யங்ஸ்ரார் தனது மூன்றாவது கோலையும் போட்டது.

ஆட்ட முடிவில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



சோட்டோக்கான் கராத்தே அக்கடமியின் வருடாந்த கராத்தே பயிற்சிப் பாசறை அண்மையில் பொகவந்தலாவவில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட யாழ்.கராத்தே ஆசிரியர்கள், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அர்ன ஆகியோர் படத்தில் உள்ளனர். (எ-23)

# சதுரங்க விழிப்புணர்வுக் கருத்தரங்கு



யாழ்ப்பாணம், டிசெ.24

வல்வை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணச் சதுரங்க சம்மேளனம் நடத்திய சதுரங்க விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் வல்வை ஒன்றிய மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் யாழ்ப்பாண சதுரங்கச் சம்மேளனத்தின் அங்கத்தவர்களான ஆர்.கே. ஆதவன், எஸ். பரமேஸ்வரன் எ.சிவரூபன் ஆகியோர் சதுரங்கம் தொடர்பான விளக்கங்களை வழங்கினார்கள். இதில் 40 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கு பற்றினர். (த-23)

# காங்கேசன் ஐக்கியம் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்ஒளியில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

அதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணிக்கும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கியவிளையாட்டுக்கழக அணி 71:55 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

(த-23)

# கூடைப்பந்தாட்ட சங்கத்தின் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து கூடைப் பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கூட்டம் மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆகவே நிர்வாக சபை உறுப்பினர்கள் கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார்.

(த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்ஒளியில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது.

அதில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

* கே.ஸி.ஸி.ஸி வெள்ளை அணி எதிர் வவுனியா விளையாட்டுக்கழக அணி (மாலை 6 மணி).
* ஒல்கோஸ்ட் விளையாட்டு கழக அணி எதிர் வவுனியா விளையாட்டுகழக அணி(இரவு 7மணி) (த-23)

# இந்தியாவுக்கு வாய்ப்பு அதிகம்

# ஆருடம் கணிக்கிறார் சப்பல்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்லும் வாய்ப்பு, இந்திய அணிக்கு அதிகம் உள்ளது, என்று ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் இயன் சப்பல் தெரிவித்துள்ளார்.

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளன. இதுவரை ஆஸ்திரேலிய மண்ணில், இந்திய அணி ஒருமுறை கூட டெஸ்ட் தொடரை வென்றதில்லை. இந்த முறை இந்திய அணி கிண்ணம் வெல்ல அதிக வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது.

இது குறித்து இயன் சப்பல் கூறியதாவது:

ஆஸ்திரேலிய மண்ணில் முதல் முறையாக டெஸ்ட் தொடரை வெல்லும் வாய்ப்பு இந்திய அணிக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு ஆஸ்திரேலிய அணியில் மார்ஷ், வொட்சன், ஜோன்சன் உள்ளிட்ட மூத்த வீரர்களுக்கு ஏற்பட்ட காயம் ஒரு காரணம். தவிர, டெஸ்ட் ஆட்டத்தில் போதிய அனுபவம் இல்லாத இளம் வீரர்களை தேர்வு செய்துள்ளனர். இது, இந்திய அணிக்கு சாதகமான விஷயம்.

முன்னாள் அணித்தலைவர் றிக்கி பொன்டிங், சமீபகாலமாக டெஸ்ட் ஆட்டத்தில் திறனின்றி தவித்து வருகிறார். இதனால் துடுப்பாட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சிறந்த டெஸ்ட் அனுபவம் பெற்றுள்ள இவர், இந்தத் தொடர் மூலம் இழந்த திறனை மீட்பார் என்று நம்புகிறேன்.

இந்திய அணியைப் பொறுத்தவரை, அதிரடி தொடக்க வீரர் சேவாக், அனுபவ வேகப் பந்துவீச்சாளர் சகிர்கான் ஆகியோரது செயற்பாடு, வெற்றிக்கு முக்கிய பங்குவகிக்கலாம். முன்னதாக, இவர்களது சிறப்பான செயற்பாடு, நிறைய டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் வெற்றிக்கு கைகொடுத்துள்ளது - என்றார்.

(15)

# எனக்குப் போட்டியாளர்கள் இல்லை

ரோஹித் சர்மாவை எனது போட்டியாளராகக் கருதவில்லை என்று இந்திய கிரிக்கெட் வீரர் விராத் ஹோக்லி தெரிவித்தார். ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் பதினொருவர் அணியுடனான ஆட்டத்தில் இருவரும் இணைந்து 78 ஓட்டங்கள் குவித்தனர்.

இந்த நிலையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

எதிர்காலத்தில் இருவருமே இணைந்து இந்திய அணிக்காக விளையாட உள்ளோம். எனது போட்டியாளராக ரோஹித்தை கருதவில்லை. என்னிடம் எப்போதுமே இதே கேள்வியைக் கேட்கின்றனர். இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் குறிப்பிட்ட இடத்தைப் பிடிக்க எப்போதுமே 2-3 பேர் காத்திருக்கின்றனர். நாங்கள் இருவருமே இணைந்து சிறப்பாக விளையாடி உள்ளோம். இது இந்திய கிரிக்கெட்டுக்கு ஆரோக்கியமானது. போட்டி இருந்தாலும் அது ஆரோக்கியமானதாகவே உள்ளது. பயிற்சி ஆட்டத்தில் 6 ஆவது வீரராக இறங்குவதற்கு பதில் 4 ஆவது வீரராக களம் இறங்கியது பயனுள்ளதாக இருந்தது.

விரைவிலேயே சில இலக்குகள் வீழ்ந்த நிலையில், 4 ஆவது வீரராக களம் இறங்கி புதிய பந்தை எதிர்கொண்டது சிறப்பான பயிற்சியாக அமைந்தது. சில பந்து பரிமாற்றங்கள் வீசப்பட்டுவிட்டால், பந்து ஓரளவு பழையதாகிவிடும். அதன் பின்னர் ஓட்டம் சேர்ப்பது ஓரளவு எளிதாகும். அதனால்தான் வலைப்பயிற்சியில்கூட புதிய பந்தையே அதிகம் பயன்படுத்துகிறோம்.

ஆஸ்திரேலிய அணியில் இப்போது பல இளம் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஒருகாலகட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய அனுபவ வீரர்களின் திறமையுடன் புதிய வீரர்களின் திறமையை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. இளம் வீரர்கள் பிரகாசிக்க சிறிது கால அவகாசம் தேவைப்படும். இந்தியாவுக்கு எதிராக ஆக்ரோஷமாக விளையாடுவது என்பது ஆஸ்திரேலிய வீரர்களின் மனப்பான்மை. அந்த மனப்பான்மை புதிய வீரர்களிடமும் இருக்கும். அதனால், ஆஸ்திரேலியாவுடனான தொடர் பரபரப்பானதாகவே இருக்கும். ஆஸ்திரேலிய அணியில் இப்போது இடம்பெற்றுள்ள வீரர்களும் ஆட்டத்தின் போக்கை மாற்ற வல்லவர்கள்தான். எனவே, புதிய வீரர்கள் என்பதால் அவர்களை குறைவாக மதிப்பிடமாட்டோம் -என்றார்

(15)

# ‘ஹொட் ஸ்பொட்’ தொழில்நுட்பம் இல்லை

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், ‘ஹொட் ஸ்பொட்’ தொழில்நுட்பத்தை பயன்படுத்த பி.சி.சி.ஐ. மறுப்பு தெரிவித்துள்ளது.

நடுவர் தீர்ப்பை மறுபரிசீலனை (யு.டி.ஆர்.எஸ்.) செய்யும் முறைக்கு ஏற்கனவே இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) எதிர்ப்பு தெரிவித்தது. இதையடுத்து ஆட்டத்தில் பங்கேற்கும் இரு நாடுகளும் ஒத்துக் கொண்டால் மட்டுமே யு.டி.ஆர்.எஸ். முறையை அமுல்படுத்த முடியும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) அறிவித்தது.

‘ஹொட் ஸ்பொட்’ எப்படி?

கடந்த இங்கிலாந்து டெஸ்ட் தொடரில், யு.டி.ஆர்.எஸ். முறையை நிராகரித்த இந்தியா, ‘ஹொட் ஸ்பொட்’ முறையை மட்டும் ஏற்றுக் கொண்டது. இதன்படி, ‘இன்பிரா ரெட் கமரா’ மூலம் வீரர்களின் அசைவுகள் கறுப்பு வெள்ளை (நெக்கட்டிவ்) படங்களாக பதிவு செய்யப்படும். பந்து துடுப்பின் மீதுபட்டால், அந்த இடத்தில் மட்டும் வெள்ளையாக தெரிவதை வைத்து, ஆட்டமிழப்புக் கொடுக்கலாம்.

பாதிப்பு அதிகம்:

ஆனால், இங்கிலாந்து தொடரில், லக்ஸ்மன் துடுப்பில், பந்து பட்டதாக சர்ச்சை எழுந்தது. இதனை ‘ஹொட் ஸ்பொட்’ முறையில் சரியாக உறுதி செய்ய முடியவில்லை. இதே போல டிராவிட்டுக்கும் பலமுறை தவறாக ஆட்டமிழப்புக் கொடுக்கப்பட்டது. இதையடுத்து ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் ‘ஹொட் ஸ்பொட்’ முறை வேண்டாம் என்று பி.சி.சி.ஐ. முடிவு செய்ததாக தெரிகிறது.

குழப்பமாக உள்ளது:

இது குறித்து ஆட்டத்தை ஒளிபரப்பும் ஆஸ்திரேலிய அலைவரிசை அதிகாரி பிராட் மெக்னாமரா கூறுகையில், கடந்த முறை ஆஸ்திரேலியா சென்ற போது, இந்திய அணிக்கு எதிராக தீர்ப்புகள் வழங்கப்பட்டதாக கூறப்பட்டது. இந்த நிலையில் யு.டி.ஆர்.எஸ். மற்றும் ‘ஹொட் ஸ்பொட்’ தொழில்நுட்பம் வேண்டாம் என்று கூறியுள்ளது வியப்பாக இருக்கிறது. இந்தத் தொடரில், இந்திய அணி சில பாதகமான தீர்ப்புகளை பெற்றால், யு.டி.ஆர்.எஸ்., வேண்டும் என்று கூறத் தொடங்கி விடுவர். நடுவர்கள் தவறு செய்தார்களா என்பதை அறிந்து கொள்ள, ரசிகர்களுக்காக மட்டும் ‘ஹொட் ஸ்பொட்’ மூலம் சர்ச்சைக்குரிய தீர்ப்புகள் காண்பிக்கப்படும் - என்றார். (15)

# சகிப் கலக்கல் கலிஸ் பின்னடைவு



டெஸ்ட் கிரிக்கெட்டின் சகல துறை வீரர்களுக்கான சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் தரவரிசையில் பங்களாதேஷ் வீரர் சகிப் அல் ஹசன் முதலிடத்தைப் பெற்றுள்ளார். நீண்டகாலமாக இதில் முதலிடத்தை வகித்த தென்னாபிரிக்க வீரர் ஜக் கலிஸை பின் தள்ளிவிட்டு சகிப் அல் ஹசன் முதலிடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பட்டியலில் 24 வயதான சகிப் அல் ஹசன் 404 புள்ளிகளையும் ஜக் கலிஸ் 397 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

அண்மையில் முடிவுற்ற பாகிஸ்தானுடனான இரண்டவது டெஸ்ட் ஆட்டத்தில், பங்களாதேஷின் முதல் இன்னிங்ஸில் சகிப் அல் ஹசன் 144 ஓட்டங்களைப் பெற்றதுடன் பந்துவீச்சில் ஓர் இன்னிங்ஸில் 82 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை வீழத்தினார். இந்த ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராகவும் அவரே தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சகல துறை வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் 3696 நாட்கள் (சுமார் 10 வருடங்கள்) முதல் இடத்தில் இருந்த ஜக் கலிஸ் அண்மையில் நடைபெற்ற இலங்கையுடனான முதல் ஆட்டத்தில் 31 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதுடன் இலக்கு எதையும் வீழ்த்தவில்லை.

தற்போது சகல துறை வீரர்களுக்கான தரவரிசையிலும் இரண்டாமிடத்தில் உள்ள ஜக் கலிஸ், டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையிலும் குமார் சங்கக்காரவுக்கு அடுத்ததாக இரண்டாமிடத்தில் உள்ளார்.

இலங்கையுடனான எஞ்சிய இரு டெஸ்ட் ஆட்டங்களிலும் அவர் சிறப்பாக செயற்பட்டால் அவர்மீண் டும் முதலிடத்தை அடைய வாய்ப்புள்ளது. 2000 ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் சகலதுறை வீரர் களுக்கான தரவரிசையில் ஜக் கலிஸ் முதலிடம் பெற்றபோது அந்த இலக்கை அடைந்த மிக இளம் வீரராக விளங்கினார். தற்போது 24 வயதான சகிப் அல் ஹசன் அந்தச் சாதனையையும் முறியடித்துள்ளார். கலிஸ் இதுவரை 147 டெஸ்ட் போட்டியில் 12036 ஓட்டங்களையும் 271 இலக்குகளையும் பெற்றுள்ளார் சகிப் அல் ஹசன் 26 டெஸ்ட் போட்டியில் 1630 ஓட்டங்களையும் 96 இலக்குகளையும் பெற்றுள்ளார். (15)

# தவறுகளை மன்னிக்க முடியாது

பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர்களின் களத்தடுப்பு தவறுகளுக்கு மன்னிப்பு வழங்க முடியாதென அந்த அணியின் பயிற்றுவிப்பாளர் ஸ்ரூவோட் லோ தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது பங்களாதேஷ் வீரர்கள் பிடிகளை தவறவிட்டமை குறித்து ஸ்ரூவோட் லோ அதிருப்தி வெளியிட்டுள்ளார். முக்கிய வீரர்களின் பிடிகளை வீரர்கள் தவறவிடும் பட்சத்தில் அணிக்கு அது பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை பங்களாதேஷ் அணி இழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (15)

# 'ரி-20' உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி ஆரம்பம்

'ரி-20' உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்றுப் போட்டி டுபாயில் நடக்கவுள்ளது. இதில் 16 அணிகள் விளையாடவுள்ளன.

நான்காவது 'ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் அடுத்த ஆண்டு (செப்.18-ஒக்.7) இலங்கையில் நடக்கவுள்ளது.

இதில், மொத்தம் 12 அணிகள் விளையாடவுள்ளன. இந்தியா, இலங்கை, இங்கிலாந்து உள்ளிட்ட பத்து அணிகள் ஏற்கனவே இதற்குத் தகுதிபெற்றுவிட்டன.

இந்த நிலையில் மீதமுள்ள இரண்டு அணிகளைத் தெரிவுசெய்வதற்கான தகுதிச் சுற்றுப் போட்டி, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் டுபாயில் ஆரம்பமாகவுள்ளன.

இதில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கவுள்ளன. இவை 'ஏ', 'பி' என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

'ஏ' பிரிவில் ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து, கனடா, பெர்முடா உள்ளிட்ட அணிகள் இடம்பெற்றுள்ளன.

'பி' பிரிவில் அயர்லாந்து, கென்யா, ஸ்கொட்லாந்து, ஓமான் உள்ளிட்ட அணிகள் இடம் பெற்றுள்ளன.




இந்த அணிகளுக்கான தகுதிச் சுற்றுப் போட்டி (மார்ச்.13- 24) டுபாயில் நடக்கவுள்ளன. (15)

# திறமை இல்லை அணியில் இடமில்லை

''இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வீரர்கள் தங்களது முழுத் திறமையை வெளிப்படுத்த வேண்டும். இல்லையேல் அணியில் அவர்களது இடம் கேள்விக்குறியாகிவிடும்'' என்று எச்சரித்துள்ளார், அணித்தலைவர் மைக்கல் கிளார்க்.

மெல்போர்னில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் அளித்த பேட்டியின்போதே இதைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

''எமது அணியில் அறிமுக வீரராகச் சேர்க்கப்பட்டுள்ள கோவன், உள்ளூர் போட்டியில் தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருகிறார். அவர் ஆஸ்திரேலிய அணிக்காக விளையாடும் வாய்ப்பை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறார்.

ஆனால், களமிறங்கும் 'சரியான கூட்டணி' எது என்பதை ஆலோசித்துத்தான் முடிவு செய்யவேண்டும். இப்போதுள்ள சூழலில், அணியில் இடம்பிடித்துள்ள ஒவ்வொரு வீரரும் தங்களது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்.

ஷேன் மார்ஷ் இன்று (நேற்றுமுன்தினம்) துடுப்பாட்டம் மற்றும் களத்தடுப்புப் பயிற்சியில் ஈடுபட்டார். அவர் நன்றாகத் துடுப்பெடுத்தாடிவருகிறார்.

இருப்பினும், அடுத்த சில நாட்களில் அவரது உடல் தகுதி எப்படி இருக்கிறது என்பதைக் கவனிப்பது அவசியம்.




*மைக்கல் கிளார்க்*

காயமடைந்துள்ள ஷேன் வொட்சன் துரதிஷ்டவசமாக மெல்போர்ன் டெஸ்டுக்கு முன்னர் (டிசெ.26) சரியாக உடல்தகுதியைப் பெறமுடியவில்லை. ஆனால், சிட்னியில் நடக்கும் 2 ஆவது டெஸ்ட் ஆட்டத்துக்கு முன்னர் அவர் முழு உடல்தகுதியை எட்டிவிடுவார் என்று உறுதியாக நம்புகிறேன்.

இருப்பினும், உடல்தகுதி நிபுணர் அலெக்ஸ் கவுன்டுரிஸின் ஆலோசனைப்படி, மெல்போர்னில் அவர் துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபடுவார்.

- இவ்வாறு கிளார்க் கூறினார். (15)

# இந்தியப் பெருந்தலைகளை ஆஸி. இளைஞர்கள் உருட்டுவர்!



*இந்திய அணியின் பெருந்தலைகளான சச்சின், சேவாக், டிராவிட், லக்ஷ்மன் ஆகியோரை ஆஸ்திரேலிய இளம் வேகங்கள் சாய்த்துவிடும். - என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான மார்க் ரெய்லர் கூறியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,*

*''டெண்டுல்கர் நீங்கலாக டிராவிட், லக்ஷ்மன், சேவாக் அனைவருமே ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை இதுவரை வெளிப்படுத்தியே வந்தனர்.*

*''அவர்கள் சிறந்த வீரர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஆஸ்திரேலியாவின் இளம் வேகத்திற்கு எதிராக அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.*

*ரிக்கி பொண்டிங், ஹஸி ஆகியோர் சமீப காலமாக எதிர்கொண்ட சவாலான பந்துவீச்சை இந்திய பெருந்தலைகள் சமீபத்தில் எதிர்கொண்டதாகத் தெரியவில்லை.*

*இந்திய வீரர்கள் சொந்த நாட்டின் 'ஸ்விங்' இல்லாத, பந்துகள் எழும்பாத வேகமற்ற ஆடுகளங்களில் ஆடிவந்தனர். ஆனால், ஆஸ்திரேலியாவில் உள்ள வேகமான மைதானங்கள் இந்திய வீரர்களுக்கு சவாலாக இருக்கும். அதே வேளை, ஆஸ்திரேலிய வீச்சாளர்களுக்கும் பெரிய சவாலாகவே இருக்கும்.*

*வயதாகிவரும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் ஆஸ்திரேலியாவின் வருங்கால இளம் தலைமுறைப் பந்துவீச்சாளர்களின் வேகத்தை எப்படி எதிர்கொள்கின்றனர் என்பது இந்த கோடைகால கிரிக்கெட்டின் ஒரு சுவாரசியமான விடயமாகும்.*

*- இவ்வாறு கூறினார் ரெய்லர். (15)*

## விற்பனைக்கு

மூன்று சக்கரங்களைக் கொண்ட (China) கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0776660572

---

நத்தார் பண்டிகையை முன்னிட்டு அதிரடி விலைக்கழிவில்..... **LAPTOP**

| | |
|---|---|
| HP Mini Atom 1.6GHz /1GB / 320GB / 10.1' / Dos | Rs.38500/= |
| HP 430 - i5 2.4GHz /2GB/ / 500GB / DVD R/w / 14.1' / Dos | Rs.66200/= |
| HP G6 - i3 2.2GHz / 2GB/ 500GB / DVD R/w / 15.6'/ DOS | Rs.65500/= |
| HP 4530s - i5 2.4GHz /4GB / 640GB / DVD R/w / 15.6'/ Dos | Rs.75500/= |
| HP 4530s - i3 2.4GHz/2GB / 320GB / DVD R/w / 15.6' / win7 Home Pm | Rs.69500/= |
| HP 630 -i3 2.2GHz / 2GB/ 320GB / DVD R/w / 15.6' /Dos | Rs.62000/= |
| DELL N5110 - i3 2.2GHz 4GB/ / 500GB / DVD R/w / 15.6' / Dos | Rs.69000/= |
| GIGABYTE -i5 2.67GHz/ 3GB / 500GB / DVD R/w / 14.1'/ Dos | Rs.62500/= |
| ACER 4749 B950 2.1 GHz / 2GB/ 500GB / DVD R/w / 14.1' / DOS | Rs.49700/= |
| ACER 5750 - i3 2.1GHz / 3GB / 320GB / DVD R/w / 15.6' / Win 7 Home Pm | Rs.63300/= |
| ACER 5750 - i3 2.2GHz/4GB / 750GB / DVD R/w / 15.6'/ Dos | Rs.69400/= |

*1-2 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்!*

கையிருப்பில் உள்ளவரை மட்டுமே....

GIGABYTE

**SDS Computer Services**

NO.42/1 ,College Road ,Jaffna.
Hindu College மைதானத்துக்கு அருகில்

T/P: 021-5100105, 021-2224500, 0777874705

OUR Services
Sales , Repair & Maintenance
Software Developments,
all type of Security, systems and etc...

---

## கொடிகாமம் சிறுமி வன்புணர்வு; இளைஞருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, டிசெ.24

கொடிகாமம் பகுதியில் ஏழு வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய 17 வயது இளைஞரை ஜனவரி 3ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் இளைஞரை பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணேசப்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணேசப்பிள்ளை இளைஞரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஒ-207)

---

## மகிழ்ச்சியுடன் அளிக்கும் வாலிபர் நிகழ்ச்சி

இதோ உங்களுக்கு ஒரு இனிய நற்செய்தி
இயேசு வருகிறார்.

நிகழ்ச்சிகள்:
★ இனிய நத்தார் பாடல்கள்
★ வில்லுப்பாட்டு
★ தாளலயம்
★ நாடகம்:-

"ஆடுகளை மேய்த்தவன் -மேதையாகலாமா?"

காலம்:- 24.12.2011
நேரம்:- 3 மணி மாலையில் இருந்து

இடம்:-
அசெம்பிளி ஒப்கோட்
இல.14,
இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

Assembly of God,
No.14,
Rasavinthoddam,
Jaffna.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
A.O.G வாலிபர்கள்.

---

**We care Always**

சானியா கேபல் கெயர்
262, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை
நல்லூர், யாழ்ப்பாணம்.

- நீங்கள் கருமை நிறம் உடையவரா? or சற்று நிறம் குறைந்தவர்களா?
- உங்கள் கன்னங்கள் குழிவிழுந்தவையா? or கரு வளையம், பருக்கள் நீண்ட கால தழும்புகள், கரும்புள்ளிகள், பாலுண்ணிகள் உடையவரா?
- உங்கள் உடல் பருமனாக அமைப்பில்லாமல் இருக்கின்றதா? or மெலிவான தோற்றமா? கவலையை விடுங்கள்!!!
- முடி உதிர்வு, பொடுகு, பேன், செம்படை போன்றவற்றால் அவஸ்தைப்படுகிறீர்களா? மற்றும் அழகிய முக அமைப்பை பெற விரும்புகிறீர்களா?

10 நாட்களில் தீர்வு நிச்சயம் முதற் பதிவு அவசியம் அழையுங்கள் - 0777351954

இவற்றிற்காக நீங்கள் பல இடங்களில் சிகிச்சை பெற்றும்
தீர்வு இல்லாமல் பணத்தையும் நேரத்தையும் வீண்செய்தீர்களா? கவலையை விடுங்கள்
"எம்மை நாடுங்கள்"
முற்றிலும் ஆயுள்வேத சிகிச்சைகள் பக்கவிளைவுகளற்றவை

---

## யாழ். கோண்டாவில் சபரீசஐயப்பன் தேவஸ்தானம்
## மகரஜோதி மண்டல பூசைப் பெருவிழா
## விசேட தினம்



24.12.2011-
ஆஞ்சநேயர் ஜெயந்தி- பகல் 10 மணிக்கு அபிஷேகம் அன்னதானம்
26.12.2011-
மதியம் 2 மணிக்கு நெய் நிரப்புதல், சாமிமார்கள் பேட்டை துள்ளல்
27.12.2011- கலை நல்லூர் நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் இருந்து
இருமுடி கட்டி சாமிமார்கள் பாதயாத்திரையாக வந்து பதினெட்டாம் படி ஏறுதல்
இரவு 7 மணிக்கு மண்டல பூசை - விஷேட பதினெட்டாம் படிபூசை, சக்தி பூசை என்பன இடம்பெறும்.
28.12.2011- அதிகாலை 4 மணிக்கு நெய் அபிஷேகம்

அனைத்து அடியார்களும், சாமிமார்களும் இதில் கலந்துகொண்டு ஐயனின் அருளை பெற்று ஏகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு- இந்தியா செல்லமுடியாத பக்தர்கள் எமது கோயிலில் இருமுடி கட்டி 18ஆம் படி ஏறலாம் என்று தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேவஸ்தான குருசாமி, தர்மகர்த்தா, கி.ஹரிஹரசுதன்சாமி.

---

## மரண அறிவித்தல்

### முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

(உரிமையாளர், யாழ்ப்பாணம், விநாயகர் றேடிங் வேக்ஸ் )



சண்டிலிப்பாய் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், மல்வம் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பாக்கியநாதன் நேற்று (23.12.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், பவளமலரின் அன்புக் கணவரும், பிரியந்தினி (கனடா), பிரதீபா (லண்டன்), பிரதீகா, பிரியங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், நிக்ஷன் (கனடா), டெல்சன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், கமலலோசினி, செல்வராசா, புஸ்பராணி, விமலராணி, சுசீலாராணி ஆகியோரின் சகோதரரும், அன்னமலர், நேசதுரை, நல்லதுரை, லீலாமலர், மகிழ்ராசதுரை, இரத்தினதுரை (பிரான்ஸ்), காலஞ்சென்ற புஸ்பமலர் (ஜேர்மனி) மற்றும் ரஞ்சிதமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.12.2011) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்வம், உடுவில்.
தகவல்:
குடும்பத்தினர்.

---

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

டொபர்பன் பின்சர், ஜேர்மன்செர்பட், கேர்ட்டன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: நல்லூர்பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

---

## பணிப்பெண்தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கண்டியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிறிய குடும்பத்துக்குக் குழந்தையை பராமரிக்க பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0779004204

---

## பதவி வெற்றிடம்

பல்தேசிய நிறுவனமான Education Technologies கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Trainee Marketting Executive
- Marketting Executive (with one year experiences)

தகைமைகள்

- க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சித்தி (ஆண்/பெண்)
- 30 வயதிற்கு உட்பட்டவர்கள்

நேர்முகப் பரீட்சைகள் 27 Dec முதல் 31 Dec வரை நடைபெறவுள்ளது.
நேரில் வரவும்.

Within 3 months can earn more than Rs. 40,000/=

Cont: Mr. Anthany
0773434823
0727434824
0215671130

Education Technologies
186, Kasthuriar Road,
Jaffna.

---

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் Canadian multi International Company க்கு முகாமையாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆறு மாதகால முகாமைத்துவ பயிற்சி. பயிற்சியின் போது ரூ. 12000/=-18,000/= வரை வழங்கப்படும். தகைமை: க.பொ.த சா/தஇல் ஆறு பாடங்கள் சித்தி. தொடர்புகட்கு:
0776219536,0771363797,
0754262907

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லதம்பி பரமேஸ்வரி (நயினாதீவு)



நயினாதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, சம்பியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லதம்பி பரமேஸ்வரி நேற்று (23.12.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி குணரத்தினம் அவர்களின் அன்பு மகளும், திரு.திருமதி சின்னத்துரை அவர்களின் அன்பு மருமகளும், நல்லதம்பி (சுவிஸ்), யின் பாசமிகு மனைவியும், சுமதி (லண்டன்), Dr.அரவிந்தன்(போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சுதமதி (ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயும், தனேஸ்வன்(லண்டன்), சுபாசினி (விரிவுரையாளர், கணினி அலகு, யாழ். பல்கலைக்கழகம்), ஸ்ரீதரன் (அதிபர், யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், சதுசன், வைஷ்ணவி, சங்கவி (லண்டன்), தரணிகா, கிசானன், ஷாகித்யன், சானுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.106, சம்பியன்வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
சி.நல்லதம்பி (கணவர்)
Dr.ந.அரவிந்தன்(மகன்).

### கதிரவேலு பொன்னம்பலம்



புத்தூர் மேற்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பொன்னம்பலம் நேற்று (23.12.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு- செல்லமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- இளையகுட்டி தம்பதியரின் மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், தர்ஷினி (கனடா), சோபாசினி (தாதிய உத்தியோகத்தர், கிளிநொச்சி), பிரசாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம், செல்லம்மா, சுப்பிரமணியம் (தேவன்), அழகரத்தினம் (ஹொலன்ட்) ஆகியோரின் சகோதரனும், சோமசுந்தரம் (கனடா)இன் மாமனும், எழில்நிலா, இலக்கியன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஹிந்து சிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் மேற்கு, புத்தூர்.
தகவல்:
குடும்பத்தினர்.

---

## லேடீஸ் கோணர்

K.K.S ROAD
மருதனார் மடம்,
பெற்றோல் செற், அருகாமை.
0213001238

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான
ஆடைகள் இந்தியாவில் இருந்து
வரவழைக்கப்பட்டு 15% விலைக்
கழிவில் விற்பனை செய்யப்படுகின்றன.

## ஐ.தே.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் கிடைத்துள்ளன என்றும் சஜித் பிரேமதாஸ தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

சஜித் தரப்பு முக்கியஸ்தரான தென் மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன நேற்று இதுதொடர்பாகக் கூறியவை வருமாறு:-

எமது கட்சியின் தலைவரைத் தெரிவுசெய்வதற்காக இடம்பெற்ற தேர்தலையோ அந்தத்தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட தலைவரையோ எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இத்தேர்தல் ஜனநாயக ரீதியில் இடம்பெற்றதல்ல. ஒவ்வொரு வாக்குச்சின்னத்திலும் ஒவ்வொரு இலக்கம் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த இலக்கத்தை அடிப்படையாக வைத்து எந்த உறுப்பினர் யாருக்கு வாக்களித்தார் என்பதை அறிந்துகொள்ள முடியும். தாம் பின்னர் ரணில் தரப்பால் பழிவாங்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாகவும் உறுப்பினர்கள் ரணிலுக்கு வாக்களித்திருக்கக்கூடும்.

அத்துடன், தன்னைத் தேசிய அமைப்பாளராகத் தெரிவுசெய்யுமாறு கட்சி உறுப்பினர் ஒருவர் செயற்குழு உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுத்தார் என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக நாம் தேடிப்பார்க்கின்றோம்.

செயற்குழு உறுப்பினர்களின் தீர்ப்பு வேறு. மக்களின் விருப்பம் வேறு. தயாசிறி ஜயசேகர கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தார். தயா கமகே அத்தேர்தலில் வெற்றிபெறவே இல்லை. அவரைச் செயற்குழு, தேசிய அமைப்பாளராகத் தேர்ந்தெடுத்திருப்பதை ஏற்கமுடியாது.

தலைவரை மாற்றுவதற்கான போராட்டங்களை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம். ஒருசில நாள்களில் நாம் இதுதொடர்பாகக் கூடி ஆராய்வோம் - என்றார். (ஒ-சி)

## நீர்வேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்வேலியைச் சேர்ந்த அருணாசலம் குனேஸ்வரன் (வயது-45) என்பவரே கைதானவர் ஆவார்.

குறித்த சந்தேகநபரை கோப்பாய் பொலிஸார் நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவத்தில் நீர்வேலி இராஜவீதியைச் சேர்ந்த மார்க்கண்டு உதயகுமார் (வயது-50) அவரது மனைவியான உதயகுமார் வசந்தமாலா ஆகியோரே கோடரி. வெட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலே மரணமானவர்கள் என்பது தெரிந்ததே. (ஒ-323-14)


### காணி விற்பனைக்கு

இராசா பிளாசா ஒழுங்கையில் 13½ பரப்புக் காணியும் கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் இருபாலை றோட் 16 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:0213218432,0776366090


### கண்ணீர் அஞ்சலி



புத்தூர் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த மாவையூர் வே.மார்க்கண்டுவின் காத்தவராயன் கூத்துக்குழுவின் பின்னணிப் பாடகரான

**கதிரவேலு பொன்னம்பலம்** (குணம்)

கடந்த 22.12.2011 வியாழக்கிழமை மரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கும், சகோதரர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தையிட்டி.

அமரர் விநாயகமூர்த்தி குடும்பம்
கிருஸ்ணகுமாரன் (கதிரமலை).

### அன்புடன் வாழ்த்துகிறோம்



17.12.2011 கொழும்பு ஜோன்.டீ.சில்வா ஞாபகார்த்த கலைஅரங்கில் "கலாபூசணம்" விருது பெற்ற நாடகக் கலைஞர் கலாபூசணம்

**இரா. பீதாம்பரம்** (பற்குணம்)

அவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்றுப் பல்லாண்டு காலம் அம்பாளின் அருளைப் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

மா.சீதாலட்சுமி குடும்பம்.




## பலாலி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. நாடளாவிய ரீதியில் தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் உட்பட ஆங்கில பாடத்துறையில் சிங்களவர்களும் இங்கு பயிற்சி பெற்றனர்.

குறித்த காலத்தில் தேசிய ரீதியில் முன்னணி ஆசிரியர்க கலாசாலையாகவும் பலாலி ஆசிரியர் கலாசாலை விளங்கியது.

1987 ஆம் ஆண்டு பலாலி ஆசிரியர் கலாசாலை வளாகத்தில் இந்திய அமைதிப் படையினர் முகாமிட்டிருந்த போதும் ஆசிரியர் கலாசாலை செயற்பட்டுவந்தது. 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாகப் பலாலி ஆசிரியர் கலாசாலை இடம்பெயர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒருபகுதியில் செயற்பட்டது. பின்னர் அங்கிருந்து திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுத் தற்போது திருநெல்வேலியில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

தற்பொழுது யுத்தம் முடிவடைந்து சாதாரண சூழ்நிலை காணப்படுவதால் பலாலியில் உள்ள சொந்த வளாகத்துக்கு ஆசிரியர் கலாசாலை திரும்பிச் செல்வதற்கான கோரிக்கை வலுவடையக் கூடிய சூழ்நிலை காணப்படுவதால் பலாலி ஆசிரியர் கலாசாலை வளாகத்தைப் பாதுகாப்பு அமைச்சின் பயன்பாட்டுக்கு கைமாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை பலாலி ஆசிரியர் கலாசாலையை பாதுகாப்பு அமைச்சு கையேற்பதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. கலாசாலையை மீண்டும் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் இல்லாவிட்டால் எமது கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய ரீதியில் கல்வியியலாளர்களை ஒன்றுதிரட்டிப் போராடுவோம் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜனாதிபதிக்கும் கல்வி அமைச்சருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாக அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் இந்த முடிவு உடன் கைவிடப்பட வேண்டும். கலாசாலையை மீண்டும் பலாலியில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (த-11)

## தெரிவுக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது பொதுவானதொரு பேச்சு மேடை. இதில் எந்தவொரு தரப்பினரும் தமது நிலைப்பாட்டைச் சுதந்திரமாக அறிவிக்கலாம்.

இதனை விடுத்து, வெறுமனே பேசுவதில் எந்தப் பயனும் இல்லை. கூட்டமைப்புடன் பேசிப் பேசியே அரசு களைத்துவிட்டது.

அதுமட்டுமின்றி, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருமாறு கூட்டமைப்பை அழைத்து அழைத்தே எனக்கு இந்த விடயம் புளித்துப் போய்விட்டது.

புலம்பெயர் தமிழர்களின் அபிலாஷைகளுக்கமையவே கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர். அவர்களுக்கு உள்நாட்டு மக்கள் தொடர்பாகக் கரிசனை இல்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக புலம்பெயர்ந்த தமிழர்களின் இறுதி முடிவைகூட்டமைப்பினர் எதிர்பார்க்கின்றனர். - இப்படிக் கூறினார் அமைச்சர் டியூ.

## பான் கீ-மூன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து பார்க்க வேண்டும். ஈரான் அணு வாயுதப் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. அதுபற்றி ஆராயப்பட வேண்டும். ஐரோப்பாவில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும். இன்று ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாலுள்ள பிரச்சினைகள் இவைதான். இலங்கை நல்லிணக்க ஆணைக்குழு பற்றி அவர்கள் அவசரப்படவேண்டிய தேவையில்லை. ஆறுதலாக ஆராய்ந்து கூறுவார்கள். நீங்களும் அவசரப்படாதீர்கள்.- என்றார் பாலித கொஹன்ன

## பேச்சு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பாக 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளரும் தெஹிவளை-கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வெளிநாடுகளில் நகரச்சபைகளுக்குக்கூட பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் உட்பட முக்கியமான அதிகாரங்களை வழங்குவதற்கு மஹிந்த அரசு மறுப்புத் தெரிவிக்கின்றது.

ஜனாதிபதி நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவே அதிகாரப் பரவலை வலியுறுத்தியுள்ளது. நிலைமை அப்படியிருக்கையில், அரசு மழுப்பல் போக்கைக் கடைப்பிடிப்பது ஏன்?

13ஆவது அரசமைப்பில் திருத்தம் செய்யவுள்ளோம் என அரசு கூறுவது அபத்தமானது. இதனை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இனவாதம் என்ற கொடூர அரக்கன் சிறுபான்மையினத்தவரின் உரிமைகளை விழுங்கி ஏப்பம் விடுகின்றான்.

பிரதான எதிர்க்கட்சியில் இனவாதப் போக்குடையவர்கள் இருப்பதும் மஹிந்த அரசுக்குச் சாதகமாகவே அமைந்துள்ளது. சக்திவாய்ந்த எதிர்க்கட்சி ஒன்று அவசியம். அதனைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் முயற்சிக்கவேண்டும். இல்லையேல் நாடு படுபாதாளத்தை நோக்கிப் பயணிக்கும்.

அதைத் தரமாட்டோம்; இதைத் தரமாட்டோம் எனக் கூறிக்கொண்டு பேச்சைத் தொடர்பவர்களுடன் பேசுவதில் எந்தப் பயனுமில்லை.

கூட்டமைப்பு, உடன் பேச்சு மேடையிலிருந்து வெளியேற வேண்டும். அவ்வாறு வெளியேறி தேசிய, சர்வதேச ரீதியில் பெரும் உரிமைப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

உள்நாட்டிலுள்ள சிங்கள மக்களுக்குத் தமிழர்களின் பிரச்சினையைத் தெளிவுபடுத்தும் வகையில் கூட்டமைப்பு பெரும் கூட்டங்களைத் தெற்கில் நடத்தவேண்டும். அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பையும் வழங்குவோம் - என்றார். (உ-சி)

## மரண அறிவித்தல்கள்

### செல்வரத்தினம் சறோயினி



நுணாவில் மத்தி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சறோஜினி நேற்று (23.12.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை செல்வரத்தினத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- தங்கம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை-இராசபூபதிதம்பதியரின் மருமகளும் நவரத்தினத்தின் அன்புச் சகோதரியும் திவாகரன் (லண்டன்), செல்வறஞ்சன்-காயத்திரி(லண்டன்), கயேந்தி, பிரதிகரன், தவக்குமார்-கௌசல்யா ஆகியோரின் தாயும் செல்வக்குமார்-துசியந்தினி(லண்டன்), ஜெந்திரபாலா-செல்வறஞ்சினி(லண்டன்), பவானந்தன்-செல்வயேந்தினி (பிரான்ஸ்), செல்வநந்தன்(லண்டன்), ஆகியோரின் மாமியும் முத்துலட்சுமியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கல்வயல் வீதி, நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னையா-சுந்தரலிங்கம்(சீனன்)

புங்குடுதீவு-07, ஊரதீவைப்பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தரலிங்கம் நேற்று(23.12.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-அன்னபூரணம் தம்பதியரின் மூத்தபுதல்வனும், நடேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலாம்பிகை மற்றும் கமலாம்பிகை (ஆனந்தம்), சுந்தராம்பாள், புதுமைலோலன், சுபத்திரா (இந்தியா), சுமேந்திராதேவி, காலஞ்சென்ற திருஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தருமலிங்கம், ஆலாலசுந்தரம், தங்கராசா, ஸ்ரீதர்(இந்தியா), சிவலோகநாதன் ஆகியோரின் மைத்தனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2011) சனிக்கிழமை 185,கஸ்தூரியார் வீதியில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த இறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

185, கில்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### வருந்துகிறோம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சண்முகம் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

நேற்றைய உதயனின் 27ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய அன்னாரது மரண அறிவித்தலில் வேறு ஒரு நிழற்படம் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

# பிலிப்பைன்ஸில் காணாமற்போனோரின் எண்ணிக்கை 1079 ஆக அதிகரிப்பு

பிலிப்பைன்ஸில் கடந்த சனிக் கிழமை தாக்கிய புயல் மற்றும் வெள்ளத் தினால் காணாமற்போனோரின் எண் ணிக்கை 1079ஆக அதிகரித்துள்ளது என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மிண்டானோ தீவில் வீசிய 'வஷி' புயல் மற்றும் வெள்ளத்தினால் ககாயன் டி ஓரொ, இலிகன் முதலான நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

இதன்போது, 1,080 பேர் உயிரிழந் திருந்தனர் எனவும் 51 பேரைக் காண வில்லை எனவும் முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது. எனினும் தற்போது இந்த எண்ணிக்கை 1079 ஆக அதிகரித்துள்ள தாக பிலிப்பைன்ஸ் அரச அதிகாரிகள் நேற்றுத் தெரிவித் தனர்.

கிராமங்களிலி ருந்து நகர்ப்புறங்க ளுக்கு இடம் பெயர்ந்து பணி யாற்றிய ஊழியர் கள் காணாமல் போனமை குறித்து கிராமப்புற மக்கள் உடனடியாக உணர வில்லை என மேற் படி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்புயல் மற் றும் வெள்ளத்தி னால் 10000 வீடு கள் சேதமடைந் துள்ளதுடன் 3 லட் சத்து 38 ஆயிரம் பேர் பாதிக்கப்பட் டுள்ளதாகவும் அதி காரிகள் தெரிவித் துள்ளனர்.


## மரண அறிவித்தல்



*சின்னத்தம்பி நாகம்மா*

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகம்மா நேற்று (23.12.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், நாகரத்தினம், லலிதாதேவி, நகுலேஸ்வரன் (அலுமினியம் தொழிற்சாலை), ஸ்ரீதரன் (மதுசா வைண்டிங் சொப், குரு அரைக்கும் ஆலை, ஸ்ரீராம் அரைக்கும் ஆலை-கோண்டாவில்), சந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரா, காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மனோரஞ்சிதம், தசகுமாரி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2011) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா வீதி,
பன்னாலை. (12071)(5)

தகவல்:
நகுலேஸ்வரன், சிறிதரன் (பிள்ளைகள்).

## பாடசாலை பிரயாண சேவை
## SCHOOL BUS SERVICE

- உங்கள் வீடுகளிலிருந்து யாழ். நகரின் அனைத்துப் பிரபல பாடசாலைகளுக்கும்
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட, சொகுசு இருக்கை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான பிரயாண சேவைக்கு...



உடன் அழையுங்கள்
**0779591100 / 0778594178**
(பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவை)
(11988)(5)

பிரயாண வழி:
பண்டத்தரிப்பு→சித்தன்கேணி→சங்கானை→சீரணி→மானிப்பாய்→உடுவில்→→மருதனார் மடம்→கே.கே.எஸ். வீதி வழியாக→யாழ் நகரப் பாடசாலைகள்.

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.

**2014 A/L கணித, உயிரியல் பிரிவு**

பௌதிகவியல்
→ திரு. S.சோதிலிங்கம்
→ திரு. R.குகன்
→ திரு. R.குமரன்

இரசாயனவியல்
→ திரு. K.சிவத்திரன்
→ திரு. M.மகேஸ்வரன்

உயிரியல்
→ திரு. T.கெங்காதரன்
→ திரு. T.தம்பிராசா
→ வழமையான ஆசிரியர்
→ திரு. M.அல்போன்ஸ்

இணைந்த கணிதம்
→ திரு. S.செந்தில்ராஜ்
→ திரு. செந்தில்நாதன்

ஆரம்பம்: **28.12.2011** புதன் **8.30 a.m.**
(C/7121)(5,6,7)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்...

## STUDY IN UK

- அடிப்படைத் தகைமைகளுடன் உயர்கல்வி பயில கல்லூரி / பல்கலைக்கழக அனுமதிக்கான ஆலோசனைகள்
- தெரிவு செய்யப்படும் பாடங்களுக்கமைவாக (நோக்கம்) ஆங்கிலப் பரீட்சை எழுதுவது அவசியம்.
- மிகக் குறைந்த செலவில் விசா பெற்றிட அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.

## PS CONSULTING

No. 19A, Station Road, Kondavil West, Kondavil, Jaffna.
(உப்பு மடம் சந்திக்கு அருகாமை)
T.P.: 0778328290 / 0755766786
(12053)(5)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி, கல்பேட்ஸ் மற்றும் வான் கோழி, கினிக்கோழி, கோழிமுட்டை மொத்த மாகவும், சில்லறையாகவும் விற்கப்படும்.
விவரங்களுக்கு: *கிருஷ்ண பாம்,*
மானிப்பாய், விதானைவளவு, மானிப்பாய்.
(11994)(5) தொ.பே.: **0772338084**

### கணினி மலிவு விற்பனை

P iv கணினி மற்றும் LCD Monitor மற்றும் அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும் 23,750/= விலையில் விற்பனைக்கு உண்டு. Free 4 GB Pen/Web cam

**SKY Computer**
162, பிரதான வீதி, யாழ். / 737, K.K.S. Road,
*021 222 1417* / யாழ். 222 4865, 0750698608
Skype, V/Call, Internet பாவிக்கலாம்
ஒரு வருட உத்தரவாதம் உண்டு.
மொத்தமாக DDR 1, DDR II, DDR III, Power S/Y.
(C/7131)(5)

### சட்டக்கல்லூரி, அரசாங்க போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

- பொது உளச்சார்பு, மொழியறிவு என்பன கற்பிக்கப் படுகின்றன.
- 20 மணித்தியாலங்கள் தனிப்பட்ட கவனிப்பு எமது நிறுவனத்தில் மாத்திரம் நீங்கள் கொண்டு வரும் பொதுஉளச்சார்பு வினாக்கள் கற்பிக்கப் படுகின்றன.

சனி, ஞாயிறு மு.ப. 10-12 மணிவரை.

**திசை காட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**
*முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்*
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016, 0214914527
web: www.thisaikaddi.lk
e-mail: thisaikaddi@sltnet.lk
(யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)
(7665)(5)

### *படிவங்கள் விற்பனையாகின்றன*

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் கனிஷ்ட ஊழியர் சேவைக்கு ஆள்சேர்ப்பு**

1) பாடசாலை பணியாளர்
2) மாணவர் இல்லத் தொழிலாளி
3) திணைக்களத் தொழிலாளி
4) சுத்திகரிப்புத் தொழிலாளி
5) களஞ்சியத் தொழிலாளி
6) காவலாளி
7) வரைபட அச்சாளர்
8) சுற்றுலா விடுதிக்காப்பாளர்
9) பராமரிப்புத் தொழிலாளி
10) நிலையக் காப்பாளர்
11) மருந்தக ஊழியர்
12) பாரஊர்தி சுத்திகரிப்பாளர்
13) சமையல் தொழிலாளி
14) வரைபடக் காப்பாளர்
15) சமையலாளர்
16) நீர்ப்பம்பி இயக்குநர்
17) ஓட்டுநர்
18) நாற்று மேடைக் காப்பாளர்

முடிவு திகதி: **16.01.2012**

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம். (C/7160)(5)

### ஸ்ரீலங்கா புத்தகசாலையின் மாபெரும் விலைக்கழிவு

புதிய கல்வியாண்டில் (2012) காலடி எடுத்து வைக்கும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

**ATLAS அப்பியாசக் கொப்பிகள் மிகக் குறைந்த விலையிலும்**

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், கவரிடும் தாள்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்களுக்கு விசேட விலைக் கழிவுகளுடன் பெற்றுக்கொள்ள இன்றே நாட வேண்டிய ஒரே இடம்

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
**இல.234, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.**

- 2012 ஆம் ஆண்டுக்கான அனைத்து விதமான டயறிகள் மற்றும் பிறிண்டிங் கலண்டர்களும் விசேட விலைக்கழிவு டன் பெற்றுக்கொள்ளலாம்.
- மாணவர்கள், வியாபாரிகளுக்காக ஞாயிற்றுக்கிழமைகளிலும் எமது வியாபார சேவை தொடரும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (C/7151)(5,6,9)

### COLLEGE OF CHEMISTRY

DIAS — 2014 A/L
B.Sc (Hons) Spl in Chem
**ENGLISH MEDIUM**
**Commences on 28.12.2011 at 4.30 p.m.**
Parents should accompany for addmision

**2014 A/L** தமிழ் மொழிமூல வகுப்புக்கள் New Science College இல் **28.12.2011** அன்று ஆரம்பமாகிறது.
(11984)(5)

### கணிதம் / MATHS

தரம் 6 முதல் தரம் 11 வரை குழு வாகவோ, தனியாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
யாழ்/கொழும்பு பிரபல கல்லூரி வினாக்கள் செய்து காட்டப்படும்.
A தேர்ச்சி பெற விசேட கவனம் செலுத்தப்படும்.
கல்வி நிலையங்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: **0770873338**
*ஆசிரியர்* **V.**வசந்தன். (8034)(5)

### SPOKEN ENGLISH

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**MyWay English**

182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம்
சனி (இன்று) : காலை 8-9, 9-10, 10-11, 11-12

இலங்கை வங்கி மேல்மாடி. சங்கானை
சனி (இன்று) : மாலை 2-3, 3-4, 4-5, 5-6

NSB அருகில் நெல்லியடி
ஞாயிறு(நாளை) : காலை 8-9, 9-10, 10-11, 11-12

ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி
ஞாயிறு(நாளை) : மாலை 2-3, 3-4, 4-5, 5-6

**077 33 63 456**

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 | 24 |
| 04 | 11 |
| 1934 | 2011 |

**அமரர் நல்லதம்பி செல்லத்துரை**

(முன்னாள் கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் மற்றும் புங்குடுதீவு-லிகர் சொப் உரிமையாளர், புங்குடுதீவு கண்ணகை அம்மன் தேவஸ்தான முன்னாள் தலைவர்)

எமது ஸ்தாபன உரிமையாளரின் 31 ஆவது நினைவு நாளில் அவருக்கு அஞ்சலி செலுத்துவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
பணியாளர்கள், புங்குடுதீவு லிகர் சொப்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

எல்லாம் சரியாக இருக்கிறது என்பவனிடமும், எதுவும் சரியில்லை என்பவனிடமும் எச்சரிக்கையாயிரு.
-சிங்சௌ.

# வார வசந்தம்

01

உதயன் 24 டிசெம்பர் 2011 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# தர்மத்தின் வாழ்வதனை....

கொடுங்கோலர்களான துரியோதனாதியர்கள் பஞ்ச பாண்டவர்கள் மீது கொண்ட வஞ்சத்தினால் அவர்களை அழித்துவிடும் நோக்கில் பல சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தனர். சிறிய வயதில் இருக்கும் போதே பீமனின் உணவில் கொடிய விசத்தைக் கலந்து உண்ணச் செய்தனர். அவன் மயங்கிய பின்னர் உறுதியான கொடியினால் கட்டி கங்கையில் எறிந்தனர். பீமன் இறந்து விட்டதாகவே எண்ணி ஆனந்தமடைந்தனர்.

இன்னொருபுறம் விளையாடச் சென்ற பீமனைக் காணாததனால் கலக்கமுற்ற அவனது சகோதரர்களும் தாயான குந்திதேவியும் விதுரனிடம் சென்று தமது சந்தேகத்தை வெளியிட்டனர். மிகுந்த தீர்க்கதரிசியான விதுரன் பஞ்ச பாண்டவர்களைப் பொறுமை காக்குமாறு பணித்தான். அவர்களுக்குத் தேறுதல் வார்த்தைகள் கூறி பீமன் மீளுவான் என்று நம்பிக்கை வெளியிட்டான்.

கங்கை நீரில் எறியப்பட்ட பீமன் பாதளம்வரை சென்று நாகர்களின் உலகை அடைந்தான். அங்குள்ள பெருந்தொகையான கொடிய விஷப் பாம்புகளின் தீண்டுதலுக்கு உள்ளாகின்றான். இதனால் ஏற்கனவே அவன் உடலிலுள்ள விஷம் முறிவடைய மயக்கம் தெளிந்து அங்குள்ள பாம்புகளை அழித்து நாக அரசனான வாசுகியைச் சந்தித்து அவன் அளித்த அமுதத்தை அருந்திப் புதிய பலம் கொண்டவனாக அஸ்தினாபுரம் திரும்புகிறான். தாம் அழித்து விட்டதாக நம்பிய பீமன் புதிய மெருகு பெற்று மீண்டு வந்தது கண்டு கௌரவர்கள் பேரதிர்ச்சியுற்றனர்.

வெஞ்சினம் தலைக்கேறியவர்களாக மீண்டும் சூழ்ச்சி செய்கின்றனர். இதற்கென சிவபெருமானுக்கு வாரணாவதத்தில் பெருவிழாவுக்கு ஏற்பாடு செய்து அதற்கு திருதராஷ்டிரன் மூலமாக அழைப்பு விடுக்கின்றனர். இதில் சூழ்ச்சி இருப்பது குறித்து நன்கறிந்த போதிலும் பெரிய தந்தைக்கு மரியாதை செய்து குந்திதேவியும் பஞ்சபாண்டவர்களும் வாரணாவதம் செல்கின்றனர். அங்கு அவர்களுக்கென விசேடமாக அமைக்கப்பட்டிருந்த மாளிகை எல்லா இடங்களிலும் இலகுவாக தீப்பிடிக்கக் கூடியாறு அமைந்திருந்ததை விதுரனின் அறிவுறுத்தலுக்கிணங்க பரீட்சித்துக் கணித்துக்கொள்கின்றனர். விதுரன் ஓர் தலைசிறந்த சுரங்கத் தொழிலாளியை மிகமிக இரகசியமாக வாரணாவதம் அனுப்பிவிடுகிறான். அவன் மிக நுட்பமான முறைகளைக் கையாண்டு ஓர் சுரங்க வழியை அமைத்துக் கொடுக்கிறான்.

துரியோதனனின் ஆள்களுக்கு எந்தவித சந்தேகமும் ஏற்படாதபடி; காட்டில் வேட்டையாடுவதாகப் பாசாங்கு செய்து காட்டுப்பாதைகள் அனைத்தையும் பஞ்சபாண்டவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

எதிர்பார்க்கப்பட்டதுபோல குறித்த ஒருநாள் நள்ளிரவு நேரம். ஊரே உறங்கிக் கிடக்கின்றது. திடீரென எழுந்த பேரிரச்சல், நெருப்பு பெரும் புகைமண்டலம் என்பவற்றால் திடுக்குற்று எழுந்த மக்கள், (அரக்கு) மாளிகை விளாசி எரிவதைக் கண்ணுற்று பெருங்குரலெடுத்து கதறுகின்றனர். ஐயகோ! அவர்களின் ஆதர்ஸ நாயகர்கள், தனிப் பெருந் தலைவர்கள் அங்கெல்லவா தங்கியிருக்கின்றனர். அகிலமெங்கணும் செய்தி பரவுகிறது. எங்கும் காரிருள் சூழ்கிறது. ஆற்ற முடியாத சோகம் தலைவிரித்தாடுகிறது.

அஸ்தினாபுரத்தில் இந்தச் செய்திக்காகவே காத்திருந்த துரியோதன், சகுனி, ராதேயன் உள்ளிட்டோர் உள்ளூர மிக மகிழ்ந்த போதிலும் வெளிப்படையாகத் துக்கம் அனுஷ்டித்தனர். இறந்தவர்களுடைய இறுதிச் சடங்குகள் அரச மரியாதையுடன் மேற்கொள்ளப்பட்டன. பிதாமகர் பீஷ்மர் இந்த நிகழ்வுகளால் ஆழ்ந்த துயருற்றார், வெதும்பினார், மனம்தளர்வுற்றார்.

இதைக்கண்ட விதுரன் அவருக்கு மட்டும் பஞ்சபாண்டவர்களும் குந்தி தேவியும் தப்பிப் பிழைத்த செய்தியையும், அவர்களது தலைமறைவு வாழ்க்கை குறித்தும், தர்மத்தை மீட்பதற்காகப் பொருத்தமான சந்தர்ப்பத்தில் அவர்களது மீள் வருகை அமையும் என்பதையும் விவரிக்கிறார்.

திருக்குறள், மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்கள் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடியன என்பர். மகாபாரதத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் ஈழத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களுக்கு ஒப்பானவை. 1989 இல் அப்போதைய வடகிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உடலைத் தான் கண்டதாக அறிக்கை விட்டதைச் சொல்லவா?

■செவ்வேள்

2004 மார்கழியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது பல தலைவர்கள் தமது ஆசைக் கோளாறின் விளைவாகப் பரப்பிய செய்திகளைச் சொல்லவா? பஞ்சபாண்டவர்களுக்கு எழுந்த ஒவ்வொரு சோதனைகளின் பின்னரும் அவர்கள் புதிய புதிய தனிப்பெரும் பலங்கொண்டு மீண்டு வந்தார்களல்லவா? பீஷ்மர், துரோணாச்சாரியார், சகோதரன் கர்ணன் உள்ளிட்ட பெரும் பலம்கொண்ட பெருந்தகையெல்லாம் விதிவசத்தால் எதிர்தரப்பில் நின்று போரில் இடம்பெற்ற போதிலும் அர்ச்சுனன் காண்டீபம் வளைக்கவிலையா? தர்மம் அங்கு வெல்லவில்லையா? தர்மத்தின் வாழ்வதனைச் சூது கௌவும் தர்மம் மறுபடி வெல்லும்.

தமது அஞ்ஞாதவாச காலத்தில் அருச்சுனனும் வன்னிமரத்தில்தானே தனது காண்டீபத்தை மறைத்துக் கட்டிவிட்டுச் சென்றான்.

வாரணவதத்தில் அரக்கு மாளிகை எவ்வாறு தீப்பற்றி எரிந்ததோ அங்ஙனமே இங்கும் ஒரு அரக்கு மாளிகை எரிந்து சாம்பலாகியது. இந்தியா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகளின் முழு ஆசியுடன் இந்தப்பொறி மிகச் சிறப்பாக முள்ளிவாய்க்காலில் வடிவமைக்கப்பட்டது.

2009 வைகாசி 18ஆம் நாள் உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிய முள்ளிவாய்க்கால் மாளிகை வானளாவி எரிந்தது.

# படையினரை காப்பாற்றிய ஆணைக்குழு

இறுதி யுத்தம் தொடர்பாகச் சர்வதேச ரீதியில் எழுந்த குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித் கொள்வதற்காகத் தான் அமைத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அண்மையில் வெளியிட்டது இலங்கை அரசு. அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 400 பக்க அறிக்கையை வெளியிட்டார்.

வடக்கு- கிழக்கு காணிகளைக் கையாளத் தேசிய காணி ஆணைக்குழு மற்றும் சிறு இனக் குழுமங்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற நாடாளுமன்றத் தெரிவுக்குழு போன்ற சிபார்சுகளை நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் மிக முக்கியமாகப் போர்க்குற்றங்களில் அரசப்படையினர் எவரும் ஈடுபடவில்லை எனவும் ஆணைக்குழு அறிக்கையில் ஆணித்தரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்தேச ரீதியில் இலங்கை அரசுக்கு எதிராக வலுத்துவரும் போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு முடிவு கட்டுவதற்காகவும் அதிலிருந்து தப்பித்துப் பேரர்க் குற்றங்களில் ஈடுபட்ட படைத் தலைமைகள், துருப்புக்கள் என்பவற்றைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நன்கு திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை மூலம் சர்வதேசத்தை திருப்திப்படுத்த நினைத்த அரசு இப்போது அதுவும் முடியாமல் போனமையால் அறிக்கைக்கு எதிராகச் சர்வதேச நாடுகள் தெரிவிக்கும் கருத்துக்களுக்கு கடும் கண்டனங்களை வெளியிட்டு வருவதுடன் அறிக்கையை விமர்சிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவித்திருக்கிறது.

இவை தவிர அரசு -கூட்டமைப்பு பேச்சுக்களில் தற்போது அதிகமாகப் பேசப்படுவது காணி அதிகாரம் குறித்த விவகாரமே. வடக்கு- கிழக்கு இணைப்பை முற்றாக நிராகரித்த அரசு, காணி விவகாரத்தினை மட்டும் பேசுவதோடு, மத்திய அரசுக்கும், மாகாண சபைக்குமிடையிலான காணி அதிகாரப் பகிர்வு குறித்து தேசிய ஆணைக்குழுவொன்றை அமைக்கலாமென்ற முன்மொழிவையும் வைக்க முற்படுகிறது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையில் இவ்விகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமென்பதையும் அவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது. அத்துடன் வேதனைகளையும் வலிகளையும் மறந்து எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுப்போமென தமிழ்பேசும் மக்களிடம் நேசக்கரம் நீட்டுகிறது ஆணைக்குழு அறிக்கை.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பில் தாயகம், சுயநிர்ணயம் போன்ற முக்கிய விவகாரங்களை நல்லிணக்க ஆணைக்குழு தொட்டும்கூடப் பார்க்கவில்லை. அவை அனைத்தும் அப்படியே தள்ளிவைக்கப்பட்டுள்ளன. இனப் பிரச்சினைக்கான தீர்வுபற்றி எதையுமே தெரிவிக்காமல் - சுட்டிக்கூறாமல் அதனை அப்பட்டமாக மறைத்து படையினரை யுத்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கும் வகையிலும் சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுபடும் வகையிலும் ஆணைக்குழுவின் அறிக்கை அமைந்துள்ளதென்பது வெளிப்படையான உண்மை.

ஆணைக்குழுவின் அறிக்கையை உலக நாடுகள் மட்டுமல்லாமல் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான அமைப்புக்களும் அடியோடு நிராகரித்திருக்கின்றன. தமிழ்த் தேசிய இனமானது ஒரு தேசம் என்பதை ஏற்றுக்கொள்ளாத, பேரினவாதத்தின் முழு ஆளுமையைத் தன்னகத்தே கொண்ட அரசியலமைப்பு சாசனத்தினால், தேசிய இன நல்லிணக்கத்துக்கான நடைமுறைச் சாத்தியமான எந்தவொரு தீர்வினையும் முன்வைக்க முடியாது என்பதையே ஆணைக் குழுவின் அறிக்கை வெளிப்படுத்துகிறது.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினை விவகாரத்தில் காலம் கடத்துவது, தப்பித்துக்கொள்வது என்ற சிங்கள சித்தாந்தத்தில் இந்த அறிக்கையும் இடம்பெற்றுவிடாத வகையில் சர்வதேசம் தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகித்த காரணத்தாலேயே, அரசினால் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை தவிர்க்க முடியாமல் போனது. அதனை வெளியிட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இறுதிப் போரின்போது தமிழ் மக்கள் மீது போர்க் குற்றங்கள், மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. விடுதலைப்புலிகளின் பிடியில் இருந்து தமிழ்மக்களை மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கைகள் மட்டுமே அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டன. அந்த மனிதாபிமான மீட்புப் போரின்போது தமிழர் ஒருவரேனும் கொல்லப்படவில்லை என்று தொடர்ந்தும் தெரிவித்துவந்த அரசு, போர்க் குற்றங்கள் தொடர்பாக வெளியாகிவந்த ஆதாரங்களையே அடியோடு மறுத்தது.

ஜனாதிபதி மஹிந்தவினதும் அவருடன் இணைந்த சகோதரர்களினதும் 'போர்க் குற்றங்களிலிருந்து தப்பித்தல்' என்ற சமன்பாட்டை வைத்துக்கொண்டு தான் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகச் சிங்களக் கடும் போக்காளர்களே இப்போது குற்றச்சாட்டுக்களை அள்ளிவீசத் தொடங்கிவிட்டனர்.

''நான் அடிக்கிறமாதிரி அடிக்கிறன். நீ அழுகிற மாதிரி அழு'' என்பது போலவே, ஆணைக்குழுவின் அறிக்கை அமைந்திருக்கிறது. இறுதி யுத்தத்தில் வன்னியில் போர்க் குற்றம் எதுவுமே இடம்பெறவில்லை என்பதை வெளிப்படுத்தவே இந்த அறிக்கையில் ஆணைக்குழு முயன்றிருக்கிறது. அத்துடன் போரின்போது, படையினரால் தமிழ்ப் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஷ்பிரயோகங்களையும் திட்டமிட்டுத் தவிர்த்து-மறைத்துச் செயற்பட்டிருக்கிறது ஆணைக்குழு.

■அதிரன்

இப்படியான ஒரு அறிக்கை தொடர்பில் சர்வதேச சமூகம் இலங்கையுடன் எவ்வாறு நடந்துகொள்ளப்போகிறது என்பது இப்போது எழுந்துள்ள கேள்வி. சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் ஆணைக்குழு அறிக்கையை அக்கு வேறு ஆணி வேறாக ஆராய்ந்து விமர்சித்துள்ள நிலையில் இதற்கு எதிராக எழும் கண்டனங்களை அரசு எப்படி சமாளிக்கப்போகிறது என்பது இன்னும் சில நாள்களில் தெரியும்.

எண் (3) குருகுரு ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் குறித்த விபரங்கள் தொடர்கின்றன

**அதிர்ஷ்டமான நிறங்கள்**

மஞ்சள், பொன்னிறம்,சந்தனக்கலர், ஆரஞ்சு, றோசாப்பூ நிறம், ரோஸ், தாமரைப் பூ நிறம், வெளிர் நீலம் போன்ற வர்ணங்கள் குரு ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும்.

**அதிர்ஷ்ட ரத்தினம்**

மஞ்சள், புஷ்பராகம், செவ்வந்திக் கல், கனக புஷ்ப ராகம் போன்றவற்றை வலது கை மோதிர விரலில் தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

**3ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து**

இவர்கள் தங்கள் பெயரை அதிர்ஷ்கரமானதாக மாற்றிக் கொண்ட பின்னர் தாங்கள் இடும் கையெழுத்தையும் வசீகரமாக மாற்றிக் கொள்ள வேண்டும். கையெழுத்தின் ஆரம்பம் வலப்புறச் சுழியுடனும், முக்கோணக் குறியுடனும் அமைக்க வேண்டும். குரு ஆதிக்க எழுத்துக்களை இடைவெட்டுக் குறியில்லாமல் அமைக்க வேண்டும்.

**3 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

நல்ல சிந்தனை வளமிருக்கும். நுண்ணறிவு படைத்தவர்கள். கூர்மையான அறிவும், ஆற்றலும், அதிகாரமிக்க பதவியும் கிடைக்கப் பெறுவார்கள். உடல் பலமிக்கவர்கள், உயர்ந்த எண்ணமுடையவர்கள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணமுடையவர்கள். தெய்வ சக்தியையும், ஆன்ம சக்தியையும் விருத்தி செய்ய முற்படுவார்கள்.

நேர்மையான குணத்துடன் செயற்பட்டு வெற்றி காண்பார்கள்.வாழ்வின் மத்திம வயதுக்குப் பிறகு குடும்ப வாழ்க்கை உயர்ந்த அந்தஸ்துடன் அமையும். நல்ல பட்டதாரியாகவும், படித்த மேதாவியாகவும் இருப்பார்கள். பொருளாதாரம், கணிதம், அறிவியல், விஞ்ஞானத் துறைகளில் பெரிய நிபுணராக விளங்குவார்கள்.

**12 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

தன்னலமற்ற உழைப்பாளிகள். வாழ்க்கையே பிறருக்காக என்று எண்ணுவார்கள். சுய முயற்சியால் முன்னேறுவார்கள். பொதுப் பணிகளில் ஈடுபட்டு பொது மக்களின் பாராட்டைப் பெறுவார்கள்.

**21 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

தன்னுடைய சுய வாழ்க்கையிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். மிகவும் சுயநலமுடையவர்கள் ஆரம்ப வாழ்க்கையில் துன்பத்தையும் துயரத்தையும் அனுபவிப்பார்கள். தன்னுடைய சுய உழைப்பினாலும் முயற்சியாலும் வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள். வியாபார மனமுடையவர்கள். தன்னுடைய பணியில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு வெற்றி காண்பார்கள். பிக்கால வாழ்க்கையில் தன்னுடைய உறுதியால் மிகுந்த அதிர்ஷ்டத்துடன் அனைத்துச் சுகத்தையும் அனுபவித்து வாழ்வார்கள்.

**30 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

மிகச்சிறந்த அறிவாளிகள் தனது இஷ்டப்படியே வாழ்வார்கள். திடமான சிந்தனையிருக்கும்.

**குரு ஆதிக்கப் பெயர் எண்களின் பலன்கள்**

**பெயர் எண் 3**

குருவின் ஆதிக்கம் பெற்ற இந்த எண் சுயமுயற்சியால் உயர்வைத் தரும். வயது ஏற ஏற நிலையான வாழ்க்கையைத் தரும். கல்வியில் மிகப் பெரிய பட்டங்களையும், பதக்கங்களையும் பெற்றுத் தரும். பல்துறைக் கல்வியும் கைகூடும். நல்ல பலத்துடன் சிறப்பான வாழ்க்கை வாழ்வார்கள்.

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (12)



**பெயர் எண் 12**

பொது நலத்துக்காகவே வாழச் செய்யும்.

**பெயர் எண் 21**

வாழ்க்கையின் முற்பகுதி சோதனையாகவேயிருக்கும். பிற்பகுதி சாதனைகளுடன் இருக்கும். இளமையிலேயே குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டியிருக்கும். மன உறுதியால் எதையும் சாதித்து விடுவார்கள். உழைப்பால் உயர்ந்தவர்கள். செல்வம், புகழ், பதவி, பணம் கிடைக்கும். நிரந்தரப் பதவிகள் கிடைக்கும்.

**பெயர் எண் 30**

மற்றவர்களை எளிதில் புரிந்து கொள்ளும் திறமைசாலிகள். மனதில் எண்ணியதை செயலாக்குவார்கள். அபூர்வமான சக்திகள் கிட்டும். பணமோ, புகழோ இவர்களை அடிமையாக்காது.

**பெயர் எண் 39**

நல்ல சிந்தனை வளமிருக்கும். திறமைசாலிகள் தீவிர உழைப்பாளிகள். உடல் ஆரோக்கியம் சற்றுக் குறைவாகவே இருக்கும். உடலில் சரும வியாதிகள் தொற்றிக் கொள்ளும். வாழ்க்கையைத் திட்டமிட்டு வாழ்வார்கள்.

**பெயர் எண் 48**

மற்றவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். பொதுக்காரியத்தில் அதிக ஈடுபாடு இருக்கும். தனக்கு துன்பம் செய்தவரையும் மன்னிக்கும் மனோபக்குவம் கொண்டவர்கள். உடலும் மனமும் ஆன்மிக சக்தியால் ஆட்கொள்ளப்படும்.

**பெயர் எண் 57**

வேகமாக முன்னேறி பின்னர் அப்படியே பின் வாங்கிச் சென்று விடுவார்கள். வெற்றி, தோல்வி கலந்த வாழ்க்கை உண்டாகும். மற்றவர்களைச் சார்ந்து தொழில் செய்வது சிறப்பை தரும். நிதானித்து முடிவெடுப்பது நல்லது. பிற்கால வாழ்க்கையில் துயரங்கள் நிறைந்திருக்கும்.

**பெயர் எண் 66**

இப்பூவுலகில் சுகபோக வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பார்கள். கலைகளில் தேர்ச்சி கிடைக்கும். சகல கலாவல்லவர்கள். கலையாலும், பிறரை மகிழ்விக்கும் காரியத்தாலும், தனது பேச்சாலும் பெரும் செல்வம் சேர்ப் பார்கள்.

**பெயர் எண் 75**

எழுத்தும், பேச்சும் கலையும் கைகூடும். பல்வேறு வழியிலும் நண்பர்கள் உதவ முன்வருவார்கள். பெரும் புகழ் கிட்டும். மற்றவர்களுக்கு உதவுவதில் ஆர்வமுடையவர்கள். தொலைக்காட்சி பத்திரிகைத் துறைக்குச் சிறந்த எண்ணாகும்.

**பெயர் எண் 84**

இளமைக்காலம் போராட்டமாகவே இருக்கும். வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட வேண்டியிருக்கும். மனம் ஒரு நிலையில் நில்லாது. காரணமில்லாமல் மனம் கவலை கொள்ளும். முயற்சிக்கு தகுந்த பலன் கிடைக்காது. ஊக்கத்தை அடிக்கடி இழப்பார்கள்.

**பெயர் எண் 93**

சிறந்த அறிவாற்றல் மிக்கது. செயற்கரிய செயல்கள் பல செய்து காட்டக் கூடியவர்கள். நாலும் தெரிந்தவர்கள் என்ற பெயரெடுப்பார்கள். பல தொழில் செய்து பெரும் பணம் ஈட்டுவார்கள்.

**பெயர் எண் 102**

ஆரம்பத்தில் வெற்றியும். வாழ்வின் நடுவில் தோல்வியும். இறுதியில் குழப்பத்தையும் தரும். இளமைக்கால வாழ்க்கை அதிர்ஷ்டமாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். ஒரு வித பிடிவாத குணம் இருக்கும். பல நாள் உழைத்துச் சேர்த்த பொருளை ஒரே நாளில் இழக்க வேண்டியதாய் இருக்கும்.

**குரு ஆதிக்க எழுத்துக்களின் குணாதிசயங்கள்**

C.. சதா கற்பனையிலும், எப்பொழுதும் மனக் கோட்டை கட்டும் சுபாவமும் மிகுந்து காணப்படும். பெயரின் ஆரம்பத்தில் வந்தால் ஆண்மைப் பலமும், ஆதிக்க சக்தியும் நிறைந்து காணப்படும். ஆட்சி செய்யும் பலமிக்கது. சுறுசுறுப்பும், உற்சாகமும் மிகுந்திருக்கும். நிர்வாகத்திறனும், படைப்பாற்றலும் பெருகும். முன்னேற்றத்தில் தீவிர ஆர்வம் இருக்கும். புகழ் பெற விருப்பம் இருக்கும். மிக உயர்வான எண்ணத்துடன் வாழ்வார்கள். மேலான லட்சியத்துடன் வாழ்வார்கள். சுகமாக வாழவே ஆசைப்படுவார்கள்.

G...எதையும் தாங்கும் இதயம் படைத்ததாகும். முந்தைய எழுத்தை விட சற்றே வடிவத்தில் மாறுபட்டது. ஆனால் அதைவிட மேன்மை வசீகரம் பொருந்தியது. மிதமிஞ்சின தன்னம்பிக்கை இருக்கும். திட்டமிட்டுக் காரியமாற்றுவார்கள். தீர்க்கதரிசிகள் போல் முன்கூட்டியே முடிவை அறிந்து கொள்வார்கள். சத்தியத்தையும் அன்பையும் மதிப்பார்கள். தியாக உள்ளம் படைத்தவர்கள். சாதனை செய்வார்கள். மனித நேயம் மிக்கவர்கள்.

L... பிறரை வேலை வாங்கிக் கொண்டே இருப்பார்கள். மறதி என்பதே கிடையாது. நினைப்பதைச் செயலாக்கத் துடிப்பார்கள். காரியவாதியாகவும், சுயநல எண்ணத்துடனும் செயற்படுவார்கள். பிறரைத் தன்வசப்படுத்துவார்கள். நேர்வழியையே மனம் நாடும். இராஜ தந்திரம் மிக்கவர்கள்.

S...ஸ்திரமில்லாத சஞ்சல மனமுடையது. ஒரு பிரச்சினை என்றால், பலவாறு குழம்பிப் போவார்கள். மேலான எண்ணத்தோடு மக்கள் துயர் போக்கப் பாடுபடுவார்கள். வைத்தியம் இவர்களுக்குப் பலிதமாகும். புகழ் சேரும். சாதாரண விஷயத்துக்கே மிகவும் கோபப்படுவார்கள்.

*(தொடரும்)*



கலாபூஷண அரச விருது வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பு ஜோன் த சில்வா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராஜாவுக்கு ஊடகத் துறைக்கான கலாபூசணம் உயர்விருதை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் வழங்குகிறார்.

# மக்கள் முகம்

சாவகச்சேரி நகரசபை செயலாளராக கடமையாற்றிய, கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீல் இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கு நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை 2009 இல் சித்தி பெற்றதையடுத்து ஜனவரி இரண்டாம் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச்சேவை ஆணைக் குழுவின் இணைய தளத்தில் அறிவிக்கப் பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையில் செயலாளர்களாக கடமையாற்றிய வேளையில் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட நான்காவது செயலாளர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஏற்கனவே த.நவரத்தினராசா, முன்னாள் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக கடமையாற்றிய சி.நடராசா, யாழ்.மாநகர ஆணையாளராக கடமையாற்றும் மு.செ.சரவணபவ ஆகியோர் சாவகச்சேரி நகரசபையில் செயலாளர்களாக கடமையாற்றிய வேளையில் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-207)

---



சென்.ஜேம்ஸ் வீதி பண்டத் தரிப்பை வசிப் ...க் கொண்டவரும் கொக்கு வில் ஆனைக்கோட்டை யிலுள்ள இஸ்த் ...பதிகளின் மகனாகிய இம்மானுவேல் ...இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். சம்பத்திரிசி யார் கல்லூரி பழைய மாணவரும் இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தரும் ஆவார்.

# நண்பனின் துரோகம்



- திவ்யா -

கந்தனிடம் இரண்டு நல்முத்துக்கள் இருந்தன. அவை இரண்டும் விலைமதிப்பு உடையவை. நீண்ட நாள்களாக அவற்றை அவர் காப்பாற்றி வந்தான்.

ஒருமுறை அவர் வியாபார விடயமாக வெளியூர் செல்ல நேரிட்டது. அந்த இரண்டு முத்துக்களையும் வீட்டில் வைத்து விட்டுச் செல்ல அஞ்சினார். தாம் இல்லாத சமயத்தில் திருடர் எவராவது வீட்டில் புகுந்து திருடிவிடக் கூடும் என்று பயந்த அவர் தம்முடைய நண்பனான கேசவனிடம் அந்த முத்துக்களை கொடுத்து வியாபார விடயமாக வெளியூர் செல்வதாகவும் திரும்பி வந்தவுடன் வாங்கிக் கொள்வதாகவும் சொல்லிச் சென்றார்.

கந்தன் சில நாள் கழித்து ஊருக்கு திரும்பி வந்து கேசவனிடம் தான் கொடுத்து வைத்திருந்த நல்முத்துக்களைத் திருப்பித் தருமாறு கேட்டார். ஆனால் கேசவனோ நல்முத்துக்களா? யாரிடம் கொடுத்தாய்? கனவு ஏதாவது கண்டுவிட்டு வந்து உளறுகிறாயா? என்று கேட்டுவிட்டான்.

தன் நண்பன் இவ்வாறு பேசுவான் என்று சற்றும் எதிர்பாராத கந்தன் மிகவும் மனம் வருந்திப்போனான். இனி இவனிடம் பேசிப் பிரயோசனம் இல்லை என்று முடிவு செய்தவன் நேராக மரியாதை ராமனிடம் சென்று முறையிட்டான்.

வழக்கை பொறுமையாகக் கேட்டறிந்த மரியாதை ராமன் அந்த வழக்கில் இருந்த சில கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்.


ஐயா, உங்கள் வழக்கில் நான் எப்படித் தீர்ப்பு வழங்க முடியும்? நீங்கள் விலையுயர்ந்த முத்துக்களைக் கேசவனிடம் கொடுத்த போது பார்த்த சாட்சிகள் எதுவும் இல்லை. அப்படி இருக்கும் போது கேசவனிடமிருந்து எப்படி விலை உயர்ந்த முத்துக்களை வாங்க முடியும்? நீங்கள் வீட்டுக்குப் போங்கள். வேறு உபாயம் ஏதாவது செய்வோம் என்று கூறி கந்தனை வீட்டுக்கு அனுப்பி வைத்தான் மரியாதை ராமன்.

மறுநாள் ஒருவரைக் கேசவனிடம் அனுப்பி அவரை அழைத்தார் மரியாதை ராமன். கேசவன் வந்ததும் அவனிடம் ஒரு சிறு பேழையைக் கொடுத்தார். அதற்குள் நிறைய முத்துக்கள் இருந்தன. என்னிடமிருந்த முத்துமாலையின் சரம் அறுந்து விட்டது. நீங்கள் முத்துக்களைக் கோர்ப்பதில் நிபுணரென்று கேள்விப்பட்டேன். இதில் 100 முத்துக்கள் உள்ளன. இதை மாலையாகக் கோர்த்து வந்து கொடுங்கள் என்றான் மரியாதை ராமன்.

கேசவன் மரியாதை ராமன் கொடுத்த பேழையுடன் வீட்டுக்கு வந்தான். பேழையை ஒரு பெட்டியின் மேல் வைத்துவிட்டு அவசரமாகக் கொல்லைப் புறம் சென்றான்.

(தொடரும்)

# அழகிய ஜேர்மன்...!



ஜேர்மனி கிழக்கு- மற்றும் மேற்கு என இரண்டு பகுதிகளாக 1949 ஆம் ஆண்டு முதல் 1990வரை இருந்தது. கிழக்கு ஜேர்மனிக்கு கிழக்கு பெர்லின் தலை நகரமாகவும் மேற்கு ஜேர்மனிக்கு பான் தலை நகரமாகவும் இருந்தன. மேற்கு பெர்லினை கிழக்கு பெர்லின் மற்றும் கிழக்கு ஜேர்மனில் இருந்து பிரிக்க 1961 இல் பெர்லின் சுவர் கட்டப்பட்டது. 1989 இல் சுவர் உடைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட ஜேர்மனிக்கு பெர்லின் தலைநகரமானது.

இப்போது ஜேர்மன் 16 மாநிலங்களைக் கொண்ட ஒரு கூட்டாட்சி நாடாளுமன்றக் குடியரசாகும். இதன் தலைநகரம் பெர்லின். இதுவே இந்த நாட்டின் பெரிய நகரமும் ஆகும்.

ஜேர்மனியில் அதிகம் பேசப்படும் மொழி ஜேர்மன் ஆகும். இதுவே தேசிய மொழியும் ஆகும். இது ஆங்கிலம் போன்ற எழுத்துக்களைக் கொண்டிருந்தாலும் மிகவும் வேறுபட்ட ஒலி உடையதாகும்

ஜேர்மனியில் பல முக்கிய நதிகள் உள்ளன. இவற்றுள் மிக நீளமான ரைன் ஆறு 865 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நீர்வழி போக்குவரத்துக்கு இந்த நதிகள் உதவுகின்றன. ஜேர்மனியர்களின் உணவுப்பழக்கம் பிராந்தியத்துக்குப் பிராந்தியம் வேறுபடுகிறது. ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒவ்வொரு விதமான உணவை தமது பிரத்தியேக உணவாக வைத்திருக்கிறார்கள்.

ஜேர்மனியில் அதிகமானோர் கிறித்தவத்தைப் பின்பற்றினாலும் மற்ற மதங்களும் இங்கு ஆதரிக்கப்படுகின்றன. ஜேர்மனியின் நோட்றைன் - வெஸ்ட் ஃபாலன் மாநிலத்தில் உள்ள ஹம் என்னும் ஊரில் கோபுரத்தோடு கூடிய அம்மன் கோயில் உள்ளது ஜேர்மனியின் பல ஊர்களில் கோயில்கள் இருந்தாலும்,கோபுர அமைப்போடு இருப்பதால் ஜேர்மனியின் மற்ற மாநிலங்களில் இருந்தும் மக்கள் அதிக அளவில் ஹம்மில் இருக்கும் கோயிலுக்கு வருகின்றனர்.

# அறிவுச்சுடர்

1.உலகிலேயே மிகப் பெரிய விலங்கு எது?

நீலத்திமிங்கிலம். இது 30 மீற்றர் நீளமும், 150 தொன் வரையிலான நிறை உடையது.

2.பச்சோந்தியை விட வேறு எந்த உயிரினம் சூழலுக்கு ஏற்ப உடல் நிறத்தை மாற்றிக் கொள்ளும்?

கடலில் ''அயே சொப் இறால்'' என்றொரு இறால் இனம் உள்ளது இது பச்சோந்தி இறால் என்றும் அழைக்கப்படுகிறது.

3.அம்பர் கிறிஸ் என்றால் என்ன?

ஸ்பெர்ம் திமிங்கிலத்தின் குடலிலிருந்து வரும் மெழுகு போன்ற பொருள் இது வாசனைத் திரவியங்கள் செய்யப் பயன்படுகிறது.

4.கல், ஆணி, கண்ணாடித்துண்டுகள் என்பவற்றை விழுங்கிவிடும் பறவை எது?

தீக்கோழி இது 60 மைல் மணி வேகத்தில் ஓடும்.

5.கபில நிறமான கரடிகள் எங்கே வாழ்கின்றன?

அல்ப்ஸ் மலைப்பள்ளத் தாக்குகளில் வாழ்கின்றன.

6.முட்டைகளை அடைகாக்கும் ஆண் பறவை எது? எங்குள்ளது?

எமு. இது ஆஸ்திரேலியாவில் உள்ளது.

7.அசுகுனி என்பது யாது?

இது ஒரு செடிப் பேன் ஆகும். மிகச்சிறிய பூச்சியினமான இது செடிகளின் சாறை உறிஞ்சிக் குடித்து உயிர் வாழ்கிறது

8.கரப்பான் பூச்சியின் இரத்தத்தின் நிறம் என்ன?

வெள்ளை

9.அன்னாசி பழம் எத்தனை வகையானது?

சுமார் 90 வகை

வி.பிரசாத், தரம்-8ஏ,
யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்.

# பொது அறிவு

1. உலகின் கலாசார சொத்து என இலங்கையில் அழைக்கப்படுவது எது?

**காலிக் கோட்டை**

2. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை யாது?

**27**

3. இலங்கையில் டெங்கு நோயை அழிப்பதற்கு கொண்டுவரப்பட்ட பக்ரீரியா பெயர் யாது?

**பிரிஜ பக்ரீரியா**

4. இலங்கை சுனாமி எச்சரிக்கை நிலையம் எங்கு அமைந்துள்ளது?

**கிக்கருவ**


5. பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரம் எது?

**சூரியன்**

6. 2007 ஆண்டு உலக சர்வதேச எய்ட்ஸ் மாநாடு எந்நாட்டில் நடைபெற்றது?

**இலட்கொழு**

தர்மலிங்கம் நிசாந்தினி, யா/ அத்தியார் இந்துக் கல்லூரி



மன்னாரிலுள்ள வங்காலைக் கிராமத்தின் முன்பள்ளிச் சிறார்களின் ஒளிவிழா நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இதில் சிறார்களின் நத்தார் இசை நிகழ்வைக் காணலாம்.

# "எப்படி ஐயா அளவோடு இருப்பது...?"

எனது வேலை காரணமாக என்னைச் சந்திக்க வரும் மனிதர்களை (துணை நாடிகளை) ''பெரிய டாக்டரிடம்'' காண்பிக்க வேண்டிய தேவை ஏற்படும். வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் தமக்கு சிகிச்சை அளிக்க வரும் பிரதம மருத்துவர்களை அன்பாக 'பெரிய டாக்டர்' என அழைப்பது வழக்கம்.பெரிய டாக்டர் இண்டைக்கு வருவாரா? பெரிய டாக்டர் இண்டைக்கு லீவாம் எனச் சொல்லிக் கதைக்கும் போது அதில் இறுக்கமான உறவொன்றை சிகிச்சை பெற வந்தவர் பெரிய டாக்டரிடம் வைத்திருப்பதை பேச்சு வாக்கில் புரிந்து கொள்ள முடியும். அதிலுள்ள பாசம், நேசம் தனித்துவமானது. உரிமையானது. இதைத் தவிர இந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மருத்துவரை '' பெரிசு, சேர், பொன்'' எனப் பல பெயர்களில் ரகசியமாக தங்களோடு சேர்ந்தவர்களோடு கதைத்துக் கொள்வார்கள்.

இவர்கள் இப்படிக் கதைப்பது அந்தப் பெரிய டாக்டர்மாருக்கும் தெரியும். அவர்கள் எல்லாவற்றையும் கடந்தவர்கள் ஆயிற்றே. இப்படியாக பெரிய டாக்டரிடம் என்னிடம் வந்த துணைநாடியைக் காண்பிக்கும் போது தான் வந்தவர் டாக்டரிடம் சரளமாகக் கதைத்தார்.அவர் முன்பு வந்த போது இருந்த பிரச்சினை, இப்போதுள்ள நிலை, உடல் உள முன்னேற்றங்கள் அவர் பேச்சில் நல்ல படியாகத் தெரிந்தன. அவர் தொடர்ந்தார். ''ஐயா! இப்ப நல்லா இருக்கிறன். நல்ல நித்திரை, நல்லாய் பசிக்குது, ஒரு நாளைக்கு நாலைஞ்சு தரம் சாப்பிட வேண்டி இருக்கு, ஐயா இப்படிச் சாப்பிடுறது நல்லதுதானே? முந்தி நான் இப்படிச் சாப்பிடுறதே இல்ல.''

அவர் மிகவும் ரசித்து ஆர்வமாகச் சொன்னார். அவர் பேச்சை முடிக்க மருத்துவர் சொன்னார். ''பசிக்குச் சாப்பிடத்தான் வேணும், ஆனா ஒரு நாளைக்கு நாலைஞ்சு தரம் சாப்பிடுறது கூடாதெல்லே...?'' மருத்துவர் கூறியது துணை நாடிக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. முகத்தில் சிரிப்பு வேறு மறு கேள்வியைத் தொடுத்தார்.'' என்ன ஐயா நல்லாச் சாப்பிடுறது உடம்புக்கு நல்லது தானே, கனக்கச் சாப்பிடுறது உடம்புக்கு கூடாதென்று சொல்லிறியள்? மருத்துவர் பதில் கூறினார். '' ஒரு நாளைக்கு நாலைஞ்சு தரம் சாப்பிட்டால். உடம்பு பெருக்கும், உடம்பு பெருத்தால் கொலஸ்ரோல் கூடும்... பிறகு சலரோகம் எண்டு ஏகப்பட்ட நோய் வந்திடும்.'' ஆர்வமாய் இருந்தவர் முகம் சுருங்கிப் போய்விட்டது. மருத்துவர் சொன்ன விடயம் அவரைத் திடுக்கிடச் செய்தது. மறுபடி கேள்வி தொடுத்தார். ''எப்படி ஐயா அளவோடு இருப்பது?'' ''அதைத் தானே வாழ்க்கைத் தத்துவம் சொல்லுது. எங்களுக்கெண்டு நாங்கள் கண்டபடி எதையும் செய்யலாகாது; வாழ்க்கைக் கெண்டு ஒரு அளவு இருக்கிறது. அதை நாங்கள் வைத்துக் கொண்டு வாழ வேண்டும்.....'' மருத்துவர் சொல்லியபடி மெல்லியதாகச் சிரித்தார்.

அட பூமியில் வாழ்ந்து போதலுக்கும் அளவு வரையறை உள்ளதா? அளவோடு இருந்து வாழ்தல் என்பது மனிதர்களுக்கு மிகவும் கஸ்ரமான காரியமாயிற்றே. நடைமுறையில் அளவு கோல்கள் சாத்தியமாகுமா,? சாதாரணமாக நாம் உண்ணும் உணவிலேயே அளவு வைத்துக் கொண்டு வாழுதல் கஸ்ரமான காரியமாகத் தெரிகின்றதே. மனித வாழ்வில் அளவு என்பதை எந்த விடயங்களில் வைத்து நாம் வாழ வேண்டும்; எவ்வளவு பிரச்சினைகள் நமது சமுதாயத்தில் ஊடறுத்து நிற்கின்றன; இந்தப் பிரச்சினைகள் பெரிதாக வளர்ந்து விசுபரூபம் எடுத்தமைக்கான காரணங்கள் அளவு என்பதை நாம் கவனத்தில் கொள்ளாது விட்டமைதானோ!

அட்டா நாம் கண்மண் தெரியாமல், மனம் போன போக்கில் வாழ்வது முட்டாள்தனமான விசயமா? எம்மைப் படைத்தவனும் லேசுப்பட்ட ஆளல்ல. நாம் எதுவும் எமது இஸ்ரப்படி செய்து விட முடியாது. இந்த அளவுகள் இல்லா விட்டால் இவை எல்லாவற்றையும் கடந்து நாங்களும் முனிவர்கள், ஞானிகள் போல் மாறி இருப்போமா? ஞானிகள் எல்லாம் இந்த அளவுத் திட்டத்தை கடைப்பிடித்து அதனை விரதமாக்கி வாழ்க்கையில் சாதனை செய்து தான் இந்தப் பெரும் பேற்றினைஅடைந்தார்களா? இந்த மனப்பக்குவம் அடையாமல் நாம் 'ஞான' நிலையை அடைவது கஸ்ரமான காரியமே.

நாம் உண்ணும் உணவில் தொடங்கி, பிள்ளைகள் பெறுவது, தாம்பத்திய உறவு, சொத்துத் தேடல், புகழ், மாலை, மரியாதை, தொழில் என்னும் பல்வேறு தேவைகளில் நாங்கள் எந்த அளவுகோலை வைத்துள்ளோம் யோசித்துப் பார்ப்போமா? பணம், நகை விடயங்களில் எனது குடும்பத்துக்கு இவ்வளவும் போதும்; இனித் தேவை இல்லை; பிள்ளைகள் கஸ்ரப்பட்டுப் படித்துத் தாங்க ளாக தேவையானதைத் தேடிக் கொள்ளட்டும்; உழைப்பின் வலி, கஸ்ரம் அவர்க ளுக்குத் தெரியவேணும்... எத்தனை பேர் இப்படி எண்ணுகிறோம். பலர் தேடிய சொத்துக்களைப் பார்த்தால் பல சந்ததிகளுக்கு அவை போதுமானதாக இருக்கும்.

திருவிழாக்களில் சமயச் சொற்பொழிவு செய்வோர் மக்களிடம் ''ஆசையைத் துறவுங்கள்- ஆசையைத் துறவுங்கள்'' எனச் சொல்லி மாய்ந்து போகின்றனர். நாங்கள் ஒன்றையும் துறப்பதில்லை. இன்னும் புதிது புதிதாக வங்கிகளில் கணக்குக்களைத் திறந்து கொண்டுதான் இருக்கின்றோம். சரி நாங்கள் எப்படி இந்த விடயத்தைத் தயார்ப்படுத்துவது? எமக்கெண்டு அளவு கோலை வைத்து வாழ்க்கையை எப்படி மாற்றி அமைப்பது? நீங்கள் பார்க்கலாம் குடிக்கும் மதுவுக்கு, ''அளவு'' வைத்துக் கொள்ளத் தெரியாமல் பல பேர் எப்படி மதுவுக்கு அடிமையாகின்றார்கள். ஊரில் சிறிய தொழிலோடு வருவாய் பெற்று அன்பு மனைவி பிள்ளைகளுடன் குடும்பம் அளவாக நடத்தத் தெரியாமல் பெரும் காசு புரட்ட வெளிக்கிட்டு, வெளிநாடு போய் ஏமாந்த கதைகளை எல்லோரும் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறோம். ஏன் இந்த அவலம்?

உங்களுக்கு முன்பு படித்த ''கிரிசாம்பாள்'' என்ற ஏழைச் சிறுமியின் கதை தெரியும். செல்வந்தர் தானமாகக் கொடுக்கும் மோதகத்துக்கு பலர் அடிபட்டு அதனைப் பெறும் போது, இவள் மட்டும் அமைதியாகத் தனக்கு கடைசியாகக் கிடைக்கும் அந்தச் சிறிய மோதகத்தைக் கடைசியாக நன்றி சொல்லிப் பெற்றுக் கொள்வாள். அந்தச் சிறுமி, அந்த அளவு கோலை வைத்து பொறுமை காத்தாள். கடைசியில் தங்கக் காசு எப்படிக் கிடைத்தது? எங்களுக்கும் அடிக்கடி மோதகங்கள் கிடைக்கின்றன. ஆனால் இன்று வரை தங்கக் காசு கிடைக்க வில்லை. காரணம் நாங்கள் அளவுகளை மாற்றிக் கொள்ளவில்லை. எமது துன்பங்களுக்கு, மாற்றிக் கொள்ளாத அளவுகள்தான் காரணமா?

■தொல்புரம்:சி.கதிர்காமநாதன்






# அவனருளி

# அவனடி தாழ்த

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த நிலையில் யமுனாபாய் குண்ட் என்ற பகுதியில் பலர் நீராடிக் கொண்டிருந்தார்கள். அங்கே நீரின் குளிரை எம்மால் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை. கொஞ்ச நீரைத் தீர்த்த மாகப் பருகியதுடன் மூன்று செம்பு நீரைத் தலையில் ஊற்றிக் கொண்டு யமுனாபாய் குண்ட் என்ற பகுதியில் சுடுநீரில் நீராடு வதற்காக ஓடினோம்.

அங்கு நீராவி போல நீர் கொதித் துக் கொண்டிருந்தது. அங்கு நீரில் குதித்து நீராடினோம். எம்மைப் பீடித்திருந்த குளி ரும், நடுக்கமும் எங்கு போனதோ தெரியவில்லை. எமக்கு புதிய உத்வேகம் ஏற்பட்டது. ஒரு புறம் நீரானது பனிக்கட்டி போல கை வைக்க முடியாதிருக்க, இன்னொரு புறம் எமக்காக இவ்வளவு உயர்ந்த மலை யகத்தில் சுடுநீர் வசதியை ஏற்படுத்தித் தந்த இயற்கை அன்னையை நினைத்து ஆனந் தக் கண்ணீரைக் காணிக்கை யாக்கினோம். யமுனை நீர் ஒரு வாய் பருகினால் பெரிய யாகங் கள் செய்த புண்ணியம் கிடைப் பதாக நாம் தீர்த்தத்தை அருந்திய வேளை சாது ஒருவர் கூறினார்.

இந்தச் சுடுநீர்த் தடாகத்தின் மறு புறத்தில் பெரிய உருளைக் கிழங்குகளை, துணியொன்றில் வைத்து மூடி நூலில்கட்டி அந்த நீரிலிட்டு, இரண்டு நிமிடங் களில் அவித்துக் கொடுக்கின் றார்கள். இதுபோலவே அரிசி மூடைகள் சோறாக்கப்பட்டும், காய்கறிகள் வேக வைக்கப் பட்டும் வழங்கப்பட்டதைப் பார்வையிட்டோம்.

நீராடிய பின் அம்பாளைத் தரிசிப்பதற்காக ஆலயத்துக்குச் சென்றோம். முதலில் வாயி லின் அருகில் வீற்றிருந்த வலம் புரி விநாயகரைத் தரிசித்தோம். யமுனா தேவி விக்கிரத்தைத் தரிசித்த பின், ஆலயத் தின் கருவறையில், இருக்கின்ற திருக்கோலத்திலுள்ள யமுனா தேவியையும் அவரின் பக்கத் தில் வீற்றிருக்கும் கங்காதேவி யையும், இந்தக் கோவிலுக்கு சிறுதொலைவிலுள்ள ஆஞ்ச நேயரையும் தரிசித்தோம். இங் நமது (இலங்கை) நாட்டி ருந்து வந்த பன்னிரண்டு சா கள் இன்றும் தவநிலையி இருப்பதாக அங்குள்ளோர் கூ னார்கள். ஆனால் அவர்களை தரிசிக்க எமக்குச் சந்தர்ப்ப கிடைக்கவில்லை.

ஆலயத்திற்குப் பின்பக் தில். பெரிய பிரமாண்டமா மலை தெரிந்தது. அம்மன யின் முகடு 6300 மீற்றர் (210 அடி) உயரம் உடையது என் கூறினார்கள். இலங்கையைத் மூட்டி அழித்த பின்னர் அ மார் தனது வாலிலுள்ள நெருப் இமயத்திலுள்ள இந்த மல முகட்டிலேயே தேய்த்து அழ தார் எனவும், அதனால் இம் மல முகடு பந்தர் பூஞ்ச் (கு குவால்) என்று அழைக்கப்ப வதாகவும் கூறினார்கள்.

அம்பாளின் தரிசனம் பிரா

## ஒரு குழந்தை அழுகிறது

-கவிஞர் கண்ணதாசனின் கடைசிப் பக்கம்-

''இனி நான் அனுபவிக்கப் போகும் மன வியாதிகளையும், உடல் நோய்களையும் ஏற்றுக் கொள்ள உனக்குச் சக்தி உண்டா?

''விதை போட்டுத் தண்ணீர் ஊற்றிய உங்கள் குலதர்மம் என்னைக் கனி மரமாக்குமோ, விறகாக்குமோ- யார் கண்டது?

''நான் சாகிற வரையில் எனக்குத் தேவையான எல்லா விஷயங்களுக்கும் உயில் எழுதி விட்டா நீங்கள் பள்ளி அறையில் சந்தித்தீர்கள்?

''மகள் கர்ப்பமாகி விட்டாள்'' என்று தாயாரும், 'மருமகள் கர்ப்பமாகி விட்டாள்' என்று மாமியாரும் வளை காப்புக் கொண்டாடினார்கள்.

''என் நிலை என்ன?

''உடல் உறவை நியாயப்படுத்திய; சாஸ்திரங்கள் நான் நடக்கப் போகும் வழியெங்கும் எந்த வகையில் துணைபுரியப் போகின்றன?''

'அம்மா' என்று சொல்வதற்கு எனக்குக் கற்றுக் கொடுக்கிறாய்; அதன் பொருள் என்ன?

''இனி நான் அழும்போதெல்லாம் 'அம்மா' என்றுதானே அழப்போகிறேன். அதுதானா?

''அழும்போது 'அம்மம்மா' என்றும், 'போதும் போதும் என்று அலுத்துக் கொள்ளும் போது 'அப்பப்பா' என்றும் மனிதர்கள் கதறுகிறார்கள்.

''நீங்கள் இரண்டு பேர்தானே அத்தனைக்கும் காரணம்; அதனால் தான்!

''தாயே!''

''நீ என்னை ஏன் தூங்க வைக்கிறாய்?''

''நான் அழாமல் இருப்பதற்குத்தான்!''

''தூங்கிக் கொண்டே இருந்து விட்டால் நிச்சயமாக நான் அழப் போவதில்லை.''

'நிரந்தரமாகத் தூங்கி விட்டால் பிறகு அழுகையே இல்லை.'

'அதைவிட நான் பிறக்காமலே இருந்திருந்தால்...?

''அதை, நான் நினைத்து என்ன செய்வது?

''காமதேவன் விட்ட அம்பு, காலதேவன் மடியில் வந்து விழுந்து விட்டது''

''இனி மரண தேவனைச் சந்திக்கின்ற வரையில் என் வாழ்க்கை கரணம் போடத்தான் போகிறது; கண்ணீர் விடத்தான் போகிறது.''

அந்தக் குழந்தையின் கண்களில் இருந்து கண்ணீர் வரும்போது இவ்வளவை யும் சிந்திக்கிறதா?

ஆம்; சிந்திக்கிறது.

அதைப் புரிந்து கொள்ளும் யோக்கியதை விஞ்ஞானிக்குக் கூடக் கிடையாது

அது ஒத்திகை முடிந்து அப்போதுதான் அரங்கேறுகிறது.

அதற்கு ஆண்டவன் தலைமை வகிக்கிறான்.

அந்தக் குழந்தையை அழ விடுங்கள்.

அது பசிக்காக அழவில்லை.

பிறந்த பாவத்திற்காக அழுகிறது.

(முற்றும்)



ரின்றி

தல் அரிது

இங்கு
டிலி
சாதுக்
யில்
கூறி
ளைத்
ப்பம்

பக்கத்
மான
மலை
21000
என்று
யத் தீ
அநு
ப்பை
மலை
அழித்
மலை
குரங்
ப்படு

ிரார்த்

தனை ஆகியவற்றை நிறைவேற்றிய பின்னர், சில மணிநேரம் ஆலயச் சுற்றாடலில் ஓய்வெடுத்த பின்னர் மலை அடிவாரத்தை நோக்கி நடந்து இயற்கைக் காட்சிகளையும் இடையிடையே காட்சி தரும் நதியின் நீரோட்டங்களையும் ரசித்த வண்ணம் எந்த விதமான களைப்புமின்றி விரைவாக எமது மோட்டார் வாகனம் நிறுத்தப்பட்ட இடத்தைச் சுலபமாக வந்து சேர்ந்தோம்.

அங்கிருந்து புறப்பட்டு சேனாசட்டி, பார்கோட் தாராசு ஆகிய ஊர்களினூடாக ஏறக் குறைய 110 கிலோமீற்றர் பயணம் செய்து இரவு 8.40 மணிக்கு உத்தரகாசியை அடைந்து அங்குள்ள விடுதியில் இரவு தங்கினோம்.

*(தொடரும்)*

# பெர்னாட்ஷாவின் வாழ்வும் பொன்மொழியும்

- அருணா தர்மலிங்கம்



மிலேனியம் ஆண்டாக மிளிருகின்ற இன்றைய காலகட்டத்திலும் கலை ஆர்வம் மிக்கவர்கள் பலர் வாழ்கின்றனர் என்பது கண்கூடு. அவர்கள் அறிந்து வைத்துள்ள ஆங்கில நாடக ஆசிரியர்களுள் ஒருவர் தான் ஜோர்ஜ் பெர்னாட்ஷா என்று கூறினாலும் மிகையாகாது.

ஏலவே வேடிக்கையாகவும், வினையாகவும் பளிச்சென்று பதிலளிக்கவல்ல பெர்னாட்ஷாவின், தோற்றம், நகைச்சுவை, சிலேடைப் பேச்சு என்பவற்றுடன் அவரின் பொன் மொழிகள் சிலவற்றையும் ஆராய்வது இங்கு உசிதமாகும்.

அரசியல், சமூகம், கலை, இலக்கியம் போன்ற எல்லாத் துறைகளிலும் தனது பேனாவை ஓட்டிய மேதை, பாதி அறிஞர் எனவும் பாதி கோமாளி எனவும் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் ஆளான கவிஞர் ஆங்கிலத்தில் ஜீ.பி.எஸ் (G.B.S) என்று மூன்று எழுத்துக்களினால் சுருக்கமாகக் குறிக்கப்பட்டு உலகம் முழுவதும் அறிந்த ஆங்கில நாடக ஆசிரியரே அந்த விந்தை மனிதர். அவர்தான் ஜோர்ஜ் பெர்னாட்ஷா என்ற முழுப் பெயருக்கு உரித்தானவர். பொதுவாக இவர் நகைச்சுவைஞர் களஞ்சியம் எனப் போற்றப்படுபவர் என்றும் கூறலாம். இவர் தனது முதுமையிலும் தொடர்ந்து நாடகங்கள் எழுதி வந்தார்.

ஒருமுறை பெர்னாட்ஷாவிற்கு எல்லோராலும் மெச்சப்படுகின்ற நோபல் பரிசு கிடைத்தது. ஆனால் அவர் முதலில் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். பிறகு நண்பர்களுடைய வற்புறுத்தலின் அடிப்படையில் பெற்றுக்கொண்டார். ஏன் அப்படிச் செய்தார் என்றால் அவருடைய குணாதிசயமே அதுதான் என்பது வெள்ளிடைமலை. பரிசாக அவருக்கு எண்ணாயிரம் பவுண் கிடைத்தது. நீரில் மூழ்கி மூச்சுத்திணறி கரையேறிய பிறகு அவனுக்கு பாதுகாப்புப் பட்டையை (Belt) எறிகிற மாதிரி தமக்கு இந்தப் பணம் என்று ஏளனமாக ஷா குறிப்பிட்டார். கிடைத்த பணம் அனைத்தையும் கலை, இலக்கியம் போன்றவற்றின் வளர்ச்சிக்காக அளித்து விட்டார்.

இனி பெர்னாட்ஷாவைப்பற்றி மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்கள் சிலவற்றைப் பார்ப்போம். பெர்னாட்ஷாஷாவைவிட ஒரு மேதாவி கிடையாது என்று சிலர் கூறினார்கள். அவர் ஒரு கோமாளி, உலகத்துக்கு மாறாக ஏதாவது சொல்லிச் சிரிக்க வைக்கும் விகடன் என்கின்றனர் ஒரு சாரார்.

மற்றவர்கள் காலால் நடந்தால் இவர் தலையால் நடப்பார். செருக்கும் கிறுக்கும் உடையவர் மனித தன்மையே அற்றவர் என்று எண்ணினார்கள் பலர். ஆங்கில நாடக உலகில் பெர்னாட்ஷா ஒரு புரட்சியை உண்டு பண்ணினார் என்பது மறுப்பதற்கில்லை.

பெர்னாட்ஷா தலையிடாத துறைகளே இல்லையெனலாம். சொல்லின் செல்வர், உரைநடைவேந்தன் அரசியல் அறிவாளி மெய்ப் பொருளை ஆராயும் பழுத்த ஞானி, நகைச்சுவை மன்னன் என்று போற்றப்படுகிறார்.

பெர்னாட்ஷாவின் நாடகங்களில் ஒது புதுமையைக் காணலாம். அதாவது அவருடைய நாடகங்களில் பாதி முன்னுரையாகவும் பாதி நாடகமாகவும் இருக்கும்.

இனி பெர்னாட்ஷாஷாவின் தோற்றத்தைப் பற்றிய தகவல்களைப் பார்ப்போம். அயர்லாந்துக்காரரான பெர்னாட்ஷா டப்ளின் நகரில் 1856 இல் பிறந்தார். தந்தை ஜோர்ஜ் சட்டமன்றத்தில் பணியாற்றினார். குடிபோதைக்கு அடிமையான அவர் பணியிலிருந்து சுய விருப்பில் ஓய்வு பெற்று தானிய வியாபாரியாக மாறினார். அவர் அயர்லாந்து நிலச்சுவாந்தார் ஒருவருடைய மகளை மணந்து கொண்டார். அவர்களுக்கு இரு பெண்களும் ஒரு பையனும் பிறந்தார்கள்.

தன் கணவர் பெரிய குடிகாரன் தன்னையும் பிள்ளைகளையும் காப்பாற்ற மாட்டார் என அந்த அம்மையார் கருதினார். ஏலவே தன் இரு மகள்களுடன் டப்ளினை விட்டு லண்டன் சென்று பெர்னாட்ஷா நிரந்தரமாக வசிக்கத் தொடங்கினார்.

அந்த அம்மையாருக்கு நன்றாகப் பாடக்கூடிய குரல் வளம் இருந்ததால் இசைக் கலை மூலம் அந்த அம்மையார் வாழ்க்கையை ஓட்டினார்.

*(தொடரும்)*

# நாடகம் எழுதுவது எப்படி...?

ஏன் எழுதுகின்றேன்.

நாடக வகைகள் நூற்றுக்கணக்கின. அவற்றில் சமகால வாழ்க்கையைத் திறம்படச் சித்திரிக்கின்ற நவீன நாடகமே சிறந்தது. தமிழ் மொழியில் அந்த நாடகத்தை யதார்த்த நாடகம், இயல்பு நாடகம், மண்வாசனை நாடகம், என்று பல பெயர்களால் அழைப்பர். இலங்கையில் நாங்கள் அதை . இலங்கை மண்வாசனை நாடகம் என்று அழைப்போம். அந்த வகை நாடக நூல்கள் தமிழில் குறைவு. அவற்றை இலங்கையரால் மட்டுமே எழுத முடியும். எனவே அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவே இந்தக் கட்டுரையை எழுதுகின்றேன்.

பாடசாலை தமிழ்த் தினப் போட்டிகள் சம்பந்தமாக எங்கள் கல்வித் திணைக்களம் ஒரு மேலதிக சுற்று நிருபத்தை 2011 ஆம் ஆண்டு எல்லா பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்தது. அதில் மாணவர்களை சமூக நாடகங்களை நடிக்கும்படி கேட்டிருக்கிறது. குறுநாடக எழுத்தாக்கப் போட்டியிலும் சமூகத்தை மையப்படுத்திய விடயங்களை வைத்தே குறுநாடகங்கள் எழுதப்பட வேண்டும் என்று பணித்திருக்கிறது. 2011 ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டிகளில் எல்லா பாடசாலைகளும் பங்கு பற்றிச் சமூக நாடகங்களை நடித்தன. அந்தச் சுற்று நிருபத்திற்கு அமைவாகவே மாணவர்கள் குறு நாடகங்களை எழுதியிருப்பர். எனக்கு 78 வயது. 515 நவீன நாடகங்களும் "நாடகம் எழுதுவது எப்படி?" "வானொலி நாடகம் எழுதுவது எப்படி?" என்ற நூல்கள் உட்பட பல நாடக நூல்களும் எழுதிய நான் மாணவர்களுக்கு உதவ வேண்டாமோ? எனது அறிவும் அனுபவமும் என்னோடு அழிந்து போகாமல் எல்லோருக்கும் நிரந்தரமாகக் கிடைக்கச் செய்யவே இந்தக் கட்டுரையை எழுதுகின்றேன்.

நாடகம், ஒரு திட்டத்துக்கமைய எழுதப்படுவது

நாவலையும் சிறுகதையையும் போன்றதன்று நாடகம். அது ரசிகர்கள் முன்னிலையில் நடிக்கப்படுவது. அல்லது தொலைக்காட்சியிலும் வானொலியிலும் அந்தந்த ஊடகங்களுக்கு அமை வாக நடிக்கப்படுவது. நாவலைப் போல் நாடகத்தை நினைத்தபடி நீட்டிக் கொண்டு போக முடியாது. அப்படி வள வளா என்று இழுத்துக் கொண்டு போனால், ரசிகர்களுக்கு அலுப்படிக்கும். சிலர் எழுந்து ஓடி விடவும் கூடும். அது ரி.வி, வானொலி நாடகமானால் அவற்றை ரசிகர்கள் நிறுத்தி விடுவர். நாடகம் குறிப்பிட்ட நேரத்தில் நடித்து முடிக்கப்பட வேண்டும். அவ்வளவு நேரமும் அது ரசிகர்களது கவனத்தை தன்பால் ஈர்த்து வைத்திருக்க வேண்டும்.

எனவே நாடகத்தை கவர்ச்சிகரமாக நடத்துவதற்காக ஒரு திட்டம் அமைத்து வைத்திருக்கின்றனர் நாடகத்துறை அறிஞர்கள். அத்திட்டத்தின் படி நாடகத்தை எழுதினால் அது விரைவாகவும் விறுவிறுப்பாகவும் ஓடி, ரசிகர்களது கவனத்தையும் தன்பால் ஈர்த்து வைத்திருக்கும். திட்டம் வருமாறு.

தோற்றுவாய்

நாடகத்தின் முதலாவது கட்டம் தோற்றுவாய் ஆகும். இதை அறிமுகம், புலப்படுத்துதல், தொடக்க நிலை என்றும் அழைக்கலாம். இந்த இடத்தில் நாடகத்தின் முக்கியமான பாத்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டு, அவற்றிற்கு முன்பு என்ன நடந்தது, இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பவை விளக்கப்படும். சரியான தேவை இருந்தாலன்றி முக்கியமான பாத்திரங்களை நாடகத்தில் இடை நடுவிலோ, இறுதிக்கட்டத்திலோ புகுத்தக்கூடாது. ஐந்து அங்கங்களைக் கொண்ட பெரிய நாடகங்களில் இந்த அறிமுகம் சில காட்சிகளுக்கு நீளும். சிறிய நாடகங்களில் அவை விரைவாக அறிமுகம் செய்யப்படும்.

முரண்

நாடகத்தில் ஒரு முக்கியமான அம்சம் 'முரண்'. இதை மோதல் பிரச்சினை, கரைச்சல், சிக்கல் என்று தமிழில் அமைக்கின்றனர். மோதல் இல்லையேல் நாடகமே இல்லை என்கின்றனர். நாடக விமர்சகர்கள். இரண்டு பாத்திரங்கள் கைகளால் மோதிக் கொள்வது மட்டும் மோதல் இல்லை. அது உடலளவிலும் நிகழலாம். மனதளவிலும் நிகழலாம். சூடான விவாதமும் மோதலே. வெவ்வேறு கொள்கைகள் லட்சியங்கள் குணாதிசயங்களைக் கொண்ட பாத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று எதிர்த்து நிற்பது எல்லாம் மோதலே.

பெரிய நாடகங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட முரண்களும் இடம்பெறும். சிறிய நாடகங்களில் ஒரு முரணே போதுமானது. மோதல் அந்த நாடகத்தின் கதையை வேகமாகவும் விறுவிறுப்பாகவும் வளர்த்துச் செல்ல உதவும். ஒரு பாத்திரத்திற்கும் இன்னொரு பாத்திரத்திற்கும் இடையில், பாத்திரத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையில், பாத்திரத்திற்கும் இயற்கைக்கும் இடையில், பாத்திரத்திற்கும் இடையில் அரசாங்கத்துக்கும் இடையில் பாத்திரங்களுக்கும் கடவுளுக்குமிடையில் கூட முரண் அமைந்திருக்கும். அநேகமான முரண்கள் வெளிப்படையாக எடுத்துக் காட்டப்படும். சில குறிப்பாக உணர்த்தப்பட்டிருக்கும். அதை அறிந்து கொள்வது வாசகர்களது, பார்வையாளர்களது புத்திசாதுரியத்தைப் பொறுத்தது.

ந.சுந்தரம்பிள்ளை

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
ஒய்வின்றி பல வேலைகளைச் செய்யலாம். எதிர் பாராத தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். வீடு, வீட்டு உப யோகப் பொருள்கள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். சிலர் உங்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற் றாமல் தவிக்க விடலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வருவது தள்ளிப் போகும். வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

**இடபம்:**
பொறுப்பு, சகிப்புத்தன்மையுடன் நடந்து சாதனை படைப்பீர்கள். உறவினர்கள், உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். அரசியல்வாதிகள் நீண்ட தூரப் பய ணங்கள் செல்லலாம். விருந்து, விசேடங்களால் மகிழ்ச்சி சந்தோஷம் உண்டு. பிள்ளைகளின் செயற்பாடுகளை மற்றவர்களிடம் சொல்லிப் பெருமை அடைவீர்கள். இனிய அனுபவம் பெறலாம்.

**மிதுனம்:**
குடும்பத்தினரின் மனம் கோணாமல் நடந்து பாராட் டுக்கள் பெறுவீர்கள். உடன் பிறப்புக்கள், சக ஊழி யர் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர் கள். தேக ஆரோக்கியம் சீராகும். எதிர்பார்த்த பண வரவு ஒன்று கிடைக்கலாம். மனதில் பட்டதை வெளிப்படை யாகப் பேசுவீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கலாம்.

**கடகம்:**
கணவன், மனைவி இடையே மனஸ்தாபம் ஏற்படலாம். பெண்கள் வீட்டுச் செலவுகளைக் குறைக்க வேண் டும். நண்பர் அல்லது உறவினர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். மாற்று மதத்தினர் தொடர் பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். சிறிய விடயத்துக்கு, சிலரிடம் பெரிய அளவில் கோபப்படுவீர்கள்.

**சிங்கம்:**
சொந்த பந்தங்கள் வழியில் மனதுக்கு இனிய உதவிகள் கிடைக்கும். சொல்வாக்கைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள். தாய் வழியில் அன்புத் தொல்லை களைச் சந்திக்கலாம். பல நாள்களாக பார்க்காமல் இருந்த நண்பர் ஒருவரைத் திடீரெனப் பார்க்கலாம். ஆதாயமில்லாத விவகாரம் ஒன்றில் தலையிட நேரிடலாம். தாழ்வு மனப்பான்மை அதிகரிக்கும்.

**கன்னி:**
தன்னம்பிக்கையுடனும், தந்திரமாகவும் செயற் படும்நாள். கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். எந்த வேலையையும் அக்கறையோடு செய்து முடிப்பீர்கள். பெண்கள், மகிழ்ச்சி சந் தோஷமாகக் காணப்படுவர். குடும்பத்தில் நிம்மதி குடி கொள்ளும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். கலகலப்பா கப் பேசி மற்றவர்களை மகிழ்விப்பீர்கள்.

**துலாம்:**
நல்லவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். உடல் ஆரோக் கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். தந்தை வழி உறவுகளால் அனுகூலம் உண்டு. ஆரம்பித்த வேலை ஒன்றை முடிக்காமல் இடையில் விட்டுவிட நேரிடலாம். அயலார் விவகாரங்களில் மூக்கை நுழைக்கலாம். நீங்கள் செய்வதே சரியென சிலரிடம் பிடிவாதம் செய்வீர்கள்.

**விருச்சிகம்:**
நினைத்த காரியங்களைச் சாதிப்பீர்கள். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. வியாபாரிகள் ஆதாயமான பணவரவுகளைப் பெறலாம். மூத்த சகோதரர்கள் வழியில் சிறு தொல்லைகளுக்கு ஆள்படலாம். சுபகாரிய விடயங்களில் முன் னேற்றம் உண்டு. கோபம், வேகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**தனுசு:**
செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டியநாள். யாரையும் பரிகாசம் செய்து பேச வேண்டாம். குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பய ணங்களின்போது பொருள்களின் மீது கவனம் அவசியம். நண் பர் ஒருவர் நீங்கள் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லா மல் கையை விரிக்கலாம்.

**மகரம்:**
மனதில் உற்சாகம், தெம்பு அதிகரிக்கும். எதிர்காலத் திட்டம் ஒன்றுக்கு நண்பர்கள் நல்ல யோசனை சொல்லலாம். உதிரி வருமானம் பெறலாம். உங்க ளுக்குப் பிடித்தமான பொருள் ஒன்றை சிலர் கொடுக் கலாம். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினா லும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். தொழில் ஆதாயம் அதிகரிக்கும்.

**கும்பம்:**
பிள்ளைகள், பெற்றோர் வழியில் உருவான மனஸ் தாபம் மாறி பாசம், நேசம் அதிகரிக்கும். கடனாகக் கொடுத்த பணத்தைக் கேட்டு வாங்குவீர்கள். நீண்டநாள்களாக மனதைக் குடைந்து கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். நீண்ட நாள்களாக உங்களின் விட்டுக்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். அரசு காரியங்கள் அனுகூலமாகும்.

**மீனம்:**
சவால்களைச் சந்திக்கும் நாள். நீங்கள் கூறும் யோசனைகளுக்கு மற்றவர்கள் மத்தியில் மதிப்பு இருக்கும். உறவினர்கள் தொடர்பான விடயங்களால் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். குடும்ப விடயங்களை மற்ற வர்களிடம் விவாதிக்க வேண்டாம். சிறிய செலவுக்கு யோசித்த நீங்கள் ஒரு காரியத்துக்கு பெரிய அளவில் செலவு செய்ய நேரிடலாம்.

# புத்தகசாலை

## மனநிறைவாக வாழ்வோம்




வாழ்க்கையில் பல பிரச்சினைகளுக்கு மனிதன் முகம் கொடுக்க வேண்டிவரும். அந்தப் பிரச்சினைகளில் இருந்து மனிதன் இலகுவாக தப்பித்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் வாழ்வில் மனிதன் பல தடைகளைத் தாண்டி முன்னேற முடியும்.

சமூகத்தில் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அதில் இருந்து மக்களை மீட்டெடுப்பது சம்பந்தமான பல கருத்துக்களை உள்ளடக்கி நிறைவாக வாழ்வோம் எனும் நூல் வெளிவந்திருக்கின்றது. போர் இடம்பெற்ற நிலம் இது. இந்தப் போரில் பல பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இவர்களின் மனவளத்தையும், உடல் வளத்தையும் ஒருசேர வளம் படுத்தவல்ல வழிகாட்டல்கள் நிறைந்து இந்த நூல் காணப்படுகிறது. பல உண்மைச் சம்பவங்களும் இந்த நூலில் பதிவாகியுள்ளது. இதனால் இந்த நூலைப் படிப்பவர்கள் தம்மைத் தாமே சுய மதிப்பீடு செய்து, தம் நிலையிலிருந்து மேல் எழும்புவதற்குரிய வழிகளையும் காணமுடிகிறது. உடல் நலம் உடையவர்கள் கூட ஆன்மிகத்தில் உயர்வடைவதற்கு ஏதுவாக மனம் குவிக்கக் கற்றுக் கொள்வோம். யோக முறையில் சுவாசித்தல் ஒளித் தியானம் தியானம், செய்யக் கற்றுக் கொள்வோம் எனும் பகுதிகள் பயன் உள்ளதாக இருக்கிறது.

மேலும் குடும்ப அன்யோன்ய உறவு, உற்றார், உறவினர், நண்பர்களின் ஒத்தாசை உதவி போன்ற அரிய விடயங்களை நூலாசிரியர் தமது நீண்டகால ஆற்றுப்படுத்தல் வழிகாட்டல், வாழ்வியல் அனுபவங்களையும் சேர்த்துக் கூறி நூலை மெருகேற்றியுள்ளார். சில வழிகளை உணர்த்தும் வகையில் பல அரிய விடையங்களைத் தன்னகத்தே தாங்கி வரும் இந்நூல் இக்காலத்தின் தேவையாகும்.

எமது நாட்டில் மக்கள் இழப்பு, பிரிவு, தனிமை போன்ற காரணங்களினால் பாதிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனை உரிய முறையில் கையாளாதபோது தொடர்ந்து வாழ்க்கையை முன்னெடுப்பது கஷ்டமான ஒன்றாகி போய்விட்டது.

எனவே இவற்றுக்கு ஈடு கொடுக்கும் வழி முறைகளை அறிந்து அதற்கான முயற்சிகளை மேற் கொள்ளல் இன்றியமையாதது ஆகும். இந் நூல் இதற்கு ஒரு வழியைக் காட்டி நிற்கிறது. 152 பக்கங்களில் வெளிவந்த இந்த நூலில் ஒவ்வொரு பக்கமும் வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வைப் பதிவாக்கியுள்ளது.

## திருமணப் பொருத்தம்

மனிதர்கள் தமது வாழ்வில் பாரம்பரியமாக கடைப்பிடித்துவரும் நடைமுறைகளையே பின் பற்றி வருகின்றனர். வாழ்வில் அந்த நடைமுறைகள் மனிதனை சமூகத்தில் பண்புள்ளவனாக்குகிறது. அந்த வகையில் திருமணப் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்யும் பழக்கம் இன்று வரை இருந்து கொண்டே இருக்கிறது. இந்த நூலும் திருமணப் பொருத்தம் என்னும் விடயத்தை எடுத்துக் கொண்டு நுணுக்கமாக விளக்கி அழகிய நூலாக நூலாசிரியரான கலா பூஷணம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் எழுதி வெளியிட்டுள்ளார். சோதிட சாஸ்திரம் மனிதன் கோள்களில் புறத் தூண்டுதலுக்கு எப்படி ஈடு கொடுக்கிறான் என்பதைக் கூறுகின்றது. கோள்கள் வேண்டுமென்றே மனித வாழ்வில் எதிர்ப்பையோ வெறுப் பையோ தருவதில்லை. அவை வெறும் நேர்முக எதிர்முக கதிர் இயக்கங்களைக் கொணடவையாகும். தாமாக அவை மனிதர்களுக்கு நன்மையோ, தீமையோ தருவதில்லை.




ஆனால், ஒவ்வொரு மனிதனையும் கடந்த காலத்தில் செயற்பட வைத்துள்ள காரண காரிய சம நிலைகளின் வெளிப்படையான இயக்கத்துக்கு விண்மீன்கள் ஒரு விதிமுறையான பாதையை அளித்துள்ளன என்ற யோகி யோகான்தாஜியின் விளக்கம் கோள்களின் விருப்பு வெறுப்பற்ற தன்மையை நன்கு வெளிப்படுத்தியுள்ளன.

வாழ்க்கையின் வாயில் எனப்படும் திருமணம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருப்பதால் இந்த நூலைப் படிக்கின்றபோது கண்டிப்பாக விளங்கிக் கொள்ள முடியும்.

மிகப் பழைய காலத்திலிருந்தே இந்துக்களின் வாழ்வியல் நெறிக்கு வழிகாட்டியாக விளங்குவது சோதிடம்.

பல தேவைகளை சோதிடம் நிறைவு செய்திருந்தாலும் அவற்றுள் எல்லாம் தலையாயதாக விளங்குவது திருமணப் பொருத்தமே. ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்நெறிக்குரிய வழிகாட்டியாக இது இருக்கிறது.




வருடந்தோறும் அழகிய வடிவத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் லீலா பஞ்சாங்கக் கல்ண்டர்கள் 2012 ஆம் ஆண்டிலும் அழகு குன்றாது தமிழரின் கலை பண்பாடுகளை விளக்கும் வகையில் வெளிவந்துள்ளன. கொக்குவில் பிரம்மஸ்ரீ இ.வெங்கடேசையராலும் சிரேஷ்ட புத்திரன் வெ.இரகுநாதஐயராலும் கணிக்கப் பெற்ற வாக்கிய பஞ்சாங்கக் கணிதத்துடன் அவை அச்சிடப்பட்டுள்ளன.

பெரியோரும் மாணவரும் பயன்கொள்ளும் வகையில் உயரிய கலைக் களஞ்சியமாக அவை தோற்றமளிக்கின்றன. பஞ்சாங்க சித்திரத் தினக் கலண்டராக அவை கவர்ச்சி தருகின்றன. கலண்டரில் தினத்தைச் சுட்டும் ஒவ்வொரு தாளும் அன்றைய தினத்தின் முன்னைய நாள்களின் நிகழ்வுக் காட்சிகளோடும் பல்துறை விடயப் பதிவுகளோடும் காணப்படுகின்றன.

ஒவ்வொரு தினத்தையும் சுட்டும்தாள், ஒவ்வொன்றும் கொண்டுள்ள சிறிய அளவுக்குள் பல விடயங்கள் அடக்கப்பட்டுள்ளன. விடயங்கள் பலவும் ஒவ்வொரு நாளின் முக்கியத்து வத்தையும் அந்த நாளின் ஒவ் வொருவரும் ஆற்றத் துணிய வேண்டியவை பற்றியும் சொல்கின்றன.

தினமும் நாள் காட்டும் திகதியுடன் விடு முறைகள், திருநாள்கள் என்பவற்றோடு கோயிற் திருவிழாக்கள் பெரியோர்கள், அறிஞர்கள் ஆகியோரின் நினைவு தினங்கள் என்பன குறிக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக் காட்சிகளும் அரசியலாளர்களின் படங்களுடனான விவரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. திதி நட்சத்திரத்தோடு கூடிய பஞ்சாங்கமும் திருக்குறள் வரிகளும் அன்றைய நாளை ஆராதிக்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

2012 ஆம் வருடத்திலே பயன்கொள்ள லீலா அச்சகத்தினரால் இத்தகைய சிறப்புக்களோடு தினக்கலண்டர்களும், மாதக் கலண்டர்களும் நாள் குறிப்பேடுகள் என்பனவும் வெளியிடப் பட்டுள்ளன.

வேதாரண்யன்

# நீரிழிவு நோய்ப் பயமா?



அலுவலகம் முடிந்து வீட்டுக்குப் போகும் சமயத்தில் ஒருத்தர் கடைக்குப் போய் நிறைய இனிப்பு வாங்கினார். கடைக்காரர் வீட்டில் பிள்ளைகளுக்குத் தான் வாங்கிவிட்டுப் போகிறார் போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டார். ஆனால் அவர் அந்த இடத்திலேயே அவ்வளவு இனிப்புகளை திருடன் மாதிரி சுற்றிலும் பார்த்துவிட்டு அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடிந்துவிட்டு நல்ல பிள்ளை மாதிரி நடந்து போக ஆரம்பித்தார்.

அவரின் பிரச்சினை என்ன தெரியுமா? உடம்பில் சர்க்கரை அதிகமாக இருப்பதாக வைத்தியர்கள் கூறிவிட்டார்கள். அதனால் வீட்டில் சாக்கரையை இவர் கண்ணில் காட்டுவதில்லையாம். அதனால் இவர் யார் கண்ணிலும் படாமல் இப்படிச் சாப்பிடுவதை வழக்கமாக்கிக் கொண்டார்.

இப்படிபட்டவர்களுக்கு ஓர் அறுதலான தகவல்.

நாம் சாப்பிடும் சர்க்கரைக்கும் எமது உடம்பில் உள்ள சில கோளாறுகளுக்கும் அப்படி என்னதான் சம்பந்தம் இருக்கிறது? இதைப்பற்றித்தான் சமீபத்தில் சில ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன.

ஏனென்றால் சக்கரை என்றாலே அதை விஷம் மாதிரி பார்க்கும் சில பேர் உள்ளனர்.

சின்னப் பிள்ளைகளுக்கு வயிற்றுக்குள் பூச்சி உண்டாகுவதில் இருந்து பெரியவர்களுக்கு நீரிழிவு வரும் வரைக்கும் எல்லாவற்றுக்கும் சர்க்கரைதான் காரணம் அன்று சொல்லிக் கொண்டிருக்கிறோம் ஆனால் அந்த அளவுக்குப் பயப்பட வேண்டிய அவசியம் இல்லையென ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சர்க்கரை வியாதி இருதய நோய் பித்த நீர்ப்பை நோய் இவைகள் உள்பட இன்னும் சில நோய்களுக்கும் நாம் உட்கொள்கின்ற சர்க்கரைக்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்று நினைக்கின்றோம். ஆனால் அப்படி சம்பந்தம் உண்டு என்பதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

ஒரேயொரு சம்பந்தம் உண்டு என்று சொல்ல முடியும். அது பற்சிதைவு. சர்க்கரை சாப்பிடுவதற்கும் இதற்கும் தான் சம்பந்தம் உண்டு.

சர்க்கரை என்றால் நாம் சாப்பிடும் இனிப்பு மட்டும் இல்லை. பழம், காய், கறி, பால் , தேன் இப்படி எல்லாவற்றிலும் அது இருக்கிறது.

கரெட்டில் 88 சதவீதம் சர்க்கரை, அப்பிள் கொடுக்கிற சத்தில் 95 சதவீதம் சர்க்கரை இருக்கிறது இந்தச் சர்க்கரை வித்தியாசம் எல்லாம் உடம்புக்குக் கிடையாது. இரண்டுமே உடலுக்குச் சக்தி கொடுக்கிறது. ஒரு கரண்டி சர்க்கரையில் 16 கலோரிதான சத்து இருக்கிறது. அதிகமாக சர்க்கரை சாப்பிட்டால் நீரிழிவு வந்துவிடும்.

என்பது ஒரு தப்பான அபிப்பிராயம்

அதாவது நாம் சாப்பிடும் சர்க்கரையை எமது உடம்பு திறமையாக உபயோகப்படுத்திக் கொள்ள முடியவில்லை என்று அர்த் தம்.அதனால்தான் அதிகமாக இனிப்பு கூடாது என்று கூறுகிறோம்.

ஏற்கனவே உடம்பால் முடியாத ஒன்றை மறுபடியும் அதன் தலையில் சுமத்தி அதிக வேலை கொடுக்க வேண்டாம் என்பதற்காகத்தான் அந்த விளக்கம்.

ஆகாரத்தில் அதிகமாக சர்க்கரை இருந்தால் அதனால் உடன் சர்க்கரை வியாதி வந்துவிடும் என்பதற்கு விஞ்ஞான ரீதியாக போதுமான ஆதாரம் இல்லை.

அதனால் எப்போதாவது அதிகமாக இனிப்பிட்டால் ஐயையோ அதிகமாக சாப்பிட்டு விட்டோமே என்ன செய்வது என்ற தெரியவில்லையே என்று நினைத்து மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது.

பொதுவாக எதுவுமே அதிகமாக வேண்டாம். எல்லாம் சீராக இருக்கட்டும் அதுபோதும்.

நீரிழிவு என்பது புதிதாக வரும் நோய் அல்ல. நீண்ட காலமாகவே இருக்கின்ற ஒன்றுதான். எமது முன்னோர்கள் இதை மதுமேகம் என்று சொல்வார்கள்.அதைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்களே சில வழிமுறையைச் சொல்லி வைத்திருக்கிறார்கள். பாகற்காய்,முள்ளங்கி,அறுகம்புல் இவைதான்.

இவை இரத்தத்தில் சேர்கின்ற சர்க்கரை அளவை இவை கட்டுப்படுத்தும். சிறுநீரில் காணப்படுகின்ற சர்க்கரை அளவையும் சமநிலைப்படுத்தும்.

இருவர் கடற்கரையில் உட்கார்ந்து சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருத்தர் கூறினார் இன்னொருத்தருக்குத் தெரியாமல் இனிப்பு சாப்பிடுவது எப்போதும் இடைஞ்சல்தான். நேற்றும் அப்படித்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். வீட்டுக்காரி கண்ணில் பட்டுவிட்டது. அதன்பின் ஒரே ரகளைதான் என்றார்.

எனக்குக்கூட அப்படித்தான் ஆகிவிட்டது. ஒரே ரகளை என்றார் மற்றவர். நீங்கள் சாப்பிட்டது உங்கள் வீட்டுக்காரருக்குத் தெரிந்துவிட்டதா? என்று கேட்டார் அவர். அதற்கு அவர் அப்படி இல்லை. கடைக்காரர் கண்ணில் பட்டுவிட்டது. நான் அவருக்குத் தெரியாமல் அந்த இனிப்பை அவர் கடையில் இருந்து எடுத்தேன். அவ்வளவுதான் என்றார்.

**கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## ஆனந்தபுரத்தின் அவலம்

யாழ்.நகர் இருபாலை தெற்கு, கட்டப்பிராயை அடுத்துவரும் ஒரு சிறிய கிராமம் ஆனந்தபுரம். இங்கு நீண்ட காலமாக 150 இக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இக்கிராமத்துக்குச் செல்ல வேண்டிய பிரதானமான உள்ளக வீதிகள் எல்லாம் மழை காலத்தில் வெள்ளக் காடாகவே இருக்கின்றன. இதனால் வெள்ளத்தின் ஊடாகவே பாடசாலை மாணவர்களும் சரி, வேலைக்குச் செல்பவர்களும் சரி, ஏன் நோயாளர்களும் செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் இக்கிராமத்தில் நன்னீர் வசதி இல்லாததால் சுமார் ஆயிரம் மீற்றர் தொலைவில் உள்ள ஆலயத்துக்குச் சென்றே எடுத்து வர வேண்டியுள்ளது. இது இன்று நேற்றைய பிரச்சினை இல்லை நீண்ட காலப் பிரச்சினை. முறைப்பாடு சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவித்த போதும் எப்பயனும் இல்லை. கவனிப்பாரின்றி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இக்கிராமத்துக்கு அண்மையில்தான் மிகவும் பிரபல்யம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் கூட உள்ளார் (சுமார் 500 மீற்றர் தொலைவில்). அவரது வீட்டைச் சுற்றிய வீதிகள் எல்லாம் தார் போடப்பட்டு, செப்பனிடப்பட்டுள்ளன. ஆனால் 500 மீற்றருக்கு அப்பால் இருக்கும் மக்களின் அவலம் யாருக்கும் புரியவில்லை. எப்போதுதான் ஆனந்த புரத்துக்கு ஆனந்தம் வருமோ தெரியவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் எடுப்பார்களா? யத் திருத்திக் கொடுக்க ஒழுங்கு செய்வார்களா? இம் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்குமா?

**க.நிலாமதி, யாழ்ப்பாணம்.**

## அதிகாரிகள் கவனிப்பார்களா?

மந்துவில் வடக்கில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் வீதி கிட்டத்தட்ட 30 வருடங்களாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது கிட்டத்தட்ட ஒரு கிலோ மீற்றர் நீளமானது இவ்வீதி. எமது கிராமத்துக்கு நிகர்ப் நிறுவன உதவியுடன் வீடுகள் கட்டப்பட்டன. வடக்கின் வசந்தம் மூலம் மின்சாரம் 3 மாதங்களுக்கு முன்னர் கிடைக்கப் பெற்றது. ஆனால் இவ்வீதியானது புனரமைக்கப்படும் என கடந்த 2 வருடங்களாக மக்கள் மத்தியில் பேசப்பட்டாலும் கூட, இது தொடர்பான எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எமது கிராம மக்கள் மிகவும் வறியவர்கள். விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டவர்கள். பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலானவர்கள் நடந்தே செல்கின்றனர். இதனால் சேறும் சகதியுமாகக் காணப்படும் இந்த வீதியால் அவர்களின் ஆடைகள் அசுத்தமாக்குகின்றது. இந்தக் கிராமத்துக்கு இதனை விட மாற்று வீதி இல்லாததால் மக்கள் பெருஞ்சிரமத்துக்கு மத்தியிலும் இவ்வீதியையே பயன்படுத்துகின்றனர்.

'என்றிப்', 'நேல்சிப்' போன்ற நிறுவனங்கள் பல்வேறுபட்ட வீதிகளைத் திருத்துவதாக நாளாந்தம் பத்திரிகைகளில் படிக்கின்றோம். இவ்வீதியையும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு திருத்துவதற் குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்தக் கிராமமக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மந்துவில் வாசி.**

## வேட்டைத் திருவிழாவில் சுவாமி சூரத் தாண்டவம் ஆடலாமா?

சைவ ஆலயத் திருவிழாக்களில் வேட்டைத்திருவிழா என்பது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இத் திருவிழாவின் போது குறிப்பிட்ட ஆலயத்திலிருந்து சுவாமி வேட்டையாடியவாறு திருவிழா நடைபெறும்.

வேடுவர் போன்று பக்தர்கள் சில வேடமளித்து வேட்டையாடியவாறு செல்வார்கள். இந்த நிகழ்வில் சுவாமியை சூரன்போன்று அங்குமிங்கும் ஆட்டி எறிந்து ஏந்தி விளையாடுவது தவறு என்று அனுபவமிக்க சில பெரியார்கள் கூறுகிறார்கள். ஆட்டத்தான் வேண்டும் என்று சில இளைஞர்கள் அடம் பிடிக்கிறார்கள்.

இந்தச் சர்ச்சை காரணமாக வடமராட்சியில் ஓர் ஆலயப் பூசகர் அண்மையில் நிர்வாகத்தினரால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். சூரசங்காரத்தில் கூட முருகன் அசையாது நின்றுதான் போர் புரிகின்றான். சூரன் தான் தாண்டவமாடுகிறான். அப்படியிருக்க ஒரு சாதாரண வேட்டைத் திருவிழாவில் சுவாமியை இஷ்டம் போல பக்தர்கள் ஆட்டிப்படைப்பது தவறு என்பது பூசகரின் வாதம்.

பக்தர்கள் ஆடலாம், அசையலாம் அது வேறு விடயம். வேட்டைத் திருவிழாவில் எதிர்த் தரப்பில் எதிரி இல்லாதபடியால் சுவாமி அகோரத் தாண்டவம் ஆடவேண்டிய அவசியமில்லை என்பது பகுத்தறிவுள்ள அனைவராலும் புரிந்து கொள்ளக்கூடியதொன்று. எனவே ஒரு சாதாரண விடயத்துக்காக பரம்பரைப் பூசகர் ஒருவரை விரட்டியடிப்பது நியாயமா?

வாய்பேசாத விக்கிரகங்களுக்கான பிரதிநிதிகளே பூசகர்கள் . அவர்களை மனிதர்களாகவன்றி இறை தூதர்களாகவே நாம் கருத வேண்டும். அவர்கள் கூறுவதை வேதவாக்காக ஏற்று கீழ்ப்படிய வேண்டும். அப்படியில்லாவிட்டால் சைவர்களாக் இருப்பதில் என்ன அர்த்தம்.

அனைத்தும் சுத்த 'சைவர்கள்'தான். மேலும் இவ்வாறன சிறு அற்ப சர்ச்சைகளினால் சைவ சமயத்தின் நம்பகத்தன்மை நாளுக்குநாள் தேய் வடைந்து கொண்டு வருகிறது.

எதற்கெடுத்தாலும் சந்தேகம். இதுவா அதுவா! இப்படிச் செய்யலாமா அப்பிடிச் செய்யலாமா! இதுபோன்ற சந்தேகங்களால் சைவ சமயத்தின் நம்பகத்தன்மை கேள் விக்குறியாகி வருகிறது. இதனால்தான் மேல்நாட்டவர்கள் இந்து மதத்தை ''பிசாசுகளின் மதம் என்று அன்று கூறினார்களோ?

இந்தச் சந்தேகம் பழக்கதோஷம். சைவர்களின் ஆலயக் கிரியைகளிலிருந்து அந்திமக்கிரியைகள்வரை தொடர்கிறது. கொள்ளிச் சட்டி இடப்பக்கமாகவா வலப்பக்கமாகவா சுற்றுவது என்பது இன்றும் சர்ச்சைதான். இவ்வாறு தொட்டிலிலிருந்து சுடுகாடு வரை சைவம் சந்தேகங்களையும் சர்ச்சைகளையுமே வளர்த்து வந்துள்ளது.

**யாழ். வதிரிவாசன்**

## பொது நூலகத்தை புனரமைப்பார்களா?

நூல் நிலையமாக இருந்தாலும் பத்திரிகை நிலையமாக இருந்தாலும் அதனைப் பயன்படுத்துவோர் ஆரோக்கியமான அமைதியான சூழலையே விரும்புவார்கள். வலி.மேற்குப் பிரதேச சபையின் பொது நூலகம் அமைதியாக காணப்படுகின்றது.


ஆனால் ஆரோக்கியமாக காணப்படவில்லை. காரணம் மழை நாள்களில் இதன் கட்டடத் தொகுதியின் முழு இடமும் மழை நீரினால் பாதிக்கப்படுகின்றது. மழை நேரங்களில் வாசகர் ஆகிய நாம் குடை பிடித்துப் படிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் தள்ளப்பட்டுள்ளோம். இது தொடர்பாக நூலகப் பொறுப்பதிகாரியிடம் பல முறை புகார் செய்தோம். அவரால் என்ன செய்ய முடியும். மேலிடத்தில் தெரிவித்தார். அவ்வளவுதான்.

அதனை வலி.மேற்கு தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் பார்வையிட்டுச் சென்றார். எனினும் இதுவரையில் தீர்வுகள் முன்வைக்கப் படவில்லை. இந்த மழைநீர் ஒழுக்கில் இருந்து பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை வலி.மேற்கு பிரதேச சபை எடுக்குமென நாம் நம்புகிறோம்.

இந்த நூலகத்தை உரிய காலத்தில் புனரமைத்து ஆரோக்கியமான சூழலினை வாசகர் ஆகிய எமக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று வலி.மேற்குப் பிரதேச சபை தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**கே.எம்.வித்தகன்**

# மக்கள் திலகத்துடன் ஒரு நிமிடம்



## மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 24 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று

**புரட்சித் தலைவரின் வாழ்க்கை வரலாறு**

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். எம் மண்ணில் எமக்காகப் பிறந்தது: 1917-01-17 கண்டி-இலங்கை.

பெற்றோர்கள்: தந்தை மருதூர் கோபாலமேனன் (வழக்கறிஞர், நீதிபதி)

**தாய்:** அன்னை சத்தியபாமா

**சகோதரர்கள்:** இரண்டு சகோதரி, இரண்டு சகோதரன், மக்கள் திலகம் 05 ஆவது கடைசிப் பிள்ளை

**மறைந்தவர்கள்:** இரண்டு சகோதரி, ஒரு சகோதரன் தந்தை உட்பட நான்கு பேர் 1920

**தமிழ் நாடு வருகை:** 1921 இல் அன்னை சத்தியபாமா அண்ணன் திரு.சக்கரபாணி

**குடியேறிய இடம்:** கும்பகோணம்

**ப்டித்தபள்ளி:** ஆணையடி

பயின்றகல்வி: 03ஆம் வகுப்பு

முதல் நாடகம்: மகாபாரதம் 1924 ஏற்றவேடம் நத்திரன், சம்பளம் 05 ரூபாய்

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் நாடக கம்பனி: உரிமையாளர் எம்.எஸ்.சச்சிதானந்த பிள்ளை

நடித்த தேசபக்தி நாடகங்கள்: கதர்பக்தி, கதிரின் வெற்றி, பதிபக்தி, தேசியக்கொடி, தேசபக்தி

பணியாற்றிய நாடக கம்பனிகள்: கிருஸ்ணன் நாடகக் கம்பனி, யுரைதூர் முகைதீன் நாடகக் கம்பனி, மதுரை ஒரிஜினல் பாய்ஸ் நாடகக் கம்பனி

**கவர்ந்த தலைவர்:** நேதாஜி, காந்திஜி

**கவர்ந்தது:** கதாராடை, தீண்டாமை, ஒழிப்பு, மதுவிலக்கு சுதந்திர கொள்கை

பின்பற்றியவை: கதாராடை அணிவது, கொள்கைகளை நேசிப்பது

**சென்னை வருகை:** 1932 சென்னை கவுனி அம்பாள் வீதி வாடகை வீடு

திரையுலகம் அறிமுகம் செய்தவர்: திரு கந்தசாமி முதலியார்

**முதல் திரைக்காவியம்:** சதிலீலாவதி(100 ரூபாய் சம்பளம்)

**முதல் திருமணம்:** 1941இல் திருமதி தங்கமணி என்ற பார்க்கவியை மணந் தார். மனைவி மரணம்- 1942 இல் தங்கமணி மாரடைப்பால் மரணமடைந்தார்.

02 ஆவது திருமணம் 1944 இல் திருமதி சதானந்தவதியை திருமணம் செய்தார்

**முதல் கதாநாயகன்:** 1947 இல் இராஜகுமாரி

அறிமுகம் செய்த நிறுவனம் ஜுபிடர் பிக்சர்ஸ்.

**தாய் மரணம்:** 1952 இல் அன்னை சத்தியபாமா அவர்கள் மறைந்தார். 02ஆவது மனைவி மரணம் - 1945 ஆம் ஆண்டு முதல் 1961 வரை காசநோயால் பாதிக்கப்பட்ட திருமதி சதானந்தவதி அவர்கள் 16 ஆண்டுகள் கழித்து மரணமடைந்தார்.

03 ஆவது மனைவி: வி.என்.ஜானகி அவர்களை 14.06.1962 இல் மணந்தார்.

அண்ணாவின் தி.மு.க: டி.வி . நாராயண சாமி மூலம் நட்புறவு ஏற்பட்டு 1953 இல் தி.மு.கவில் இணைந்தார்.

சொந்த நாடக கம்பனி: எம்.ஜி.ஆர். நாடக மன்றம். 1952 இல் திருப்பு முனை செய்த

**திரைக்காவியங்கள்:** நாடோடி மன்னன், திருடாதே, மர்மயோகி, மலைக்கள்ளன்.

மேல்சபை உறுப்பினர்: 1962 முதல் 1964 வரை இரண்டு வருடங்கள்.

சட்டமன்ற உறுப்பினர்: 1967 முதல் 1987 வரை (21 வருடங்கள்)

**புதிய இயக்கம்:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 17.10.1972

**முதல்வர் பதவி:** 03 முறை 1977 முதல் 1987 வரை (11 வருடங்கள்)

திரைப்படங்கள் 1936 முதல் 1946 வரை சிறிய கதாபாத்திரங்கள் 20 திரைப்படங்கள் கலர்படங்கள் மொத்தம் 40. அலி பாபாவும் 4 0 திருடர்களும் முதல் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் வரை கதாநாயகன் 1947 முதல் 1978 வரை இராஜகுமாரி முதல் மதுரை மீ.சு.பாண்டியன் வரை

**மரணத்தை வென்ற மக்கள் திலகம்**

01.1959 இல் சீர்காழி அட்வக்கேட் அமரர் நாடகத்தின் போது காலில் முறிவு ஏற்பட்டது.

02.1967 இல் நடிகர் எம்.ஆர் இராதா அவர்களால் துப்பாக்கியால் சுடப்பட்டார்

03.1984 இல் உடல் நலமின்றி அமெரிக்காவில் சிகிச்சை பெற்றார்

மொழிமாற்றம் செய்யப்பட்ட திரைப்படங்கள் தெலுங்கு 62, இந்தி 06 மலையாளம் 02

மொத்த திரைப்படம்-136

தி.மு.காவில் புரட்சி நடிகர் 1953முதல் 1972 ஒக்ரோபர் வரை (19 வருடங்கள்)

**தொகுப்பு:**
**வ.இ.செல்வக்குமார்,**
பண்டத்தரிப்பு.

நாடகத்துறையில் தொடர்ந்து 1924 முதல் 1963 வரை 40 வருடங்கள்.

திரையுலகில் பொன்மனச்செம்மல் 1936 முதல் 1978வரை 42 வருடங்கள்

அரசியல் வானில் புரட்சித்தலைவர் 1932 முதல் 1987 வரை 55 வருடங்கள்

ஈழத்தமிழர் இதயங்களில் 1917 முதல் 2011வரை 94 வருடங்கள்

மக்கள் மனங்களில் 24.12.1987 ஆங்கில வருடத்தில் முதல் ஜனவரி மாதம் பிறப்பு. மக்கள் திலகம் கடைசி வாழ்க்கை இறுதி மாதம் மார்கழியில் இறப்பு இதுவும் ஒரு சாதனைதான். தமிழ் மாதத்தில் தைபிறந்தால் நல்வழி பிறப்பது போல் சாதனை தமிழ் மாதத்தில் பிறந்தால்,மார்கழியில் இறந்தால் மோட்சம் என்பதற்கு மார்கழி மாதத்து பூவாக மறைந்தார் மக்கள் மனங்களில் என்றும் நிறைந்தார்.

**எம்.ஜி.ஆர். ஓர் உலக அதிசயம்**

சிறந்த நாடக மேடை நடிகர்

எம்.ஜி. ஆர். நாடக மன்ற தயாரிப்பாளர்.

உலகின் முதல் சிறந்த இயற்கை நடிகர்.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிர்வாகி

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவர்.

சத்தியா ஸ்ரூடியோவின் நிர்வாகி.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் செனட் உறுப்பினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர்

திரைப்பட உலகின் மிகச் சிறந்த டெக்னிசியன்

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்

30 ஆண்டு கால தமிழ்ப்பட உலகின் வசூல் சக்கரவர்த்தி. 1947 முதல் 1977 வரை

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவுநர்.

நடிகராக இருந்து ஆட்சி பிடித்த முதல் உலக நடிகர்.

ஈழத் தமிழருக்காக உலகின் முதல் உரிமைக்குரல் கொடுத்த முதல்வர்.

திராவிட பராம்பரியத்தின் பல முதல்வர்களை உருவாக்கிய முதல்வர்.

சிறந்த கதாசிரியர், சுயசரிதை எழுதியவர் (நாள் ஏன் பிறந்தேன்).

அண்ணா நாளிதழின் நிறுவுனர்

சமநீதி செய்தித்தாளின் ஆசிரியர்

பல கலைஞர்களை அறிமுகப்படுத்திய முதல்வர்.

நடிகன் குரல் செய்தித்தாளின் ஆசிரியர்

02 ஆம் உலக தமிழ் மகாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர்.

ஔவை இல்லத்தின் அறங்காவலர்

வெள்ளியானை விருது பெற்ற தென்னிந்திய முதல்வர்.

இரண்டு பொதுத்தேர்தலில் அதிக வாக்குகள் பெற்ற முதல்வேட்பாளர் (1967 - 1979).

03 முறை தொடர்ந்து முதல்வராகிய முதல்வர்.

சட்ட மன்ற மேலவை உறுப்பினர்.

சட்ட மன்ற உறுப்பினர் 05 முறை.

**எம்.ஜி.ஆரின் எளிமையான வாழ்க்கை**

காலை உதயத்தின் தாயின் உபசரிப்பு.

உடலின் வலிமைக்கு நித்தம் ஒரு உடற்பயிற்சி.

தியான உணர்வில் தினமும் ஒரு தியானம்.

காலை நேரப்பொழுது குளியலின் ஒரு புத்துணர்ச்சி.

ஈர ஆடையுடன் தாயின் பிரார்த்தனையும் கடவுள் நம்பிக்கையும்.

காலை தேநீர், பழைய சாதத்தின் நீராகாரம் பருகுதல்.

காலை நேரத்து உணவு யாராவது ஒருவருடன் சாப்பிடுதல்.

அறிவு நூல்களை படிப்பதற்கு வீட்டில் ஒரு நூலகம்.

தண்ணீரில் தியானம் செய்வதற்கு நீச்சல் குளம்.

வந்தவர்களை அன்புடன் வரவேற்று வாயாற உணவளித்தல்.

முக்கிய பிரச்சினைகளை எடுத்துக்கூற அண்ணாவின் புனித அறை.

வெளியே செல்லும் போது தாயை வணங்க தாய்க்கு ஒரு கோயில்.

கடமை உணர்வோடு காவல்புரியும் காவலர்களுக்கு ஒரு வீடு.

தமிழர் திருநாளாகிய பொங்கல் பண்டிகைக்கு வரும் மக்களுக்கு உணவளிக்க ஒரு இடம்.

செய்தித்தாள், நண்பர்கள் பேட்டி, புகைப்படம் எடுக்க வசதியான இடம்.

தன்னை காணவரும் மக்களுக்கு பணிவிடைசெய்ய, மனுக்களை ஏற்றுக்கொள்ள தன் வீட்டில் தனி வசதி.



**புரட்சித் தலைவருக்குப் பிடித்தது**

கொடுப்பதில் சலிப்படையாதவர்.

கொள்கை வழி பின்பற்றுபவர்.

எதிரிகளை நண்பனாக நினைப்பவர்.

நம்பினவர்களை வாழ வைக்கும் நல்லெண்ணம்.

பெற்ற தாயை தெய்வமாக பூசிப்பவர்.

சங்க இலக்கிய நூல்களை விரும்பிப் படிப்பவர்.

பிறர் குற்றம் பொறுப்பது, திறமையானவர்களை பாராட்டும் தன்மை.